போரமகிழ்ந் தெம்மனைக்குப் புகவேண்டு மென்றுமிகப் புகழ்ந்து கொண்டு (சு)

வந்தாறு சுவைச்சோறுண் பித்துப்பின் றுயில்வதிய விரண்டு பேரும்
சிந்தாகு லந்தீரச் சித்தோபண் டிதர்கனவிற் பாண்டு ரங்கன்
நந்தாத பிரமசரிக் குன்மகளை மணஞ்செய்து நல்கு கென்ன
மூந்தாத ரத்துடனே யன்னவருக் கதுதெரிய மொழிந்தார் கேட்டு. (எ)

பிரமசரி யெனக்கந்தப் பாண்டுரங்க னிவ்விதத்தைப் பேசொ ணாதோ
திரமுறவெ னச்சித்தோ பண்டிதரின் றிங்கிருத்தல் செய்கவென்னத்
தரமிகுபண் டரிநாத னன்றிரவில் விடோபாத்தன் கனவிற் சார்ந்து
நிரவுறவே மணத்தியவள் வயிற்றிடையோர் நால்வர்நல்லோர் நேர்வா ரென்று.

சொன்னதுகேட் டுடன்விழித்துச் சித்தோபண் டிதருக்குத் தோன்றச் சொல்ல
நன்னரவர் புரோகிதரை யழைத்துநல்ல முகூர்த்தம்வைத்து மகளை நல்கிப்
பின்னரொரு நான்குநாள் கழித்தபின்பு சித்தோபண் டிதரைப் பேணித்
துன்னுமிது கடகமதி யாதலாற் பண்டரிபோய்த் தொழுதல் வேண்டும். (கூ)

என்றுசொல்ல நின்மனைவி யுடன்செல்க வெனமாம னியம்பக் கூட்டி
நன்றுமதி பாகாவில் வந்தாடிப் பண்டரிவாழ் நாதன் கோயிற்
சென்றுவலஞ் செய்துகரு டத்தம்பஞ் சேவித்துத் திருமால் பாதம்
நின்றும்வி ழுந்துந்தொழுது நிற்கவங்குச் சித்தோபண் டிதரு நேர்ந்தார். (ட)

வந்தவரை வணங்கியான் சேதுசென்று வரவேண்டு மெனவ குக்க
மூந்துமவர் மனங்கண்டு நன்றுபோய் வருகவென மொழிந்து தாம்வாழ்
தந்தவள காபுரிபோய்ச் சார்ந்தனர்வி டோபாபண் டரிநா தன்பால்
உந்தவிடை பெற்றுஸ்ரீ சைலமல்லி காச்சுனமே முதலா மூர்கள். (டக)

பலவும்போய்க் கண்டுசே துவுமாடிப் பின்னளகா பதியை மேவி
நிலவியமா மனைவணங்கி நாலுநாள் கழிந்தபின்பு நிகழ்த்து கின்றார்
நலமிகவென் றக்தைதாய தமைக்காண வேணடும்விடை நல்கு கென்ன
இலகுசித்தோ பண்டிதர்யா னுங்காண வேண்டுமெழு கென்றெ ழுந்து. (டஉ)

தம்பதிக ளுடனுப்காம் வந்துதாய் தந்தையர்க்குத் தண்டஞ் செய்து
நம்பெருமான் விடைப்படியே மணமாயிற் றென்றுளது நலிலக்கேட்டே
இன்பமிகுந் தாபின்பு மகளைமரு மகனைவிடுத திருககு மூர்க்கு
நம்புசித்தோ பண்டிதர்சென் றார்பின்பு தாய்தநதை மரண நண்ண. (டங)

வருந்தாமல் விடோபாத்தன் குடுமபத்தில் மனமின்றி வைகலோர்ந்து
பெருந்தாழ்வு கொடுபோநதார் சித்தோபண டிதர்மருகற் கிதங்கள் பேசிப்
பொருநதாது குடும்பதகிற் பொருனுந்தே டாதிருககிற புகலில் வாழ்க்கை
திருந்தாதெம மூர்க்குவரு கென்றழைத்துக கொடுபோந்து சேர்ந்தி ருந்தார். ()

அவ்வூரி லரிபசனஞ் செய்துகொண்டு மாடிமதி யெகர்த சிக்குத்
தவ்வாதாண் டுகடோறும் விடடலனைச் சேவித்துத் தங்கு நாளில்
வெவ்வாளி யனையவிழி மனைவியைப்பாரத் தெனக்குமிக வெறுப்புச் சார்வ
திவ்வாழ்விற் காசிபோய்ச் சன்னியா சம்பெறமற் றெனக்கு வேணடும். (டசு)

நீவிடைநல் குதியென்ன நேரிழையா மறுமொழிதா னேரா தேபோய்த்
தாவில்தந்தை தனக்கோதச் சித்தோபண் டிதர்மகனைத் தானும் பார்த்து
மேவியபுத் திரனில்லார் சன்னியா சம்பெறுதல் விதியன் றென்னத்
தேவிவிடை தரரதிருக்கக் கங்கைபோய் வருதுமெனச செப்பிப் போனார். (டசு)

வலைவழுவ மான்போலத் திருவேணி சங்கம்போய் வருபிர யாகை
அலைதருபுஷ் கரதீர்த்தத் தாடிவிண்டு பத்தர்சொல்லும் புராணங் கேட்டு
நிலையில்சமு சாரந்தான் ஜனனமர ணத்தைநல்கு நெறிமற் றென்று
மலைவில்சீர் பாதர்தமைச் சற்பாவத் துடன்வணங்கி வருமெ னக்கு. (டஎ)

துறவிலிச்சை யுளவதனைத் தரல்வேண்டு மெனவவருந் துணைவி மக்கள்
உறவினருண் டோவென்ன நாளொருவ னேயென்ன வுற்ற தீவினை
பெறவருளிச் சன்னியா சத்துவைத்தார் சீபாதர் பின்வி டோபா
ஆறமிகுகா சியில்நான்கா மாச்சிரமம் பெற்றிருப்ப தறிந்து மன்னோ (டஅ

சித்தோபண் டிதர்பிள்ளை பெறுதவர்க்குத் துறவருளல் சிறந்த தன்றென்
றத்தாலே துயரடைய மனைவியுங்கேட் டுத்துன்ப மடைந்து தேறிக்
கொத்தார்பைந் துணரரச மரஞ்சூழ்தல் தினவிரதங் கொண்டு மேவி
எத்தாலுந் தடையின்றி வருநாளிற் கணவனுக்குத் துறவன் றீந்தார் (கூ)

ஒருநாளவ் வரசடியி லிருக்கவிடோ பாமனைவி யுற்றுப் போற்ற
வரநான்கு மகப்பெறுதி யெனவுதவக் குறுநகையும் மங்கை கொண்டாள்
திரமோது சிபாதர் சிரிப்பதென்னே நங்காய்நீ செப்பு கென்னத்
தரமேவு மணம்புரிந்த புருடனின்றி மகப்பெறவுந் தகுமோ வென்றாள். (உ)

உன்கணவ னெங்கேயென் றவர்கேட்கச் சமுசார வுறவு நீத்து
நன்குதுற வினராஞர் பிள்ளையான் பெறுவதெங்ங னவிலு கென்ன
மன்குருவும் பிள்ளையில்லார் துறவுபெற லோபாவம் வழங்கி னோர்க்கும்
*தன்குதெறும் பாவமே யென்றடையா ளங்கேட்டுத் தாந்தெ ரிந்து. (உக)

மிகவருந்தி நங்காயுன் றந்தைதனைக் கொணர்கவென்ன விரைந்து சென்று
தகவுரைக்க வவர்வந்து தண்டனிட ஸ்ரீபாதர் சாற்று கின்றார்
மகளையொரு வாகனத்தி லேற்றிநீ காசிநகர் வருக வென்ன
முகமலைந்து துறவினரைக் கூய்க்கொண்டுமனமகிழ்ந்துமுடுகிப் போனார். (உஉ)

போனபின்பு சிபாதர் சைதன்னிய ரென்றுபெயர் புனைந்த சீடர்
ஆனனத்தை நோக்கியுனக் கில்லாஞண் டோவிள்ளே வறைதி யென்ன
ஞானகுரு வடிவணங்கி விடோபாவுள் ளதுகூற நல்ல தென்ன
ஊனமிலா மனைவியுடன் போய்வாழ்க வூரிலென வுடனே சென்று. (உங)

கூடியபின் னூரிலுள்ளோர் துறவுகொண்டோ னில்வாழ்க்கை கொள்ள லாமோ
நாடிலிது பிழையென்று பழிகூறத் திருமாறன் ஞமங் கூறி
வீடில்விடோ பாவிருக்க வேதியரெல் லாம்விலக்கி விடவு நீங்கி
நாடிவனத் திற்குடிசை யியற்றியதி லேயிருந்தார் நாரி யோடு. (உச)

இரவுபக லிராமநா மம்புகன்று தினமுமிரந் தீரா ருண்டு
தரமருவு பாகவதங் கீதைமுத லியகேட்டுத் தங்கிப் பின்பு
திரமருவு மும்மகனு மொருபெண்ணும் பிறக்கவவ ரிற்சி றப்பு
விரவுசதா சிவஞன முன்மகற்கு நிவர்த்தியென விதித்து நாமம் (உரு)

விண்டிரண்டாம் பிள்ளைக்கு ஞானதே வென்றுபெயர் மேவச் செய்து
மண்டுமூன் றும்பிள்ளை பிரமனுக்குச் சோபான ரெனமா நாமம்
கொண்டுநான் காம்பிள்ளை மாயைக்கு முத்தாயி யெனக்கு நித்தார்
பண்டுவிடோ பாவென்று பெயர்கொண்டு துறவறத்தும் பயின்று ளோரே. ()

அவகுலத்திற் பிறந்தமக்க ளானனமும் பார்க்கலா காதென் றியாரும்
எவமுரைக்கப் பிள்ளைகளும் வளர்ந்துவர வத்யயன மிசைக்குங் காலம்
நவமடுக்க மனைவிபுரு டனைநோக்கி யுபநயன நடத்த வேண்டும்
தவமகிழ்ந் தேயென்னச் சைதன்னியர் மறையவர்க டமைவ ரித்து. (உஎ)

யாவிழைத்த பிழைபொறுத்துப் பிராய்ச்சித்த நூல்வழியே யியற்று கென்று
ஞானமிகு வேதியரை வணங்கவங்கு முதற்பிள்ளை நலோரே யுங்கள்
ஆனனங்கள் கண்டபோ தேபுனித மாயினே மாத லாலே
ஊனமற வறுவருக்கும் பிராய்ச்சித்த முஞற்றுகென வுரைத்து நிற்க. (உஅ)

---

*தன்கு—களிப்பு.

உடம்பைநீ ரூக்குவதை யன்றிவே ரொன்றுமிலை யுபாய மென்று
திடங்கொள்ளலை வேதியர்தேர்ந் துரைசெய்ய வனுதாபஞ் செறிந்து நோக்கிச்
சுடங்குசொலு மறையவரை வணங்கியே திரும்பிப்பா ராமற் சார்ந்தே
இடங்கொள்வனத் திற்புகுந்தார் தனியாகிச் சுசுதனிய ரென்ப மாதோ. (உகூ)

போனவரைக் கண்டவர்க ளனுதாபக் கனல்சுடலே போதும்வேறே
*ஆனல்சுட வேண்டுவதின் றென்றூர்க ணிவர்த்திதே வணுகி நின்று
ஞானமிகு வேதியரே யெமக்குநீர் விதிப்பதனை நவிலு கென்ன
ஊனமறை யோரேறும் மூர்க்குப்போ யுமக்குள்ள வுறவோ ராலே. (ஙஎ)

குலமுறையைத் தெரிந்தெழுதி வருகென்ன ஞானதே வரைக்கு றித்து
நலமலியு நிவர்த்திதே நமதுகுல நமக்குநன்றூய்த் தோன்றும் போது
சொலவெவரைக் கேட்கின்ற தெனச்சீவ முத்தபதந தோன்றி னுலும்
வலமருவு சுதர்மத்தை விடலாகா தெனஞான தேவ குத்தார். (ஙஅ)

சாதிதன்னு லொன்றுமில்லை பத்தியன்றி யரிபாதஞ் சார மாட்டார்
நீதிதெரிவ சிட்டர்முத லினர்பிறப்பின் வகையென்ன நினைந்து பாராகில்
தீதியலுங் குலத்தினனுய்க் கடவுளிடத் தன்புளனேற் றீங்கின் றென்னு
ஓதினநூ லில்லையோ வென்றுசோ பானரித முரைதது நின்றூர். (ஙஉ)

மறையவரங் கவர்பிறப்பின் வகையெழுதித் தந்துதணடம் வருக்கா ராக
நிறையுமறி வினர்கோதா விரிநதியி னீராடி நீங்கி யப்பாற்
குறைவறுசிர்ப் பிரமபுரங் குறுகியதில் வேதியரைக் கூட்டிவைத்துப்
பொறையுடையீ ரெனவணங்கிய பத்திரமுற் தந்துளதும் புகன்று நின்றூர். ()

அங்கவரும் பிராய்ச்சித்த மில்லையென வதிற்கில்லோ ரலர்மே லான
மங்கைபதி யிடத்தன்பு வாய்ந்துளதே லதுபோது மாறு வேண்டாம்
உங்கடமக் கெனநாங்க ளுணர்ந்தபடி யேயுரைத்தீ ருறவி ரென்னப்
பங்கமில்லாக் குணததினிரால் ஞானதே வெனப்பெயரும் படைத்து னீரே. ()

என்றுசிலர் சொல்லும்போ தங்கொருவ னீர்ப்பொதிகொ ளிக்க டாவுக்
கொன்றுபெயர் ஞானனென்றூற் பயனென்னை யெனஞான தேவுணர்ந்து
நன்றுசொன்னு யானுமது வுஞ்சரியே யெனநவில நனிமு னிந்து
துன்றுமவ னதற்றூற்ற துனக்குறுமோ வென்வைது தொடரு மென்றூர். (ஙரு)

அதுகாண்பே னெனத்தடிகொண் டெற்றினனக் கடாவதனை யநத வெற்றல்
முதுஞான தேவர்முது கிற்பட்டுத் தடித்ததனை முனைவர் நோக்கிச்
சதுர்வேத நின்னைப்போற் சாற்றுமோ கடாவென்ன ஞான தேவர்
இதுகால மேகாண்டீ ரெனவெழுந்து கடாத்தலையி லெழிற்கை வைத்து. (ஙசு)

வேதமொழி கெனவருள வியாசரைப்போ லதுநான்கு வேதஞ் சொல்ல
ஏதமிலா மறையவர்க ளெல்லாருங் கண்டுவியப் பெய்திப் பூமேற
போதன்முத லினர்புரிதற் கரியசெயல் புரிகுதலாற் பொருந்துமின்னோர்
ஓதில்நர ரல்லரவ தாரிகளே யிவர்க்கெவர்தா முஞற்றல் செய்வார். (ஙஎ)

தண்டமெனப் பொருளாலசை தங்கியநா மறையோராய்ச் சனித்த தன்றி
மண்டுநல்ல வொழுக்கமிலேம் பத்தியிலேம் பரிசுத்த மனமு மில்லேம்
கண்டவிவ ரைப்போலு மறையோரின் றிவர்தம்மைக் கருதி யீன்றோர்
அண்டுமென்ன தவத்தினரோ வெனப்புகழ விவர்களுமங் கவரை யேத்தி. ()

---

*ஆனல்—அனல்—நீட்டல்விகாரம்.

எல்லாநும் பெருமையே யெனவவ்வு ரினரெல்லா மிவரோ சால
நல்லோர்க ளரிதாச ரென்றுகொண்டா ரதுபுகன்ற நால்வ ரும்போய்
வல்லாளோர் மறையவன்ற னகத்திறங்கிப் புராணசிர வணமுஞ் செய்து
சல்லாப விலேனுதவரி பசனைவினுய்ப் பகலிரவுந் தங்கு நாளில் (கக)

மற்றிவர்தங் ககமுடைய மறையவற்றுப் பிதுர்த்திதிதான் வந்த தென்று
சுற்றுமுள மறையவரை யுணக்கூவ வவர்துறவி சுதரைக் கூட்டி
உற்றநின்பால் வருகிலோ முணற்கென்ன விறிவுரைக்க வுதனைக் கேட்டு
முற்றுமறை யோன்றிகைத்து மோனமாய் வீட்டிருந்து முன்னு கின்றான். ()

தனைநோக்கி ஞானதே வென்னேநீ சலித்திருக்கை சாற்று கென்ன
எனையீன்றோன் றிதியின்று மறையவரிங் குணவெய்தா திகழ்ந்தா ரென்ன
அனையவனை யறுசுவைப்போ னகமமைத்தி பிதிரரே யடைந்துண் பாரென்
றினையசொல வவன்மியந்து நிராடல் முதல்புரிந்தங் கியைவு செய்தான் (கக)

கதலியிலை யிடத்திலே யறுசுவைப்போ னகம்படைத்துக் கைதொட் டுண்ணப்
பிதுரரெங்கே யெனவினவ ஞானதே வக்கதையை யிலைமேற் பெய்ய
எதிர்தருமப் பிதுர்க்கடமக் கர்ந்திபபாத் தியமுதலா மெல்லாந் தந்து
சதுருடனு சனந்தந் வத்திரமு டனைத்துடன்றக் கணையுந் தந்தான். (கஉ)

ஞாபநீ பத்துடனே பிதுருருவ சனுர்த்தனவா சுதேவ மூர்த்திக்
கேபிரிய தாமென்று சொன்னவுட னமுதுசெய்தார் பிதுர்க்க ளெல்லாம்
மாபனவ னதுகண்டு வியப்புடனு னந்தமுற்றான் மற்றவ ஆர்வாழ்
பாபமில்வே தியரெல்லாந் சாளரத்து மிறப்பிடத்தும் பதுங்கிப் பார்த்தார்)

அவர்பார்க்கப் பிதுர்க்களெல்லாம் போசனஞ்செய் தானவுடன் ஞானதேவர்
பவநீத்தீ ரேகுகென மறைந்தார்க ளதுகண்ட பார்ப்பா ரெல்லாம்
நவமீதே பிதுரர்வரச் செயுந்திறத்தை நாடுங்கா னரரே யல்லர்
உவமையிலா மும்மூர்த்தி பொய்மாயை யேயிவர்க ளுண்மை யென்று (கச)

இங்கிவர்தம் மகிமையறி யாதேநாங் குலமதத்தா லிகழ்ந்தோம் வீணே
நன்கிதல வெனப்போனார் பகடுமறைக் கருத்தெவரு மறிய நாளுஞ்
சங்கையறச் சொல்வதனை ஞானதே வுணர்ந்துவியா சமுனி சாற்றுஞ்
சிங்கலிலா முறைதவறு மெனப்பகட்டை நோக்கமுன்போற் றிகழ்ந்த தன்றே.

(வேறு) தமக்கிதஞ் செய்து நின்ற சதுர்மறை யவனைப் போற்றி
எமக்கினி விடைநல் கென்ன விசைவுகொண் டவ்வூர் நீங்கி
அமைப்பரும் பெருமை பூண்ட மகாலய மென்னு மவ்வூர்
கமைப்பெருந் தவத்து நால்வர் கடுகினர் வந்து கூடி. (கரு)

பிரவரா வென்னுந் தீர்த்தம் பெரிதுவந் தாடி யங்கே
பரவுத லான போது பற்றறு ஞான தேவர்
திரமுலாங் கீதை தன்னை யாவருந் தெரிவ தாகத்
தரமுள வியாக்கி யானஞ் சமைக்கச்சோ பான தேவர். (கஎ)

யாவரு மறியப் போதித் திருந்தன ரிருக்கு நாளில்
மூவரு மிவர்க டன்மை கைனியர் வேந்தன் முன்னிப்
பாவரு நீர்சு வாறு பவத்தினை மேவ வேண்டுந்
தாவற வெனலுங் கேட்டு நால்வருந் தாளில் வீழ்ந்து. (கஅ)

நாதனே யெமக்கு நீரே ஞானசற் குருநன் றாயிப்
போதுப தேசஞ் செய்க வென்னலும் பொருந்து சீலர்
மேதகு மபதே சஞ்செய் திடவிவர் மேவிப் பின்பு
சாதுசற் குருவே சொல்லச் சமைத்தனர் ஞான தேவர் (சசு)

(வேறு) தமதுகவா னுபவமா மமிர்தானு பவமெனுஞ்சாத் திரத்தைப் பின்பு
நமவென்று மாளசா தேவியா லயத்திலரி நாமஞ சொலலிக்
கமவறிவோர் நடந்துசென்றோ ராலயத்தி னருகிறந்த கரும்ப கட்டைச்
சமமுறவே சமாதிசெய்ய மைசோபா வெனுமபெயர்தான் றங்கிற் றென்றும்.

(வேறு) முத்தா யிமொழிப் படிமுன் னிவாவாழ
அத்தா னமதா மளகா புரியைப்
பத்தா தரமோ பெயின் றனரால்
நத்தார் கரனு மநவின் றவரே (ருக)

அவ்வூ ரினர்யா வருமங் கவர்தம்
மெய்வா சகமும் புரிமே தகவும்
செவ்வே வினவிக் களிசேர்ந் தவராய்த்
தவ்வா தெதிர்வந் துதழீ இனரே (ருஉ)

தழுவுற் றிவர்தம் மினமக் குளதோம்
வழுவுற் றிடுமென் றுமகிழ்ந் துறையப்
பழுதுற் றவிசோ பனெனும் பனவன்
கெழுமுற் றிலன்வே றுகிளத் துவனே. (ருங)

துறவுற் றவனுக் கிவரோ சுதராய்
முறைதப் பினர்தம் முகமுந் துறலோ
அறமெய்ப் பிழையா லிதடா ததெனக்
குறைசொற் றனனு யிரகோ டியரோ. (ருச)

ஒருநா ளினிவர்த் தியெனும பெரியோர்
கிருநே ரினையா ளொடுசெப் புவரால்
அருமா மதுரச் சுவையப் பமுணத்
தருவா யெனவே தருதற் கிசைவாள். (ருரு)

மாவே முதலா யவெலாம் வருவித்
தேவே வவியற் றறுமோ டுகொளப்
போவாள் குயவன் மனைபோம் வழியில்
மேவா தவிசோ பனுமே வினனே. (ருசு)

கண்டே யெதிரெய் துகருத் திலளாய்
விண்டே யொருபா லுறமே வுதலும்
பண்டே பழிகூ றுவிசோ பனெனே
அண்டா தெதிரே யயலா யினதே (ருஎ)

நீயென் கசல்வா யதுநே ருதியென்
றேயங் கவனோ திடவிக் குயவன்
வாய்நன் கடைசுட் டிடவல் லகலம்
ஆயென் றுகொள்ற் கிவனெய் தினனே. (ருஅ)

என்ரு னையெனக் குமுனெய் தினதால்
நன்ரு கநும் புனலா டிடநான்
சென்ரு லலதொன் றுசெயற் கிலதென்
ருென்ரு முனிவோ டுரையா டினனே. (ருகூ)

இனியென் முனரெய் தல்செயா யெனவே
நனியங் கைகொடெற் றிநடந் துமுனே
வனையுங் குயவன் மனைவந் திவளுக்
கெனையன் றியடுங் கலமி குதியேல். (சுஎ)

உன்னைக் கடிதா கவொறுப் பலெனப்
பன்னப் பரிவற் றிவளும் படரா
மன்னத் தனியோ டுவழங் குகெனப்
பின்னக் குயவன் பெறவீ கலனே. (சுக)

ஈயா தமையால் மனையெய் திமிக
ஆயா சமதா யழவப் பொழுது
பாயா றுபடிந் தறுளா னபரர்
மேயா ரவண்வந் துவிளு வினரே. (சுஉ)

என்னீ யழவெய் தியகா ரணமென்
றன்னுர் தெரியச் சொலுமா யிழைதான்
மன்னு தரமற் றவிசோ பன்வலிந்
தின்னு புரிவுற் றதையன் றியினும் (சுங)

அப்பஞ் சுடவோ டளியா தபடி
செப்புங் குயவன் செயவுஞ் செய்தனன்
தப்பின் றெனவோ தினள்சா ளரவாய்
மெய்ப்பொன் றிவிசோ பன்விரு விடவே. (சுச)

அவனன் னதுசெய் தல்சுபா வமதற்
கெவமென் னையெனச் சொலிரு னபரர்
தவனன் சுடலா கியசட் டியெனக்
கவனந் தருதம முதுகே கனல. (சுரு)

உதரக் கனலைப் புறமுய்த் தவராய்
இதனிற் சுடுவா யினிதப் பமென
விதனக் கொடிசுட் டெரிரப் பிவிராய்
அதனைத் தனதண ணருடன் மிசைவாள். (சுசு)

செய்யுஞ் செயலத் தனையுந் தெரிவான்
மெய்யொன் றுவிசோ பன்வியந் திதெனே
வையந் தனிலிங் கிவர்மா னிடரோ
ஐய மிலைமுத் தொழிலா ரவரே. (சுஎ)

இத்தன் மையரா யினரிங் கிவரைச்
சித்தந் தெரியா துதிகைத் துளயான்
நித்தம் பலநிந் தைநவின் றனனே
எத்தன் மையினிற் பிழைசீர் வனெனு. (சுஅ)

எண்ணிக் கடிதிங் கிவரைச் சரணம்
பண்ணப் புருவே னெனவே பதிவாய்
நண்ணத் தெரிஞா னநலக் 'கடவுள்
உண்ணக் கலனைப் புறமுய்த் தனரே. (சுகூ)

அதுகண் டவிசோ பன்வலிந் தவருண்
பதுகைப் பிடிபற் றிமிசைந் திடலுங்
கதுவுஞ் செயல்கண் டெருந் தெனநீ
இதுவுண் டனைகே சரியே கெனவே. (எஏ)

அங்கன் னதுகூ றவுணர்ந் தவனுந்
தங்கும் மவர்தா ளில்விழுந் துபணிந்
திங்கென் மயல்போ கவிசைத் தருள்வாய்
நன்கொன் றியஞா னகிகா மணியே. (எக)

என்னப் பரிபக் குவமெய் தியவன்
துன்னத் தெரிஞா னசுகோ தயரும்
பன்னத் தருமென் றுபதே சபலன்
றன்னைப் பெறுவித் தனர்தம் மருளால். (எஉ)

(வேறு) இப்படி யிருக்குங் காலத் திணையிலா ஞான தேவர்
ஒப்பில்பண் டரியின் மேலி யுகந்தருள் பாண்டு ரங்கன்
றப்பிலாச் சேவை செய்து தாழ்ந்தபி ணமதேவர்
வைப்பதா மனைக்கு நேரே வரும்பொழு தெதிர்ந்த நாமர் (எங)

கரகம லங்கள் கூப்பிக் கான்றிசை வணங்கி நின்று
தரணியி லெவரை யுமமுத் தரிககவந் தவத ரித்துத்
திரமிகு கின்ற ஞான தேவரே யுமது பாத
தரிசனை கிடைகக யான்செய் தவமென்ன தவம தாமோ (எச)

என்றனர் புகழுக் கேட்டங் கெதிரவந்த ஞான தேவா
நன்றுமை நோவார் யாரே ஞானதாற் சிவன் முதி
ஒன்றிய தெனினும் பூவி லுள ரிதாத் தங்க ளெல்லாஞ்
சென்றதி லாடி நல்ல க்ஷேத்திரங காணல் வேண்டும். (எடு)

ஆதலா லும்மோ டேக வமைந்துநான் வந்த திந்தக்
காதலை நீரே தீர்க்கக் கடவதென் றினிது சுற
ஏதமி னுமதேவர் யானென ததின மல்லேன்
கோதறு பாண்டு ரங்க னதினைத்திற் குலவு கிற்பேன். (எசு)

என்பது கேட்ட ஞான தேவர்நன் றெழிலி வண்ணன்
தன்புடைச் சார்ந்து கேட்கத் தரிலின்று கொள்வ னென்னு
அன்பரைக் கூய்க்கொண் டேகி யடைந்தனர் கோயின் மேலிப்
பொன்புகழ் கொழுநன் பாதம் போற்றினர் வணங்கிச சொல்வார் (எஎ)

அமலனே கமல லோச னுபய லாழி வண்ணா
கமலநா பாநின் சேவை கண்டுகொண் டிருக்கு நாம
நிமலரைத் தீர்த்த மாடு நெடுந்தல மெல்லாஞ் சென்று
விமலராய் வருக வென்னோ டெனருள் விடையென் றோத. (எஅ)

கேட்டலும் பாண்டி ரங்கன் கிளர்ந்தெழு ஞான தேவே
வாட்டமி னுமன் றீர்த்த மருவநற் றலங்க ளான
நாட்டமெல் லாநா னேயென் றிருக்கின்று னவனை யுன்பால்
கூட்டிநா னனுப்ப வெண்ணங் கூடிடா தென்செய் கேனே. (எகூ)

ஆயினுந் தீர்த்த மாடற் கவசர முனக்கென் னென்ன
மாயவ னுரைக்கக் கேட்டு வழுவிலா ஞான தேவர்
நீயருள் செய்த நாமர் நிமலரா யிருத்த லாலே
மேயவ ரோடு கூட விருப்புமிக் குளதெ னக்கு. (அம)

அன்றியுந் தீர்த்த மாடற் காவலு முளது நாமர்
ஒன்றுற வருள்செய் கென்ன வொப்பிலாப் பாண்டு ரங்கன்
நன்றுபொன் னினைவிட்டாலு நாமனை விடுத்தற் கொல்லேன்
நின்றநின் வேண்டு கோளை நிரப்பவும் வேண்ட லாலே. (அக)

எனைவிட வேறெ யாரு மில்லாத நாம தேவன்
றனைவிடா துடன்கோண டேகித் தாபின்ன ரென்று கூறி
வினையறு நாம தேவை விடாதெனை யுணர்விற் கொண்டு
வனைபல தீர்த்த மாடி வருகென விடைவ குத்து. (அஉ)

நாமதே வங்கை பற்றி ஞானதே வங்கை தந்தான்
நாமனைக் கண்க ளெல்லா ரதுமபநீர் பெருகி வாரப்
போமவர்க் கிரங்கி யுள்ளம் பொருமினன் புலம்பி னைந்தான்
ஏமுறு ஞான தேவ நீசனை வணங்கிப் போற்றி. (அங)

சந்திர பாகை யென்னுந் தடநதி சார்ந்து மூழ்கி
வந்துபுண் டலிகர் தமமை யிருவரும் வணங்கி வாழ்ந்த
மைந்துறு நாமர் தம்மை வழிவிடக் கூட வந்த
செந்திரு மகடன் கோமான் றிரும்பினன் கோயில் சேர்ந்தான். (அச)

சேர்ந்தவன் கால்க ளெல்லாஞ் செந்துகள் படிந்த மெனி
வார்ந்துறு கனக னீரின மயங்கி வதனக் கஞ்சம்
சோர்ந்துறு வதனைக் கண்டு துலங்குசெம் பூமெற கோனை
நேர்ந்திது வென்னே யென்னெ நிமலசொல் கெனவி னவி. (அடு)

பாதநா மனாவி லக்கப் பாண்டுரங் கன்சொல் கின்றான்
நீதநு குணத்தி னுவி வேறிலை யெனச்சேர்ந் துற்ற
ஏதமில் நாம தேவன் பிரிவெனும் விசிக மென்னைக்
காதலான் மிகவு நொந்து களைத்துளே னென்று கூற. (அசு)

நாமனு மாரி வேண்டி நலங்கிய பயிரிற் சோர்ந்து
பூமிசை விழுந்து தொண்டர் பொலிவிலா திருத்தல் செய்யா
மாமலர் விழியி னுனைத் தேற்றிட மயங்கித் தொண்டர்
தாமவ னுறக்கூய்ச் சொன்னு டாமரை மலர்மேற் செல்வி (அஎ)

நாதனைத் தேற்றச் சொன்ன நலந்தெரிந் தன்ப ரெல்லாம்
சீதள வுபசா ரங்கள் செய்திடத் தேறு நின்ற
மாதவன் றன்னை நோக்கி மாயவா வுனக்கிச் சோர்வு
போதரற் கென்ன வேது புகலுதி யென்று கேட்க. (அஅ)

உதித்தநாட் டொடங்கி யென்னை யொழிவிலன் சேவை செய்து
மதித்துள வன்பி னாலே பிணித்தனன் மருவு நாமன்
விதித்துள தீர்த்த மாட மேவினன் பதிதா கங்கள்
எதிர்த்துள பொழுதென் செய்வா னெனத்தளர் கின்றே னென்றான். (அசு)

இன்னண மடியார் தேற்ற விருந்தனன் பாண்டு ரங்கன்
நன்னல ஞான தேவ ருடன்செலு நாமதேவர்
பின்னுற நோக்கி நோக்கித் தாய்தனைப் பிரிந்த பிள்ளை
என்னநெக் குருகிப் போற்றி யென்குல தேவே கோவே. (கூ0)

என்னுயிர்க் கிறையே யின்ப ரூபமே யெனைப் பிரிந்து
துன்னுகின் றனையோ வென்று சோர்வொடு ஞான தேவர்
பொன்னடிக் கமலந் தாழ்ந்து பணிதமெய்ப் போத மூர்த்தி
நன்னலப் பாண்டு ரங்கன் பிரிவுநா ணணண லாலே. (கூக)

உயிரெனக் குறுத லாகா துடனந்தப் பாண்டு ரங்கன்
செயிரில்பொற் சேவை தன்னைச் சேவிகக வேண்டு நீரே
மயர்வறக் காட்டு கென்ன மாயனை மனதி னுளளே
உயர்வுறக் கொள்வ தல்லா லுளன்கொலோ விநங னென்றார். (கூஉ)

சாதகப் பறவை மேக தாரையை வேண்டல் போல
நாதனைச் சகுணத் தன்றி நாடலே னென்று நாமா
ஓதலு ஞான தேவ ருலககா ரணனை வேணடித்
தீதற வசித்துக் கொணட திறலுளீ ரெனக்கன் னானை. (கூங)

வசியஞ்செய் வதற்குத் தக்க சாதன மார்க்கந் தன்னை
விசிதமா யுரைசெய் கென்று வேண்டலு நாம தேவர்
சுசிபெறு கற்ப கம்போ யுலோபனைத் தொடாநது வேணடும
இசைவென வென்னைக் கேட்டீ ரெனினும்யா னறிந்த மட்டும். (கூச)

உரைசெயக் கேளு மென்ன வுரைக்கின்றார் தனது தேக
வரையிலே வெறுப்பு மற்றச சரீரங்க ளினில்வி ருப்பும
புரையறக் கொண்டி நானென் னகந்தையை முழுதும் போக்கித்
தரையிடை யிருந்துஞ் சேராத் தகையனாய்த் திருமா லன்பு. (கூரு)

தொடர்தலே சுத்த மான பசனையத் தொடர்ச்சி யின்றிப்
படர்தலிற் பயனென் னாகும பருந்துவா கனன்றன் பாடல்
அடைவுடன் கேட்ட லேசி ரவணமா மவனை நெஞ்சிற்
றிடமுற வமைத்த லேகன் மனனமாந திருமா லனறி. (கூசு)

வேறிலை தெய்வ மென்று விரும்பலே தெளிவா நாமம்
கூறுத லொடுபொற் பாதங் கூடலே பேரா நந்தம்
தேறிய விவற்றை யன்றிச் செப்புவ தெல்லாம் பந்தம்
மாறறு ஞான தேவே யென்றடி வணங்கிச் சொன்னார். (கூஎ)

அமுதமென் மாரி போல வவர்சொன்ன வதெலாங் கேட்டுத்
திமிரறு ஞான தேவர் திரிபுவ னங்க ளுள்ளும்
நிமிரரி பத்தி யுள்ளோர் நாமரை நிகர்வ ரில்லை
நமரெனு நாமர் பத்தி நாதனே யறிய வல்லான். (கூஅ)

என்பன பலவும் பேசி யிருவருந் தீர்த்தந் தோறும்
அன்புட னாடு வாரா யத்தின புரியில் வந்த
பின்பரி நாமந் தன்னைப் பேசியே நாம தேவர்
முன்புறக் கண்டோ ரெல்லா மொய்த்தனர் பசனை செய்ய. (கூகூ)

அதுதெரிந் தவ்வூ ராளு மரசனு மவிந்தன் வந்து
கதுவின னென்னே பாடல் கழறெனக் கேட்க நாமர்
மதுவிரி துளப மாலை வாழ்த்துகின் றேனென் றோத
வதையுறு பசுவுக் காவி வரப்புரிந் தனையே யானால். (ஈ)

நீயரி பசனஞ் செய்த னிசமல தாயி னுன்னை
மாய்வுறு வகையான் செய்வேன் வலிந்தென வுவிந்தன் கூறி
ஏயவுறப் பிழைக்கச் செய்தற் கெத்தனை செல்லு நாள்கள்
ஆய்வொடு புகன்று பின்ன ரத்தொழில் புரிக வென்ன. (ஈக)

வினவினர் நம்போ லாது விட்டலன் விரைந்துற் றாலும்
தினஞ்சில செல்லு மென்னச் சிந்தைசெய் தவிந்தன் றேற
நனைவிரி தாரோ யுய்ய நாலுநாள் வேண்டு மென்றார்
கனைகழல் வேந்தன் கேட்டுக் கடிமனை யதனுட் சென்றான். (ஈஉ)

நரபதி யகன்ற பின்னர் நாமதே வரியை யெண்ணிப்
பரமபா வனகா ருண்ணிய பக்தபா லனப வித்ர
முரகரி முருந்த மாய முளரிசேர் நாப மாகுந்
தரசநார்த் தனவை குண்ட சௌரிசக் கனத யாள. (ஈங)

விடல பாண்டு ரங்க பூமேன் மின்மகிழ் கொழுந வேரி
மடல்விரி துளப வென்று வாழ்த்துநர் நாலு நாளும்
தொடையின்மே லிறந்து போன சுரபிதன் றலையைக் கொண்டு
படர்படு கின்ற வெல்லாந் தெரிந்தனன் பாண்டு ரங்கன். (ஈசு)

நாலுநாட் பகலி ராவு நயந்துள நாம தேவர்
வாலிய மனத்திற் றோன்றி வருந்தலை பசுவுக் காவி
ஏலவுண்டாகி நிற்ப தெழுந்துபா ரென்று பத்த
பாலனன் பிழைக்கச் செய்த படிகண்டு பரனைப் பார்த்து. (ஈரு)

நீயிந்த நாலு நாளாய் நினைவின்றி யெனைம றந்து
போயினை யென்னோ வென்னப் புரவலன் றனக்கிப் போதே
மாய்வுறு பசுவுக் காவி வரச்செய்வே னெனச்சொல் லாமல்
ஏயினை நாலு நாளென் றிடம்பிய வதுபொய் யாமல். (ஈசூ)

வந்துளே னினியிவ் வாறு வருந்தலை சங்கற் பத்தால்
சந்தத முனத தீனஞ் சார்ந்துள வென்மேற் றப்பு
நிந்தனை சொலவோ ணாது நீமகிழ் கென்று கூறி
இந்திரை கொழுந னேக வெதிர்நின்ற பசுவைப் பார்த்தார் (ஈஎ)

எவ்வகை பசுவுக் காவி யீவரென் றவ்வூ ராரர்கள்
கைவகை யொழிந்து சொன்ன நரபதிக் குணர்த்த வன்னான்
கொய்வகை யாற்றுண் டான கோவுயிர் பெறுவ துண்டோ
மெய்வகை காண்போ மென்ன வியந்தனன் விரைந்து வந்தான். (ஈஅ)

உயிர்பெற்ற பசுவைக் கண்டோ கோ விவர் தெய்வ மென்னுச்
செயிரில்பொற் சரணந் தாழ்ந்தான் றிரண்டுள வூரா ரோடு
மயலறு நாம தேவர் மாண்புகழ் மிகக்கொண்டாட
நயமிக வரிநா மத்தை நவின்றுகொண் டிருந்தார் பின்னா. (ரகூ)

அத்கின புரியை நீங்கி யங்கங்கும ரிநா மத்தைப்
பைத்தபல் பாடை யாலும் பகர்ந்தனர் பாடிக் கொண்டு
சுத்தநீர்த் தங்க ளாடிச் சுரநதி துளைந்தி ராமன்
மெய்த்தகீர்த் தனங்கள் பாடும் விசுவநா தனையும் வேண்டி. (ரஐ)

திங்களோர் நான்கு காறுஞ் சிறந்தன ரிருக்க வவ்வூர்
தங்குறு கபீரர் வீட்டிற் றனியொரு நாளி ராவில்
அங்கரி தாசர் சேர வவர்க்கன்ன மிடற்கு வேண்டி
மங்கையார் கபீரர் பாரி மண்ணினர் நள்ளி ராவில். (ரஎ)

ஆவண மெல்லா மின்றி யங்கொரு வணிகன் மட்டு
மேவர விருக்கக் கண்டு மேவிய வரிதன் முச்சிக்
கேய்வன தருதி யென்ன நீகுவன் விலையென் றோத
நீவளர் காம நீக்க நினைதியே னோர்வே னென்றான். (ரஅ)

கேட்டவர் மலர்மேன் மங்கை கேட்வனன் குரனென் றெண்ணக்
கோட்டமில் மனத்தி னோடு குறிதவ னினைவுக் கேறப
நாட்டநல் லுறுதி கூறி வேணுமெ னல்கப் பெற்று
வீட்டுளோ ரடுத்த கீந்த மீனுவர் பதியை நோகவி. (ரகூ)

பின்விலை தருவ னென்று பேசுதல் மறுத்து நீயென்
பொன்விலைக் காக வேர்தி புனர்சுவியென் பதற்கு நேர்து
முன்விலை யியா தெல்லாம் வாங்கிட முந்தி முதல்
மன்விலைக் காக வேக டைதரு வெனவ னாடக. (ரஎ)

தாசர்நீ யரிதன் றாசர் தம்பொருட் டிவ்வா றெய்ந்த
நேசமென் சொல்கே னென்று மகிழ்ந்தனா நிசியி ராவில்
வீசுறு துளிக ளுன்னோ யுனைக்கொண்டு விடப்பல் யானை
பேசின வணிகன் றன்பா லென்றனா பெயர்ந்தார் கொண்டு. (ரஉ)

தோண்மிசை யினரை நோக்கித் தொண்டருக் குதவி செய்த
மாண்வனி கன்ற னுள்ள மகிழ்வுசெய் தடைந்தி யென்ன
நீண்மறு கடைந்து செட்டி கடையிடை நிறுவி மீளடார்
காண்வர விரும்பி நின்ற வணிகன்கண் காண வந்தார். (ரஎகூ)

வந்துள கபீர தாசர் மனைவியை வணிகன் கண்டு
முந்துளைப் படியே வந்தா யளறுகால் முகந்தி டாமல்
எந்தவண் ணத்தா லென்று மகிழ்ந்தனன் வினவ வேழைச்
சந்தவார் குழலார் நீசெய் யுதவிக்குத் தளிர்த்தென் றுதர். (ரஎஎ)

புயமிசைச் சுமந்து கொண்டு போந்தனர் விடுத்தா ரென்ன
நயமிகு செட்டி யோகோ நன்றுநன் றெனவி யந்து
பயமிகுந் தனுத பித்துப் பரிந்தனன் பற்பல் யோனி
வயமதாய்ப் பிறந்த லைந்து மனிதனு யுகித்தும் வீணே. (ரஎஅ)

காமத்தி லழுந்திச் சான்ற கபீரர்த மனைவி யார்க்கு
நோமத்தை யிழைத்தே னந்தோ நுவலரும் பாவி யானேன்
யாமத்தில் வந்த வன்னை தெய்வமே யாரு மென்று
தோமத்தைப் பொறுத்தி தாயே யென்றடி தொழுது வீழ்ந்தான். (ரூகூ)

அன்னைநீ கபீர தாச ரடிமிசை யென்னை வீழ்த்தி
நன்னய வபய நல்க நவிலுதி கொடுபோ யென்று
பின்னரும் வணங்கச் செய்கை பிழையென வுள்ளம்போர்ந்து
மன்னனு தபித்த போதே பவமெலா மாய்ந்து தீர்ந்த. (ரூஉ)

ஆயினுங் கபீர தாச ரன்புறச் செய்வே னென்று
கூயினர் செட்டி தானுங் குடும்பவன் மயலை நீங்கிப்
போயினன் கூட வில்லம் புகுந்துதா சரைப்ப ணிந்து
மேயின பிழைக ளெல்லாம் பொருத்தருள் விளைக்க வென்றான். (ரூஉக)

தொண்டரும் வணிக னுள்ளந் தெரிந்தனர் தழுவித் தூய
புண்டரீ கக்கை தன்னைத் தலைமிசைப் பொருத்தி நேயம்
கொண்டருள் செய்தார் செட்டி யரிபசனத்திற் கூர்ந்தான்
அண்டிய வன்று தொடங் நாமதே வனைத்துங் கேட்டார். (ரூஉஉ)

ஒருகபீ ருண்மை யெல்லா ஞானதே வுணர வோதி
இருவருமவரிருக்கு மில்லிடை வரலு மன்பு
பெருகுறவெதிரே வந்து வணங்கினா ரெரிது போற்றித்
தருதவி சிடையி ருந்து சாற்றுவர் ஞான தேவர். (ரூஉங)

மிகநெடும் பாவ மெல்லாம் விங்கிட வுலகத் துள்ளே
சுகரொடுத் தவர்க ணீவீர் தோன்றினீ ரன்றோ வென்ன
அகமகிழ் கபீரு நாம தேவரு மடிவ ணங்கப்
புகழ்மிகு ஞான தேவர் கபீரரைப் பொருந்த நோக்கி. (ரூஉச)

புண்டலீ கருக்கு நேயம் பூண்டொரு பாண்டு ரங்கன்
பண்டரி புரதிற் செங்கன் மிசையடி பதித்து நிற்றல்
கண்டுநீர் வருக வோர்கா லென்றலுங் கபீர தாசர்
விண்டதேள் மதியி லேகா தசித்தின மேவு வேன்யான். (ரூஉடு)

(வேறு) என்றுக பீரரு மினிதிது கூறிட விருவோருஞ்
சென்றுக யாபிர யாகையி லாடினர் சீராமன்
துன்றிட யோத்திம துரையொடு கோகுல முந்துன்றி
நன்றுது வாரகை நண்ணினர் மீளுது நாடன்னில். (ரூஉகூ)

மாமிகு செல்வசி றைந்துவ ளர்ந்துள மார்வாடர்
தாமுறை தேயம டைந்துள போதுறு தாகத்தா
லேமிக வாடின ரிருவரு மோர்கிண றிற்சென்று
காமுறு நீருண வழிகிடை யாதுக ளைக்கின்றார். (ரூஉஎ)

ஞானந லோர்வரு நாமரை நோக்கினர் நவில்கின்றார்
நானறி வேன்லகி மாவதி னீருண நன்றென்று
மேனவி லுங்கிணற் றூடிழி வுற்றயம் வெய்துண்டு
பானமு வந்துண நீரறி கின்றிலிர் பண்டென்றார். (ரூஉஅ)

நன்றென நாமர்ந யந்தனர் பண்டரி நாதன்றாள்
ஒன்றுக ருத்துட னோமது சூதள வோராமா
என்றுமெ னக்கரு ளீசவி ரைந்திவ ணெய்துற்று
கின்றவெ னக்குறு தாகம தைத்தெது நீயென்றார். (ராஉசு

அப்படி நாமர கத்துநி னைத்துள வப்பொது
மெய்ப்புறு பண்டரி நாதன்ம லர்த்திரு மேனுட்டம்
வைப்புறல் செய்துமி னேயொரு நாமனை வாயாமல்
எய்ப்புற லாயின வின்றுது டித்ததி டத்தோளே. (ராஉஎ)

என்னவ னுக்கவ ணெய்தின வோவென விடருறு
மன்னின நாமர்வ ருந்தினர் தாகம தாலென்று
சொன்னசொன் மாறுமு னேதெரி வுறுநா தோன்றாமல்
நன்னரு றும்புனல் பொங்கிவ ழிந்தன நாமாககே. (ராஉக

வழிபுன லுண்டுமெ கிழ்ந்துள நாமர்தா வதனங்கலை
டொழியுறு கின்றில னுமைவட லவுகொளு முருமானமை
முழுதுல கும்பெறு மென்றுபு கழா னா முறு ஞானா
பொழுதினி மிர்ந்துவ ழிந்துள நீரபொலி வாபிளாமம். (ராஉவ)

நாமர்பொ ருட்டுறு நீர்குடை யதத்தனு ரன்மாதம
தாமதி லெயதுவா தாரணி யோரது த்னிவிடமு
மாமதி யோரொடு நாமரு மற்றும்வ திந்துளள
தோமறு நீர்தொறு மாடினா வதரிதொ டார்த்துறறு. (ராஉங)

பின்சக நாதம டைந்தனர் கண்ணபி ரானைகக்ண
டின்சுக வாரிது ளைந்தன ரெங்குமெ தாரந்தாடி
முன்சிறை செய்துள சேதுவ டைந்தனர் மூழுகபபின்
மன்சிவ ராவிடை நாகரு ளீசனில் வந்தெய்தி. (ராஉச)

அரிபச னஞ்செய யாவரும் வந்தன ரானந்தம்
புரிபொழு தத்தின பூசனை செய்மறை யோரபோது
தெரிவழி யின்றிநி றைந்துள ராகிய சீர்கண்டு
பரிவுற லாகியு ரப்பினா மற்றவர் பாங்கேக. (ராஉடு)

அன்னவர் சொற்செவி கொண்டிவ ராயரி நாமத்தைப்
பன்னலு மங்கவர் சூத்திரர் நீயிரப ரந்துறறு
மன்னுறு கூக்குரல் செய்வத டாதெமை மண்டுற்றுத்
துன்னினர் தீண்டினிர் போமினை னப்பல வுருசொன்னா. (ராஉசு

கோயிலி லேதொட லாலொரு தீதிலை கொள்கென்று
வாயிலு ளோர்சொல மறையவர்நாமர்மூன் வந்தெய்தி
நீயிர்பி னேசெலு மென்றுநி கழ்த்திட நின்றாரோ.
டாயினர் பின்புற நின்றரி நாமம தேசொலல. (ராஉஎ)

இன்புட னுடினர் யாவரு மூவணனி ருக்கின்ற
ஒன்பதி லக்கப தாகையி ழிந்தன வோராமாயன்
அன்புறு மேலுல சூற்றவை யோடிவ ரானந்தப்
பொன்புனை மார்பனை டும்புகழ் போற்றுத லேக்கண்டு. (ராஉஅ)

நழை பெயதனா வானவா கணடவா பொறபெய்த
ராமரெ ளகொரு நாதனி சைதுள நாளெலலாந
சீமறு தெதுமு ருதருள செயது சிறபபினறி
ஈமந டைசன்மு னினறுபி னெயதவி சைததெனனே. (௧௬௯)

பாடவி தெதன னெனறு பரிதனா பணபாக
ராடரி நனகுந யபபுற வவ னிட நாகேசன
பிடமா கோயினமு கமபி செயுறு பெடபோடு
நீடவெ திரதுதி ருமபின னுமாமு னேராக. (௧௭௦)

குடகிசை யாகிவி ளங்கின சநிதி கோயிறகுள்
நடநவி னுமரை நனகுவி யாதுந வசசெய்கை
தொடாவுறல கனடுநொ ருருள சறசனா குழுவுற்றுத்
திடமுட னேபுகழ கிளரன ராசைகி டுகெனன. (௧௭௧)

மடமையி னுனவிழை கி னன யாவுமவ குககின்றுன்
விடலரும விட்டல னெனமகிழ வாயவி டியுநகாறுந
திடமுடனேனெடு மாலெநெ டுநதுதி செயதுறரூ
விடிபொழு தீசனை வ ரிபடு வேதியா வெளிவநதா. (௧௭௨)

வநவா ருரியன மேன்முக மாகவும வாவானே
நாதுபி லினமைம ரகுட தோமதி நாமாகாய
ம ா மேநிரி வாவிய தோவொ மாறறு
மூதுறு ராபு னைகளு மெறு மு மவைததா. (௧௭௩)

மினமய வொனபபி லகைகொ டுகொடி மாறேன்றி
ஞளமைய வாவின கனடுவி யதுமு னெலலோரும
ரனமைய நாம ர ா ருமுக ருறுந ட தோது
தனமைய நனறென வுசிய ஞரடி ழுவநறே. (௧௭௪)

யாநகாபி மைரு தவெ லாநகமை செயகென வேநாமா
பாநகின வாககுப சாரா லமபல வுருசெயதே
ஓநகிய வாரன முருசெயது பினனட யுநகொணடா
தீநசரு ராரா ரு ரின வேணடினா சென்றுரே. (௧௭௫)

நாயைபி னைநதுரு கனறெ ன வேயிரு வோநதாமும
மேயினா பணடரி கோபுர மெனமுடி மேவககண
டேயவண வாதனை செயதொரு கோயின்மு னேயெய்தி
மாயனை யேபுகழ செயதுத மாகம நநதநகே. (௧௭௬)

விழுமொரு ராமரை ஞானந லோரதெளி மேவததாம்
தழுவின ராயரி னனிட மேகொடு தாம்வநதா
நழுவலி லாதந லனபுமி குநதுந யநதேற
வழுவறு நாமாவ ணங்கினா பணடரி மாறன்னே. (௧௭௭)

பணடரி நாதனெ முநதெதிர வநதுறு பரிவோடே
தொணடரை நன்றுத ழீஇன னுமாதொ ழுந்தோறும்
புணடரி கமபொரு வும்பத மீதுபொ ழிந்தாகண்
மண்டிய நீரோடு நின்பிரி வினிவர வையாதி. (௧௭௮)

என்றவ ரைத்திரு மால்பிரி வுற்றுனை யிதுகாறும்
இன்றிர வும்பக லுந்துயி லெற்களு ரேசாலத்
துன்றிய துன்னையெ திர்ந்தபி னஃதுதொ லைந்துற்ற
நன்றினி நாமவெ னைப்பிரி யாதிவ ணண்ணென்றான். (ரகசு)

தன்களை மீதுத யங்கிய தண்டுளி வந்தன்னை
நன்கவர் தோளில ணிந்தவர் கண்ணின னீர்மாற்றி
மின்கவி னுங்கைக ளாலவர் மேனியின் மேனீவி
மன்கரு ணாநய னத்தருள் மேன்மிக வைத்துற்றான். (ரகுஉ)

வீறுநி வர்த்திந லோர்பின ரோடுவி சோபாவும்
கூறிய பண்டரி நாதன்வி ளங்குறு கோயிற்குள்
தேறிய நாமரி டம்புரி செய்கைதெ ரிந்தாதி
மாறனை யேத்தினர் நாமரை வந்தும தித்தாரே. (ரகுக)

ஆகிய காலையு ருக்கும ணித்திரு வாலாத்கி
வாகுட னேகொடு வந்துசு ழற்றினள் நாமர்க்கு
நாகர்பொ ழிந்தனர் பூமழை நன்மைம வின்றூர்மைம்
மேகநீ றத்தின ணுமரை நோக்கிவி ளம்புற்றான் (ரகுஉ)

ஆடினை நீர்த்தம தற்கிறு வாகிய தைச்செய்ய
நாடுதி யென்றலு நாமரு நல்றென நாதன்றான்
ஏடுறு தாமரை யாளிட நாமரை யின்பாகப்
பீடுட னேகொடு சென்றவ ளோடிது பேசுற்றான். (ரகுங)

நாமனி யற்றிய யாத்திரை நல்விர தந்தன்னை
ஏமுற முற்றிட னன்றென விந்திரை யெங்கோனே
னுமன ணுகியெ லாமற விட்டுனை யேசூழ்ந்து
காமுறு வோனெது செய்குவ னீயது காவென்றே. (ரகுச)

மாமறை வேதியர் வந்துண வேசொலி மற்றெல்லாம்
ஆமள வாகவ மைத்தியெ னத்திரு மாலானேன்
நாமர டிப்பொடி நண்ணிட முன்னவா நன்றாகப்
போமதி யற்றியொர் வேதிய ணாய்ப்பினர் போகின்றான். (ரகுரு)

சந்திர பாகைநெ டுங்கரை மீதுத யங்குற்ற
மந்திர வேதியர் தம்புடை வந்துவ ணங்குற்றான்
அந்தநல் வேதிய ரென்னென நாமாக ணன்புள்ளேன்
வந்தவ னந்தனி யானெனு வந்தது ரைக்கின்றான். (ரகுசு)

இந்தந ணுமனி யற்றுறு போசன மெல்லோரும்
வந்துண வேண்டுமெ னச்சொல வம்மறை யோர்யாரும்
முந்துவ மென்னமு குந்தன டைந்தனன் மொய்கோயில்
இந்திரை கண்டனள் சித்திக ளெட்டையு மேய்கென்றாள். (ரகுஎ)

வந்துள சித்திக ளெட்டும்வ ணங்கிவ ழாதொன்று
தந்தன யாவும மைந்தன பின்புத ணுமர்க்கு
முந்தின மங்கள நானமு டிந்தபின் மொழிகின்ற
மந்திர மோதினர் வரிசைவ ழங்கினர் மலர்மின்னார். (ரகுஅ)

பூடண மாடைசு கந்தமு டன்புனை பூவோடு
சூடுதல் செய்தனன் மால்பொறி நாமர்து லங்கக்கண்
டாடின திட்டிக ழிந்திட வேயரு ளாலாத்தி
நீடவெ டுத்தலு நாமர்த மைத்தழீஇ நின்றான்மால். (ாருகூ)

ஞானந லோரொடு நால்வரு மற்றுள நல்லோரும்
தினத யாநிதி செய்வகை கண்டுசி றந்தோங்க
லானந னுமரை நும்மென யாருள ரரிபத்தர்
ஊனமி லீரென வோதிமி கப்புகழ் வற்றாரே (ாசுஐ)

வேதிய னுகிய மால்பினர் வேதிய ரெல்லாருஞ்
சேர்தர லாகவ ழைத்தொளிர் கின்றசெ ழும்பீடத்
தாதர வாகநி றுத்திய லங்கிர்த மாகச்சேர்
பாதம்வி ளக்கியோர் பூசனை யுந்தனி பாலித்து. (ாசுக)

பதமுறு நிர்பரு கிப்பொலன் மிக்கொளிர் பட்டாலே
இதமுட னன்குது டைந்துந லாசன மேறச்செய்
ததிமது ரஞ்செறி முக்கனி சர்க்கரை யப்பஞ்சேர்
விதவித வர்க்கமி கச்சுவை யின்கறி மேன்மேலும் (ாசுஉ)

நெய்தயிர் பானிமி ரச்செறி போனக நிறைவெல்லாம்
கைதவி ராதுப டைத்தவ ருண்பது கண்டார்வம்
பெய்தர நாமர்சங் கற்பச லந்தனி பெய்யச்செய்
தைதவர் யாவரு மமுதுசெய் திடும்வகை யைசெய்தான். (ாசுங)

அந்தணர் யாவரு மமுதுசெய் தாணபி னவர்கட்குச்
சந்தன கந்தசு கந்தவி தத்தொடு தாம்பூலத்
தெந்தவி தங்களு முதலிய பின்னவ ரெல்லோரு.
முந்தம ரச்செய்து நீவிர்கள் காணநும் முன்னேயான். (ாசுச)

அமுதுசெய் துதவுவ றக்கணை யென்றுபி னலர்மங்கை
தமியுத வோதன மிசையவி ருந்தொரு தன்னுமன்
நிமிர்சுவை யோதன முடனுண வெங்கென நேடித்தான்
அமரதிரு வாயிலில் வந்தவ சந்தனை யறிவுற்றே. (ாசுரு)

தூக்கினன் வந்திடு தவிசிடை யேயவர் தொகவைத்து
நீக்கவி ளைப்பினை யவரது கண்டழ நெடுமாலும்
போக்கறு வீரமு துண்கென நன்குபு கன்றுனய்
ஆக்கிய நல்லமு தூட்டினன் வாயிடை யப்போது. (ாசுசு)

என்னொரு நாமநீ யேனமு கின்றனை யென்றானை
நன்னய மாகவ வன்பத மேற்றலை நண்ணச்செய்
தன்னபொ லன்கழல் பற்றியெ னுதநின் னருளென்றுந்
துன்னுபி றப்பிடை தோறும மைக்கதொ டர்ந்தென்றார் (ாசுஎ)

மாலது கேட்டும கிழ்ந்துனை யென்றுமறக் கேனென்
றேலவு ரைத்தமு தூட்டிட நாமரு மின்பானார்
சாலமி சைந்தக லத்திடை யமுதொரு தானுண்டான்
கோலவி ருந்தபி ராமணர் கண்டிது கூறுற்றார் (ாசுஅ)

சூத்திர னுண்டக லத்திடை வேதிய னுஞ்சோறு
வாய்த்திட வுண்பது வந்தக வோவிவன் மறையோனோ
ஈத்துள சோறினி துண்டிழி வற்றனம் யாமின்று
கேர்த்துள தோஷநி வர்த்தியெ னேயென நினைவுற்றார் (ரசுகூ)

மிச்சினு கர்ந்தபி ரானொரு நாமரை மேவக்கொண்
டச்சுத னுமமு ரைத்தமர் வேதிய ரருகூற்று
மெய்ச்சவர் கால்டை யிட்டுள தக்கணை மேன்மேலும்
வைச்சினி தீவுழி யென்முகம் வாட்டம்வ குக்கென்றான் (ரஎஐ)

வேதிய னுகிய நீயொரு சூத்திரன் மிச்சிற்குச்
சாதக னுயின தென்னையி ழிந்தநீ தருகின்ற
ஓதன முனடவெ மக்கது நீர்வகை யுண்டோவென்
றேதம டைந்தன மென்றனர் வேதிய ரெல்லோரும் (ரஎக)

பொய்கள வோடுபொ ருந்திய கட்குடி புன்காமம்
செய்கொலை செய்பவன் யாரெனி னுங்கிரு மானமம்
பெய்தரு வாயின னேலவ ன் மிச்சிலகள் பெரிதன்றோ
எய்துவ தெவறினி துண்டன னெனறன னென்னம்மான் (ரஎஉ)

வேதியர் செய்கையெ லாமற விட்டொரு மால்நாமம்
ஓதுவ னேலவன மிச்சலை யுண்பது வொர்தீமை
தீதது செய்தனை [illegible]வகை சுந்தர பாகைக்குப்
போதுக வெனறனர் மவதிய ர மாலரி புகல்கின்றான் (ரஎங)

சித்தந லஞ்செறி சுத்தம தாகித் திகழுவைரா
கத்தொடு சற்சங் கதிடை கூடிந கவிஞர்மால்
பத்தியி னுமம் பகர்வுறின் முன்சேர் பவமெல்லாம்
மொய்த்துள நீதெல் லாமற மூட்கு முதனுனம் (ரஎச)

ஆதலி னீரே யறிஞர்கள் சொல்லு மவையெல்லாந்
தீதற யானே செய்யவ குக்குர திநனெனனுப்
போதுக வென்று நாமாகை [illegible] போதநதான்
வேதியர் சொன்ன வகாதி மூழ்கி விதிசெய்தான் (ரஎடு)

பின்னரை பீதாம் பரமது தெத்திப் பெரிதார்வந்
துன்வை வர்க்குத தானம ளித்தான் சொனவாறே
நன்னரெ னக்குச் சுத்தயவி ளங்க ननிசெய்சீர்
என்னவ ணங்கி நல்விடை பெற்றா னினிதாக (ரஎசு)

அன்பரு டன்கோ யிற்குள டைந்தங் கவரோடும்
இன்பொட ருந்திப் பின்விடை யன்பர்க் கினிதிந்தான்
முன்பொரு நார தன்கர வீணை முறைசாலப்
பொன்பத மீதிற் கும்பிடல் செய்து புகழ்கின்றான். (ரஎஎ)

அன்னவ னுக்குத் தன்கள மாலை யதைநல்கித்
தன்னக லத்துப் பொன்மணி மேவத் தழுவுற்றான்
முன்னரிய பாமை தன்னிடம் வீணை முனிமேவத்
துன்னிவ ணங்கித் தலிசிலி ருக்கிச் சொலகின்றாள். (ரஎஅ)

அவ்வவ ரெந்தச் சாதிய ரேனு மதுதேரா
இவ்விட லன்றன தன்பர்க ளெச்சிற் கேக்குற்றுச்
செய்வகை நன்றோ செப்புதி யென்னத் திகழ்வீணை
வவ்விய கையோன் பாமையை நோக்கி வகைசொல்வான். (௩௭௯)

கோமள மின்னே நின்றிரு மானிர்க் குணனுகி
நாமமு மின்றி நல்லுரு வின்றி நவையின்றிப்
பூமியி லுள்ளோ ருய்வகை ரூபம் பொலிவுற்றே
ஆமனு யிர்க்கன் பெய்திட லிவ்வா றயர்கின்றான். (௩௮௦)

ஆகலி னன்னு னுக்கொரு தோடமு மடைவுண்டோ
நீகரு தென்றே போயின பின்பந் நெடுமால்பால்
பாகன சொற்பொன் னெச்சில ருந்தல் படிதானே
போகழ றென்ன மாயன தற்கங் குரைசெய்வான். (௩௮௧)

தந்தையு டன்றாய் குருமனை மக்க டமரெல்லா
நிந்தையி லன்பா லல்லது வேறோர் நிலையில்லை
செந்திரு வேயங் கவர்கள்பொ ருட்டே செறிகின்றேன்
மைந்துற வென்சிர் வரவரு தறியார் மகியாரே. (௩௮௨)

இகபரம் வேண்டா ரெனையல தன்ப ரிதனாலே
அகமகிழ் வற்றே யவர்பெயர் சொல்வே னதுவன்றித்
தகவவ ருருவஞ் சிந்தனை செய்வே னவர்சாறத்
தொருபணி யுஞ்செய் வேனிது வேயென் றுணிவென்றான். (௩௮௩)

(வேறு) இப்படித் திருமால் பொன்னே டியம்புறு பொழுதிற் பானு
தப்பற வுதய மாகச் சார்ந்தனர் தொண்டரெல்லாம்
பொற்புறு கோயிற் குள்ளே புகுந்தரி பசனை செய்து
சிற்பரன் பதம்வ ணங்கத் திருநெடு மாலுங் கண்டு. (௩௮௪)

அன்னவர் தமைப்பக் கத்தே யமர்தரச் செய்து பொன்னே
நென்னல்யான் றோஷந் தீர்க்க நிற்புழி நேர்ந்து கொண்டேன்
நன்னயத் தின்று மன்ன நான்மறை யவருக் கெல்லாம்
இன்னமு திடுவே னென்ன வாதலா லியற்றல் வேண்டும். (௩௮௫)

என்றவன் றன்னை நோக்கி யிந்திரை யிசைந்து சொல்ல
நன்றென மறையோர் தம்பா னணுகிவே தியரே நீவிர்
இன்றுமுன் பதற்கு நேர்வி ரென்னவு மறையோ ரெல்லாம்
துன்றுது மென்றார் நாதன் கோயில் போய்த் துன்னி னானே. (௩௮௬)

அந்தணர் தீர்த்தமாடி யடைந்தனர் கோயிற் கப்போ
திந்திரை கொழுநன் பார்ப்பா னெனச்சென்று தொழுது கூட்டி
வந்துபொற் பீடத் தேற்றி மலரடி கழுவு நீர்கொண்
டுய்ந்தன னென்று கூறி முறைமுறை யுபச ரித்தான். (௩௮௭)

அறுசுவைக் கறியோ டின்சோ றடைவுட னமுது செய்ய
மறுவறச் செய்துண் போது மாலரி நாமந் தன்னைப்
பெறுமொரு பிடிசோற் றுக்கும் பேசுக வெனலு மன்னார்
உறுதொழுஞ் சொல்லி யுண்டா ருண்டபின் சுத்தஞ் செய்து. (௩௮௮)

சந்தன கந்தத் தோடு தாம்பூல முதல பெற்று
விந்தையோ டிருக்க நாதன் வேதியர் தம்மை நோக்கி
அந்தணீர் சுதின மின்று மானதா லுமைச்சே வித்தேன்
உய்ந்தனென் பேரா நந்தக் கடலிடை முழுகி யுற்றேன். (ரஅகூ)

ஆதலா லடிய ரோடிங் கியானுனு மளவு நீவிர்
ஏதமின் றிருக்க வேண்டு மென்றடி யாக ளுக்குப்
பாதபூ சனைகள் செய்யப் பரிந்தனர் கண்ட நாமர்
நாதனே யெமைப்பூ சித்த னல்லதோ வென்ன நக்கான். (ரகூஉ)

எனக்குமை யன்றி வேறே பெருமையின் றெனவி யமப
மனக்களிப் புறறுத தொணடா மருவியுண் பொழுது மாயோன்
வனக்கரத் தூட்ட வெசசில் தெறித்திட மடியின் மாற்றி
உனற்கரு மடிய ரெலலா முணபபினு மூட்டி னானே. (ரகூக)

சிலர்க்குப சரித்த லெசசில் தெறித்திடிற் றுடைத்தல் செய்து
பலர்க்குமங் குபசரிககும பரமனைப் பாரதுப் பாரப்பார்
நலத்தகு நயிட்டி கதத்தை நணணுவோன ருனு மல்லன்
வெலத்தகு தவவி ராக மேவினேன் ருனு மலலன். (ரகூஉ)

மறையவன் ருனு மல்ல னெனசசிலா வருககச் சில்லோர
நிறைபரம் பொருளே யாகி நோதரு விட்டோ பாததான்
குறைவிலா வடியாக காகக கொணடுநன் மனித வேடம்
முறைமுறை தொணடு செயது முயலகின்ற விவன்மற றென்ன. (ரகூகூ)

பகர்கின்ற வதனைக் கேட்டுப பணடரி நாதன் மிக்க
நகைகொணடு மிளிரகி றீட நலசகொளருனு டலநக ருன்கு
புகர்கொணட தோள்க ளேநது பொருபடை பொன் பூணமார்பு
முகமின்னப் பொன்னி னுடை முயங்குறப பொலிநதுநின் ருன். (ரகூச)

நின்றவவ் வடிவ நோககி நிறைமயூற யவரோ டன்பர்
துன்றிய மகிழ்சசி கூர்ந்து தொழுதுகூத தாடலானார்
அன்றரி யவரை நோக்கி யகிலபிர பஞசமாயை
வென்றுதே காபி மானம விடுதெனை யேய டைந்தார். (ரகூரு)

அன்பெனுங் கயிறறிற் கட்ட லானநா னவர தீனம்
என்பதை யன்றி வேறே யிலையென மறையோ ரெல்லாம்
பன்பல வேத மெல்லாம் பதீதபா வனனென் றுன்னை
இன்புட னுரைப்ப தெங்க ளிடத்தின்று விளங்கிற் றென்றார். (ரகூசு)

பரமபா வனவின் றுன்னைப் பார்த்தது போல நேகம்
தரமுட லெடுத்த போதுந் தயங்கயாம் பார்த்தல் வேண்டும்
கிரமுற நினது நாடிஞ் செப்பவும் வேண்டு மிந்த
வரமருள் கென்ற வநத மறையவர் தம்மை நோக்கி. (ரகூஎ)

சிரித்தருள் செய்தன் ருரைச் சேர்த்துமார் பழுந்தப் புல்லித்
திருத்திய ஞானதேவர் சேவடி யடைந்து நீவிர்
பரித்திர் மெய்ஞ் ஞான மென்று பகாந்தனன் பகரக் கேட்டோர்
மிரித்தது புரிது மென்று வணங்கினார் மீண்டு மீண்டும். (ரகூஅ)

ஞானதே வேநீ ரிந்த நான்மறை யவர்கட் கெல்லாம்
ஊனமி லுபதே சஞ்செய் தருளுக வெனவு ரைத்தான்
சானகி ரமணன் ஞான தேவருந் தாள்வ ணங்கி
ஈனமில் சொரூப சாக்ஷாத் காரத்தை யெல்லோ ருக்கும். (ாகூகூ)

இதவுப தேச மாக வியம்பினர் தலைமேற் கைவைத்
துதவிய பொழுதெல் லோரு முற்றன ரக்ஷ யத்தை
நிதமரி பசனை செய்து நிருமலன் றனைச்சே வித்து
நுதலிய தடைதீ ரென்று துவன்றனர் ஞானதேவர். (உா)

சிறிதுநாட் சென்ற பின்பு சீர்கொள்விட் டலன்பாற் சென்று
நெறிதரு மவன்றன் பாத நேர்நின்று வணங்கித் தேவா
அறிவுற வெனக்குத் தஞ்ச மாகநற் சமாதி நல்கென்
றுறிதிகொ டுரைப்பக் கேட்டங் குணர்ந்துவிட் டலன்சொல் வாளுல் (உாக)

எனக்கரும் பிராண ஞகி யிருக்கின்ற ஞான தேவா
உனக்குவேண் டியதை யானே வுதவுகின் றேனென் றேதி
மனக்கித மாக மிக்க மங்கல சுபதினத்தில்.
தனைத்தொழுந் தாச ரெல்லாஞ் சார்ந்திட வரவ ழைத்து. (உாஉ)

கீர்த்தனம் பலவும் பாடக் கிளர்திரு விழாவுண் டாக்கிச்
சீர்த்தநல் லுண்டி யாதி செயுஞ்சிறப் பெல்லாஞ் செய்து
தீர்த்தரா கியசா துக்கள் சேர்வுறீஇ ஞான தேவர்
போர்த்தினி தாகச் சூழ்ந்து போந்திடத் தானும் போந்து. (உாங)

இந்திரா யணிக்கூ லத்தி லியலளிக் கியெனு மூரில்
வந்துசெத் தேசு ரன்றான் வளர்திருக் கோயின் மாடு
பைந்துண ராரு ஜாது பாதவத் தடியி னின்று
செந்திரு நாதன் யார்க்குந் தெரிவுறச் செப்பு கின்றான். (உாச)

கார்த்திகைத் திங்கண் மேவுங் கண்ணப க்ஷத்தி லோங்குஞ்
சீர்த்திசே ரென்றி னத்திற் சேர்வன்யான் வருடந் தோறும்
தீர்த்தமா மிங்கென் றேதத் தெரிந்துள சனக ராதி
மூர்த்தியா முனிவ ரோடு முந்தரி தாசர் சூழ்ந்து. (உாடு)

ஹரிதிரு நாம கோஷ மார்த்திட வாத்தி யங்கள்
புரிவுற முழங்கத் தேவர் பூமழை பொழியக் கண்ணன்
திரிபிலா துணர்ந்த ஞான தேவர்க்குச் சமாதி தந்து
பரிவினு னுளங் குற்றப் பண்டரி புரத்தைச் சார்ந்தான் (உாசு)

சிற்சில நாள்க ளங்குச் சென்றபி னுமதேவர்
பொற்புறு ஞான தேவர் பொருந்தரும் பிரிவி னுலே
அற்பக லனுத பித்தா ராகிய செயலைத் தேர்ந்து
விற்பொரு விமானத்தேறி மேவினர் ஞான தேவர். (உாஎ)

வந்துவிட் டலனை நேரே வணங்கிப்பின் னுமதேவர்
முந்ததி சயிப்பக் கண்டு மொழிந்தவர் மனவ ருத்தம்
பிந்துறப் புரிந்தங் காறு பெறுமதி யிருந்து போந்தார்
அந்தமில் லவரைத் தியானிப் பவர்களுக் கருள்செய் துற்றார். (உாஅ)

இவ்வித நிவிர்த்தி தேவர்க் கினிதுதிரி யம்ப கத்துஞ்
செவ்விய வியற்சோ பான தேவர்க்குத் தகுதி யாக
ஒவ்வுசம் வச்ச ரத்து முவந்திடச் சமாதி தந்தான்
திவ்விய நலஞ்செய் பாண்டு ரங்கனுந் தீர்த்தன் மாதோ. (உ௯௬

ஞானதேவர் திருவடிகளேசாணம்.

ஆக சரித்திரம் ௯-க்கு செய்யுள் ௮௯௬.

முற்றிற்று.

கூர்மதாசர்சரித்திரம்

சூரியன்றனித் தோர்விடு தொன்மையர்
நேரில் மாலரி நாமநி னைப்பினர்
ஏரி லேய்பிர திட்டான மென்பதோர்
ஊரில் வேதியர் சாதியி லுற்றனர். (க)

ஏர்கொள் கால்களி லாமற் பிறந்தவர்
கூர்ம தாசரெ னப்பெயர் கொண்டிடச்
சார்வ தாகியத் தாய்தந்தை தம்வயிற்
சீர்சி றந்திடச் செல்வர் வளர்ந்தனர். (உ)

சீர்த்த தானவவ் வூரிற் சிறந்தரி
கீர்த்த னங்கள் கிளத்துகின் றோர்வயின்
ஊர்த்த டைந்தன ருத்தம காமத்தி
லார்த்த வன்பின ராகி யனுதினம். (ரு)

கேட்டு வந்தனர் கேட்புதிற் பண்டரி
நாட்டு மான்மிய மூந்நவில் வோர்களால்
ஈட்டு மின்பத் தழுந்தி யிருகரம்
கூட்டிக் கும்பிட்டுக் கூறத் தொடங்கினர். (ச)

தொடர்வின் விட்டலன் மெய்ப்புகழ் சொல்லுவீர்
முடவன் பண்டரி போக முடியுமோ
கடவு தென்னெனக் காகுத்தன் றூசர்கள்
திடமெ லாமுளேம் யாங்கள்செல் கின்றிலம் (கு)

நீசெ லற்கெங்கு னேருமென் றேநகை
தெசு றப்புரிந் தாரது தேர்ந்தவர்
மாச றுத்தொளிர் மாதவன் பண்டரி
நேச மிக்கது நேர்வதின் றேயெனு. (கூ)

அனுத பித்தங் ககன்றனர் சின்னெறி
நனிந கழ்நகுந லந்திகழ் மாருதி
சினக ரத்துத தெழும்பசி தாகத்தால்
மனமி ளைத்துவ ருந்திவி ழுந்தனர். (எ)

சீவு ரட்சக னேதிகழ் பண்டரி
மேவு முத்தம னேயினி வேறிலர்
காவல் செய்பவர் நீகளே கண்ணதாய்
ஆவல் கொண்டெனை யாண்டிட வேண்டுமே. (அ)

என்று தோத்திரஞ் செய்தன ரேத்தலும்
நன்று பண்டரி நாதன யந்தனன்
ஒன்று வேதியனாகியங் குற்றனன்
நின்று நீரொங்கு நேருதி லென்றனன். (க)

பண்ட ரிக்குப படரும கருத்துளேன்
அண்டி னேனெனை வன்னவர் கூறலும்
கொண்டல் வண்ணனுங் கூடி னதுதுணை
மண்டெ னக்கென மாமகிழ் கொண்டனன்- (ஙு)

எய்துங் காலில னாகிய வென்றுணை
நொய்து மற்று நுமக்கிய லாததே
ஐது கூம்பெய ரேதுரை யீரென
வெய்தில் விட்டல னென்பெய ரென்றனன். (ஙக)

இன்னும பண்டரி யிற்கடை வைத்துளேன்
துன்னு கின்றன னங்குத் தொடர்ந்துமை
நன்னர் மெல்ல நடப்பவன் யானென
மன்னு கூரும தாசர் மகிழ்ந்தனர். (ஙஉ)

அட்டுப் போகக மன்பினீ ருண்டிட
இட்டுப் பண்டரி யெய்து மளவுநான்
முட்டில் லாமலி யற்றி முயங்கிடம்
கிட்டு வேன்முந்தி யென்று கிளத்தினன் (ஙகூ)

அன்றி ராவவ ரோடு மமர்ந்துகீழ்
என்று தோன்றுமு னேயெழுந் தேகுநீர்
சுன்றி டும்வழி நீதெனச் சொல்லியே
சென்று பேரச்செய்தேமறை வாயினன் (ஙச)

தாசர் தாமுந் தவழ்ந்தொரு தங்கிடம்
தேச நுங்கதிர் பாடுறச் சென்றனர்
நேச ஞனநி மலனு மவ்விடத்
தேசி றந்துவந் தின்னமு தூட்டினன். (௩௫

வாவி சேரி வசதியில் லாவிடம்
மேவி லங்கவர் மேவவ மைத்துடன்
தாவி லாமதி நான்கு தவழ்ந்தவர்
ஆவ லோடு லகுளையை யண்மினர். (௩௬

அன்று கார்த்திகை யான தசமியாய்
நன்று நாளை யேகாதசி நண்ணிடச்
சென்று சேருவர் செல்லுவோர் பண்டரி
என்றி யான்செல்வ தென்றுளத் தேங்கினர். (௩௭

கண்ணனே முகில் போலுங் கருநிற
வண்ணனே பொன் மகிழுங் கொழுநனே
எண்ண னேரு மிறைய வனேயுனை
நண்ண கிற்கில ஞளையு நானரோ. (௩௮

என்செய் கேனென் றிருகரங் கூபபியே
முன்செ றிந்தவர் தம்முன் மொழிந்தனர்
பொன்சி றந்த புகர்நிறத் தெம்பிரான்
தன்சி லம்படி காணுந்தகவிலேன் (௩௯)

ஆத லாலிவ் வனுதன் மிசைத்தயை
மாத வன்செய்திங் கேனும்வந தன்புடன்
தீதில் சேவை தரும்படி செப்புவீர்
போது வீரென நன்றென்று போயினர் (௪௦)

ஞான தேவர் முதலிய நால்வரோ
டான நாமரு மந்தவி சோபரும்
கான மோடரி நாமங் கழறியே
ஏனை யன்பர்க ளோடினிதாடினர் (௪௧)

பாண்டு ரங்க னவர்தமைப பார்த்தருள்
காண்ட வேயெனக் கின்னுயி ராமிந்த
மாண்ட ஞானநன் மாதவர் முன்னவர்
பூண்ட தானவி ராகப் பொருப்பரோ (௪௨)

ஆன்ம போதக ராயருள் கின்றசோ
பான தேவர்வி சோபர்பண் பாகிய
ஞான யோகிய ரானநல் லன்பரோ
ஊன மில்லவ ரென்னவு ணர்த்தினன் (௪௩)

எனது நாமஞ்சொல் வோர்களி லேமிகு
கனமு லாவிய காரண நாமர்க்கு
நனிநல் லன்புட னும நவில்வதால்
இனிது நாமதே வென்னத் தகுமென (௪௪)

அவரா மார்போட ணைத்துக்கொண் டானந்தம்
இவரு போது லகுளை யிருந்துமா
தவனன் னுமத்தை சாற்றிக்கொண் டேமிக
நவநல் லன்பர்கள் நண்ணினர் கோயிற்கே (உரு)

வந்து மாதவன் பாதம்வ ணங்கினர்
சிந்தை யன்புமி கச்சிறந் தேத்தினர்
மூந்து கூர்மர் மொழிந்ததை யெம்பிரான்
விந்தை கூர விளம்பினர் வேண்டினர் (உசு)

வினவி மாதவன் மிக்க விரைவுடன்
தனது பானின்ற தண்ணளி நாமரை
அனக ஞானநல் லோரைமிக் கன்பொடு
நனிவி ரும்பினன் நோக்கி நவிலகி ன்றான் (உஎ)

கூர்ம தாசன் குறித்தெனைக் காணவே
ஆர்வ மிக்குள ஞதலி னீவிரும்
வாரு மென்றுட னேகொடு மன்னினன்
சாரு நாமர் தமைவினை யாடவே (உஅ)

எண்ணி யவ்வழி யவ்விரு வோரையுங்
கண்ணி யொன்று கழறுகின் றான்மறை
நண்ணி நாளு நடங்கிளர் கின்றதாள்
மண்ணின் மீது வரவலி தாகவே. (உகூ)

மிக்க தாக விரும்பினன் யான்புனல்
புக்க துண்டு வருமள வும்புகுந்
திக்கடைக்க ணிருத்தி னொச்சொலித்
தொக்க தோர்கொடிப் பாதையிற் றுன்னினன் (௩௩)

சாவந் தியாமேள தாச ரரிபெயர்
ஓவதின்றி யுரைத்துக்கண் மூடியே
மேவு மெய்யவ சத்தொடு மேவிய
ஆவ யிற்சென் றவரா யுணர்த்தினன் (௩௪)

அவர்வி ழித்தனர் நோக்கின ரையன்றன்
நவவி சித்திர நண்ணிய மேனியை
உவமை யற்றநீ யென்னுழை யும்வரத்
தவமி ழைத்ததென் னேவென்று சாற்றினர் (௩௨)

தழுவித் தாள்களிற் றாழ்ந்துமெய் யன்பினில்
முழுகி நின்ற வவர்முக நோக்கியே
அழிவி லோருரை யச்சுதன் கூறுவான்
வழுவி லீர்நான் வருவழி தன்னிலே (௩௩)

இருவர் சோர ரெனைத்தொடர் கின்றனர்
வெருவி யுன்வயின் மேவின னீயெனைக்
கரவு செய்கெனக் கண்ணிச் சிறிதுபோ
திரவி தன்னையெங் கேயொளிக் கின்றதே (௩௪)

அண்டம் யாவும் வயிற்றி னடக்கிய
கொண்ட லேயுனை யெங்குக் கொடுசென்று
கண்டி டாவகை செய்வது காணென
விண்டு ஞானம் விளம்பவிப் போதெனே (௩௫)

விரைவி லென்னை மறைத்தியென் றேவிளம்
புரைவி னவி யுசாவின ருள்ளத்தைப்
புரைத புத்துப் பொதிவதல் லாலொரு
தரையி லையென்று தன்றனி மார்பையே. (௩௬)

போழ்ந்த போது புகுந்தனன் மார்பிலே
வாழ்ந்தி ருக்க வயங்கு கொடிகளாற்
சூழ்ந்து சுற்றித் தொடுத்திருந் தார்வயின்
ஆழ்ந்தி ருந்தவ னங்கறை கின்றனன் (௩௭)

மெள்ள விந்தநல் வேளையி லேசெய்த
எள்ளி லாவுப காரத்துக் கென்செய்வேன்
வள்ள லேயொர்கை மாறிலை மற்றென்றான்
உள்ளமேவிய வொண்பொருளானவன். (௩௮)

ஆரவெங்கு மமர்ந்துமென்னுவிக்கா
தாரமான தயாநிதியேயெனை
நேரநின்றதற்கேதுநிரப்புவென்
சேரவென்று தியானித்திருந்தனர். (௩௯)

அங்கிருந்தவரான நன்னுமர்தாம்
எங்குப்போயின னெம்பெருமானெனுத்
தங்குகின்றிலர் சார்ந்தவன் வந்திலன்
பொங்குகின்ற நெடும்பொழுதாயிற்றே (௪௦)

என்றுமற்றவனெய்தடி நோக்கியே
சென்றிச்சாவந்தியாமேளர்சேரிடம்
நன்றுதாழ்ந்திங்கு நண்ணியநாதனை
ஒன்றிக்கண்டதுண்டோவென்றுரைசெய்தார் (௪௧)

மோனமொன்று மொழிந்திலராயுற
லானபோதிவர் மார்பிலமர்ந்தனன்
பானம்வேண்டும் பரமன்றனையிவர்
தான்விழுங்கிய தெப்படித்தானெனு (௪௨)

காணுனுது கரந்தனையாயினி
யாணரிப்பொழுதேயுயிர் மாய்வன்யான்
மாணவந்தெனைக்காவெனமாதவன்
எணகத்துளே னெவ்வகை யெய்துவேன். (௪௩)

என்றுமெள்ள விசைப்பதுகேட்டனர்
கன்றிமெத்தக்கதறியழுதனர்
துன்றியுள்ளுறை சோதிதனைக்கொண்டு
நின்றதாசரை நோக்கிநிகழ்த்துவான். (௪௪)

என்னைக்கண்டிலனாகி யிந்நாமன்றான்
மன்னப்பட்டனன்றுன் பத்தில் வைத்தநீர்
நன்னர்க் காட்டுநீர் நாமன்றனக்கெனை
என்னக்கேட்டவா நாமர்க்கிசைக்கின்றார். (௪௫)

வருந்தன்மின்னென மாலுக்குநாமர்க்கும்
பொருந்துதண்ணளியுமனபும பொங்குதல்
தெரிந்துமற்றவர் தேறவழித்தனா
வரிந்திருந்த கொடிகளை மால்வந்தான். (௪௬)

கண்டுநாமா களிந்துகழல்பற்றிக்
கொண்டு நின்றனர் தம்மைத்தழீ இக்கொடு
தொண்டர் கண்ணீர் துடைத்துத்திருத்தினன்
அண்டி டந்தந்த வன்னவரோடுபின். (௪௭)

ஞானதேவரு நாமருஞ்சேரவே
ஆனகூரும தாசரகத்துறத
தானினைந்து தழீ இக்கொடுசார்ந்தனன்
மேனிகழ்ந்தலகுளை விமலனே. (௪௮)

சார்ந்தசேதியைக் கூரும்தாசரும்
நேர்ந்துகண்டு நெடிதுபணிந்தன்பு
கூர்ந்துதோத்திரஞ் சொல்லிக்கொண்டாடினர்
ஆர்ந்த நான்குகையாலுமணைத்தனன். (௪௯)

யாது நல்வரம்வேண்டு மெனச்சொல
மாதவன்றனை நோக்கிமகிழ்ந்திவண்
நீ தயங்கி நிலாவுகநாடோறும்
காதலோடெனக்கட்டுரை செய்தனர். (௫௦)

பாண்டுரங்கனு நன்றெனப்பாங்குடன்
ஆண்டும்பண்டரி யாகவமர்ந்தனன்
வேண்டுநண்டு விரிச்சிகமாமதி
ஈண்டுகின்ற வெகாதசிதன்னிலே. (௫௧)

லகுளைதன்னினு நல்லன்பர்யாவரும்
மிகுவிருப்புடன் வேண்டிவிமலனைத்
தொகுதிகூடித் தொழுது துதிசெய்வார்
தகுவதாகத் தனிநடஞ் செய்தரோ. (௫௨)

கூர்மதாசர்திருவடிகளேசரணம்

ஆகசரித்திரம் (எ) க்குச் செய்யுள் (அகக)

முற்றிற்று.

ராகாகும்பார் சரித்திரம்.

வயிராக சிரோன்மணியாய் வருராகா கும்பாராதாம்
செயிரதீருங் குசராத்தி தேசதிற் சோகுயவா
பயில்வாழ்க்கைத் துணையான பாங்காபா யிமனைவி
உயிர்போலு மகள்வங்கா வுடனேபண டரிவாழவா. (க)

நவபாண்டஞ் செய்துவிற்று நண்ணுவதால் சீவிபபார்
உவமையிலா வரிநாம மோதிவெகு நாள்வாழநதா
தவநேயத் தொடுவாழ்வு சார்ந்தவொரு நாடனிலே
அவர்புரிந்த பச்சைமட்பாண் டங்காய வதுதனிலே (உ)

ஓர்பூனை மூன்றுகுட்டி யீன்றதனுள் ளேவைத்து
நேர்பாலங் கிரவுக னேயமுந்று நோந்தளிததுச
சார்போதி விரைக்காகத் தான்பிரிந்த காலததில்
ஆர்சாலைச் சுடும்பாணடத் தொடுகுட்டி யழவிட்டா. (ங)

குட்டியிருப பதுதெரியாக் குயவரழல் மூட்டிவிடக்
கிட்டியது தாய்பபூனை குட்டிச்சால் கிடையாமல
மட்டறுதுன் பத்துடனே வலிந்தழுது கத்துதறுன்
சுட்டிடுகூனையிலிருந்த குட்டிசெவி களிற்றெடர. (ச)

கேட்டவையுங் கத்தவது கேட்டிதுவுங் கத்தவுங்நன்
மாட்டியரா காதெரிந்து வயிற்றுமுகத் திலுமோதி
நீட்டுதய ரொடுமனைவி முகநோக்கி நேயமிக
நாட்டுகுட்டி யிருப்பதனை நான்றெரியா தேயிட்டேன். (ரு)

கூனையின்மட் சாலதிலே யிருந்துகுட்டி படுதுயரும்
கோனையுணர் மார்ச்சாலத் தாய்புணருங் கொடுந்துயரும்
வேனையருள் பாண்டுரங்கன் விலகவருள் செயவேண்டும்
வரனையிலேய் கண்மடவா யெனவருந்தி மயங்கினர். (சு)

எரிந்துறுகு னையைச்சூழ்ந்து வரும்பூனை யிசைகேட்டும்
பரிந்துவிழும் பதிதுயரைப் பார்த்தும்பாங் காபாயி
கரிந்துவிழுங் கொடிபோலக் கதறியழு துடன்வீழ்ந்தார்
தெரிந்தருளப் பாண்டுரங்கன் றிருவடியை நினைந்தழுதார். (எ)

பண்டரிநா தாபக்த பாலனருக் மணிரமணு
அண்டியபாண் டவுரரக்கு மாளிகையி லவியாதும்
தொண்டர்பிர கலாதரெரி துனைந்துமடி யாதுமருள்
பண்டரிக நயனத்தாய் பூனைக்குட்டி களைக்காப்பாய் (அ)

ராகாகும்பாசரித்திரம்

காப்பாயே லினியிந்தக் கடுந்தொழிலாஞ் சுடுந்தொழிலை
நீப்பாவே னெடுமாலே யெனவேண்டி நெடுங்கண்ணீர்
வாய்ப்பாக மனைவியொடு புரண்டுமண்ணில் வருந்தியரி
பேர்ப்பாடல் புரிந்திருக்க விரண்டுநாள் பின்னிட்டு. (கூ)

மூன்றுநாள் நெருபபாறி முடிந்தபின்பு குட்டிகளும்
தோன்றுதுள் ளிருந்துகத்தச் சூழ்ந்துறுபூ னைபுங்கத்தச்
சான்றுரு மனைவியருஞ் சார்ந்தோடித் தாம்பார்க்கக்
கூன்றுழி வேவாதொன் றிருந்தகுட்டி களைக்கொண்டு (ஏ)

கண்டுமிகு களிகூர்ந்து மூன்றுநாள் பால்காணா
தண்டுகுட்டி களைநோக்கி யனுதபித்துப்பாண்டுரங்கன்
மண்டுதயை புரிந்ததனை மனத்துணர்ந்து தாமிகவுங்
கொண்டகொடுந் துயர்கடிந்தா ரவைகண்டு கொண்டுறார் (ஐக)

இருவர் பத்தி தனை வியந்தா ரித் தொழிலை விடுவெனென்று
திருமகளு யகனறிய வேண்டியதாற் றீர்துமென
மருவியவத் தொழில் விடுத்து மறையவர்க்கெல் லாமளித்துத்
தருவிறகு காட்டில் விழுந் தவை திரட்டித் தாங்கொண்டு (யஉ)

விற்றதிதி களுக்கீந்து மிகுந்த வற்றைத் தாமுண்டும்
நற்றுறுபண் டரிவாழு நாதனது திருநாமம்
சொற்றுறுகுப் பையிற் கிடக்குங் கிழிந்ததுணி களையெடுத்து
மூற்றுறமூ டுவர்மானங் தெரிவதனை மூதுரார் (யகூ)

பார்த்து லகத்தவர் தெய்வம் பரவிமகன் பொருள்வேண்டல்
தீர்த்திவர்கள் வேறேயோர் சீவனுக்காத் தொழில் மறுத்துக்
கூர்த்தசெய னன்றென்று குறித்துமிகக் கொண்டாடச்
சீர்த்தவொரு நாள் வங்கா வீமநதிக் கரை சேர்ந்தாள் (யச)

அப்புனலி னுமதே வருள் புதல்வி யாடை தனைத்
தப்பினளங் கிருக் கவுங்காத் தான் மூழ்கிப பூசைசெயத்
துப்புடன்மற் றவள் துவைக்குந் துளிதெறித்து மேற்றுவ
இப்படி நீ தப்புவது மியல்போ சொல் லெனவவளும் (யரு)

பாண்டுரங்கன் றனைவேண்டிக் காமியத்திற் பரிவுகொண்டு
வேண்டுகுலத் தொழி லதனை விடுத்து நெறி தப்பியலைந்
தீண்டுகுயச் சாதிகட்கு மேற்குமோ பூசையென
ஆண்டுவங்கா வுனது தந்தை யழுதுவிட்ட லன்றன்னல் (யசூ)

செத்தபசுத் தனை யெழுப்பச் செய்ததுகா மியமலவோ
உய்த்துரைத்தி யெனவொருவர்க் கொருவர் மிக வாதாடி
மெத்தமுனிந் தவரவர்தம் வீடடைந்தார் நாமருந்தம்
சித்தமகிழ் கோயிலின்று திருமனைமே வியபின்பு (யஎ)

ராகாகும் பார்பயந்த நற்புதல்வி யுமை மிகவும்
ஆகாத தூஷணைக ளறைந்தனளென் றவளுரைக்க
வாகான நாமதே வருஞ் சிறிதி யோசித்தீ
மாகாள முகிலனை ... வளர் கோயில் மீண்டுவந்து (யஅ)

நாதா நின் னடியரெனும் ராகாகும் பாருன்பால்
தோன காமியரோ சிறந்துளநிட் காமியரோ
யாதான தவர் கருத்தை யறைதியெனப் பாண்டுரங்கன்
மேதாவி யானவுவன் விழைவறுநிட் காமியனே (யகூ)

எனநகைத்துப் புகன்றருள வெம்பிரா னவர் பெருமை
தனையெனக்குக் காட்டுகெனத் தானுருக்கு மணியுடனே
வினவியுநா மனையழைத்துக் கொடுபோந்தான் விறகேடுமெ
வனமதனி னடுப்பகலில் வந்துரா காகும்பார் (உய)

மண்ணிலுயிர் மாயாமல் மற்றவர்தந் தேவியொடு
நண்ணுவதுந் தனிவிறகு நாடுவது நனிதெரியக்
கண்ணிவந்த நாமருக்குக் காட்டவவ ரும்மிவரைப்
பண்ணுகசோ தனையென்னப் பதுமைகர கங்கணத்தை (உக)

ஒருபுறத்தில் கிடத்தியதன் மேலுலர்ந்த விறகதனை
மருவவைத்துத் தூரத்தே மறைந்திருக்க ராகாவுந்
தருவிறகு தனைத்தேடி வரும்போது தாங்கண்டார்
வெருவிமிகத் தூரத்தே விலகிநிற்க வேண்டுவார் (உஉ)

விறகுடனே கங்கணத்தை மேவியதம் மனையவளுக்
கறிவுறுத்த வேதோதீ தாயிற்றென்றவர் வெருவி
அறவிலகி யப்புறத்தே யகல்வதுகண் டந்நாமர்
நறவொழுகு துளவினனை நன்றுபணிந் துரைசெய்வார் (உரு)

கருணைவழி வுறுகண்ணு காகுத்தா நினதடியை
மருவுறுரா காகும்பார் மன்றநிச பத்தியுளோர்
அருளுதிநின் சகுணவடி வதைக்காண வெனவேண்டத்
திருமருவு மணிமார்பன் சிரித்தொன்று செப்புகின்றான் (உச)

நானிந்த ராகாகும் பார் நடக்கை தனைச்சொன்ன
தானதுவோ வில்லையோ வறைதியின்ன முங்காண
மானநினை வுளதோசொல் லெனவுக்க மற்றையவர்
ஊனமிலா ராகாவுக் கொருவருநே ரின்றெனவே (உரு)

ஓவறுசீ ருருக்குமணி யொடுநாம ரொடுகூடி
மூவரும்ரா காகும்பார் முன் வந்தங் கிருவருக்குந்
தாவிலருள் செய்து நிற்கத் தாள்பணிந்து சேவித்தார்
ஆவலுடன் ராகாகும் பார் மனைவி யுடனடைந்தே (உசு)

ராகாகும்பார் திருவடிகளேசரணம்

ஆக சரித்திரம் அ-க்கு செய்யுள் கூடிஎ

முற்றிற்று.

கோராகும்பார் சரித்திரம்.

சோதிக மூரி லெல்லாஞ் சிறந்துள தேர டோகி
ஊரதனிற் கோரா குமபா ரொருவரில் வாழ்க்கை மேவி
நேர்தர வுண்ணும் போது நிலைகொடு கடக்கும் போதுஞ்
சார்தர விருக்கும் போதுந் தனித்தவ ரொழுமப் போதும (க)

பிரபஞ்ச விவகா ரங்கள் பேணுறு பொழுதும் பாண்டம்
திரமுறச் செய்யும் போதுஞ் சிரமந்தீர் பொழுதுந் தம்முள்
விரவுறப் பாண்டு ரங்க விமலனை யிடைவி டாமல்
பரிவுடன் றியானஞ் செய்து பசனையுஞ் செய்து வாழ்ந்தார் (உ)

ஒருபக லிவர்க்கு முன்னே யூர்தரு சேயை விட்டுப்
பருகுநீர் கொண்டு மேவப் பாரியார் போக வன்னார்
மருவுமுற் றத்திற் சேர்த்து மண்மிதிப் பதனுட் சேர
வருமொரு சேயை நாமம் வழுத்திமெய் மறந்தா ராகி (ங)

படருமண் ணோடு சேர்த்து மிதித்தவர் பரிந்து நிற்கக்
குடமுடன் வந்த பாரி குழவியைக் காண்கி லாராய்த்
திடமுட னரிநா மத்தைச் செப்பினர் தியானந் தன்னால்
அடையுமா னந்த பாட்ப ராயவ சத்த ராகி (சு)

மண்டனை மிதித்து நிற்கும் வல்லவர்தம்மை நோக்கிக்
கொண்டபாற் குயங்கள் பொங்கக் குழவியெங் கேயென் றேங்கி
மண்டின குருதி யோடு மண்ணோடு மிதிக்கப் பட்ட
துண்டமா முடலுங் கண்டு துணுக்கென மார்பில் மோதி (ரு)

புவியின்மே லலறி வீழ்ந்து புறண்டழு தாகு ழந்தாய்
அவிதர லாயி னுயோ ஐயயோ கொஞ்ச மேனுங்
குவிநினை வின்றிச் சேர்த்துக் குழவியை மிதித்துக் கொன்றீர்
இவிடம்விட் டெங்கே னும்போ யிறந்துநீர் படுதி யென்றார் (சு)

மனைவியார் கடின வார்த்தை வழங்குதல் கேட்டுச் சற்றே
நினைவுவந் தெனதுள் ளத்தே நிலைத்தவை குந்த நாதன்
றனைவிகா தஞ்செய் தேநீ தவிர்த்தனை யன்றோ வென்று
சினமிகத் தண்டங் கொண்டு தேவியார் தமைய டிக்க (எ)

அருகுறும் போதி லென்னை யழகிய விடலனாணை
மருவுறத் தீண்டல் செய்யா திருக்கநீ யென்ற வார்த்தை
வெருவுறுத் திடக்கேட் டாங்கே விரைவிலர் பொறுத்தி ருந்தார்
தெரிவுற லாகி யூரார் திரண்டனர் வந்து கண்டார் (அ)

சேற்றிலே குழந்தை சாவச் செய்ததென் வந்து பார்த்தோம்
கூற்றெனக் கோரா கும்பார் குழவியைக் கொல்வ தான
மாற்றரு வெறியெவ் வாறு வந்ததோ வென்பார் சில்லோர்
தோற்றின னுனக்கு நன்றே பதியெனச் சொல்வார் சில்லோர் (க)

அரிநினை வாயி லேது மறிவின்றிச் செயுமோ வென்பார்
தெரிவுறு சில்லோ ரென்ப திவையெலாஞ் செவியி லேறார்
விரிமுகச் சீய நோக்கி வெறுத்தநாய் குரைத்தல் கேளாப
பரிசெனக் கோரா கும்பார் பாண்டுரங் கனைச்சிந் தித்து (ம)

பசனைசெய்திருக்க மற்றை நாளந்தப் பாரி யாரோ
நிசமுற மனத்தி லுன்னி நேசமெய்ப் பதிக்குநேரோ
வசையுறப் பேச லான வார்த்தையை மகிழ் நருக்கு
நசையுறத் தாள்வி ளக்கப் புனல்கொடு நண்ண வந்தார் (யக)

கண்டகோ ராகும் பார்பின் னிகழ்ந்தன கருதி மின்னே
பண்டரி நாதனுனை பகர்ந்தனை தொடக்கூ டாதென்
றுண்டது விருக்கத் தீண்ட லுறுவதோ வெனக்க டுத்தார்
அண்டிய மனைவி யாரு மகவின்மே லாசை யாலே (௨)

மற்றொரு மணஞ்செய் தேனும் பதிக்குநன் மகறுண் டாகப
பெற்றுறத் தந்தை தாய்வாழ் பெருமனைக் கேகி யன்னா
நற்றுற வணங்கித் தன்னை நாதனா மறுத்து நின்ற
பெற்றியால் பிள்ளை வேண்டிப பின்னவட் டருகவென்றார் (௩)

நன்றென வவரு நேர்ந்து நல்லநாள் கருதிப்பின்னை
மன்றலர் குழலி னாளை மணஞ்செய்து கொடுக்கும் போது
நின்றகோ ராகும் பாரோ நீரிந்த மூத்தா ளான
பொன்றளிர் மேனி யானைப் போலிவ டனையும் போற்ற (௪)

வேண்டுமென் றுறவி னோர்கள் விருப்புற வழங்கப் பின்பு
பூண்டகோ ராகும் பார்முன் போற்றிய விரதம்போற்றித்
தீண்டிலர் இனையார் தம்மைத் தேர்ந்திலை யவரக் காட்டு
மூண்டது நினக்கெவ் வாறோ வெனக்கதே முடிந்த தென்றார் (௫)

பின்னவ ருரைப்பக் கேட்ட பெரியவ ரவரைத் தேற்றி
நன்னரந் நாளி னேரு நடுநிசி நாதர்தூங்கு
மன்னிய வணையிற் சார வந்திரு புறத்துந் தூங்கத்
துன்னினர் தாமுங் கூடத் துயில்படவர் கைக டேக்கி (௬)

இருவரு மிரண்டு மார்பு மேற்றின ரிருக்க வன்னா
திருவிழி மலர்ந்து நோக்கித் தீர்ந்ததே விரதந் தீண்டி
யரிவையர் தம்மை யென்னு வருவருத் தயில்வா ளாலே
ஒருகையைத் துணித்து மற்றை யொருகையை வாள்வா யூன்றி (௭)

துணித்தன ரிருக்கக் கண்ட தோகைய ரிருவர் தாமும்
மணத்தது சேய்வேட் டன்றோ வாய்ந்தது கைபோ தற்கோ
புணர்ப்பதிங் கினியென் னேயென் றலறினர் புலம்பி நைந்து
நணித்துநங் குடும்ப மெங்ங னடக்குமென் றழுதல் கண்டு (௮)

அன்பரா யாதரிப்போ னுகியபாண்டு ரங்கன்
இன்பொடு துணைசெய்வானு யிருக்கமற் றென்னே நீவீர்
துன்புறு கின்ற தென்று துணைசெய்விட் டலன்ற னுமம்
மன்புதா மமிர்தந் துய்த்தா லெவ்வகைப பிணியு நீங்கும் (௯)

என்றவர் தம்மைத் தேற்றி யிணையிலாக் கோரா கும்பார்
நன்றரி பஜனை கூறி நண்ணுநா ளாடி மாதந்
துன்றெகா தசியிற் பாண்டு ரங்கனைத் தொடர்ந்து சேவை
மன்றவா னந்தங் கொண்டு மனைவிய ரோடு வந்தார் (௨௫)

சுந்திர பாகை யென்னுந் தடநதி தன்னி லாடி
முந்து புண்டலிகர் தம்மைத் தொழுதனர் முழுதும் வாழ்த்திச்
சுந்தர விமல னுளந் துலங்குபண் டரியைச் சூழ்ந்து
வந்துறு கோயில் மேவி மாதவன் றனைச்சே வித்து (௨௬)

தழுவினர் தொழுது நிற்கத் தவலறு நாமதேவர்
குழுவொடு தாளம் வீணை மிருதங்க முதல கூட
வெழுமொலி யோடு கையி லுவணநன் கொடியை யேந்தி
நழுவலில் பாண்டு ரங்க னுமகீர்த் தனங்கள் பாடி (௨௭)

ஆடின ரதனைக் கண்டு தாமுந்த மங்கைத் தாளம்
போடுத லொடுசே வித்தல் பொருந்தமுன் கரங்க ளின்றி
வாடின ரரிநா மத்தை வழுத்தினர் நாணிக் கைகள்
மூடினர் நினைவு கண்டு முகுந்தனும் பாண்டு ரங்கன் (௨௮)

முன்புள படிக்குக் கைகள் முளைத்திட வருளிச் செய்ய
அன்பொடு கைகள் கொட்டிப் பாடினர் தொழுதா ராடி
இன்புறு தலையெல் லோருந் தெரிந்தனர் வியந்து நோக்கி
மன்பர வசத்த ராகி மருவுகோ ராகும் பாரை (௨௯)

தொண்டரிற் பெரிய ரொன்று தோத்திரம் பலவுஞ்சொல்லி
மண்டினர் கண்டு மூத்த மனைவியார்மலர்க்கை கூப்பிப
பண்டரி நாதா பத்த பாலன பதும நாபா
தண்டுளை வணிந்த தாமோ தரவெனத் தொழுதுவாழ்த்தி (௩௦)

கைவர வன்பருக்குக் கருணைசெய் கமலக் கண்ணு
மைவரு மேனி மாயா மகவின்றி வருந்து கின்றோம்
நைவது தெரிந்தி லாயோ நங்கண்மேற் கருணை யின்றோ
சைவலம் பொருவுங் கூந்தற் றூமகாக் கிழத்தி நேயா (௩௧)

என்றுளத் தழுங்க லோர்ந்தா னிந்திரை கொழுந னுங்கு
நன்றருள் புரியப் பிள்ளை நகழ்ந்துமுன் வருதல் கண்டு
பொன்றின பிள்ளை யென்னே பிழைத்தது புதுமை யென்னத்
துன்றின தாய்கண் டோடித் துணைமலர்க் கரத்தி னேந்தி (௩௨)

மார்பிடை யணைத்துமேன்மேல் மகிழ்வுகொள்பொழுது மாயோன்
சீர்பெறத் தோன்றிக் கோரா கும்பாரைத் தெரிய நோக்கி
வார்குழ லிருவ ரோடு மகிழ்ந்தனைந் தின்று தொட்டுச்
சார்தரல் வேண்டு மென்று தகையறப் புணர்வு தந்தான் (௩௩)

அன்னதோர் புதுமை யெல்லா மறிந்தசே ரன்பர் யாரும்
பன்னுதோத் திரங்கள் செய்து பணிந்தனர் பாடி யாடி
மன்னினர் மங்க ளார்த்தி மகிழ்ந்தனர் புரிந்து வாழ்த்தித்
துன்னுறக் கோரா கும்பார் தொண்டைநா நோக்கிச் சொல்வார் (௩௪)

அன்பர்நீ ரெல்லாருஞ்சேர்ந் தடியனே னகத்து மேவி
இன்புறு கருணை செய்ய வேண்டுமென் றிரந்து வேண்டத்
துன்புறு தொண்ட ரெல்லா நன்றெனத் தொடர்ந்து போந்து
முன்பவ ரிருக்கு மில்லின் முயங்கினர் கோரா கும்பார் (கூ0)

பாத பூசனையே யாதிப் பண்பெலாம் பண்ணித் தக்க
வாதனங் கொடுத்தெல் லோர்க்கு மமைந்தபி னறுசு வைத்தா
மோதன் மருத்தி மற்று முளவுப சார மெல்லாந்
தீதற வியற்றி யாவுந் தீர்ந்தபின் ஞான தேவர் (கூக்)

நீரிவ ணுய்த்தல் செய்ய நிரம்பின ரான பாண்டத்
தோர்தரல் வேண்டுஞ் சுட்ட துஞ்சுடா ததுமென் றோத
நேர்தரக் கோரா கும்பா ரெழுந்துகை நிலைத்தண் டத்தால்
ஒரொரு வரையுங்கொட்ட வுணர்த்தில ரிருப்ப நாமர் (கூஉ)

தலையிலுந் தட்ட வந்த போதவ ரைத்த டுத்த
நிலையிலே பச்சைப் பாண்ட மிவரென நின்று நாக்கச்
சிலையிலேய் புருவ முக்தா பாயியுஞ் செப்பு கின்றார்
உலைவிலி ருமக்கெவ் வாறு தோற்றிய துண்மை யென்று (கூகூ)

மிகவும்வல் லீரென் றோத வினவினர் தாமெல் லோரு
நகைசெய நாம தேவர் நாணின ரெழுந்து நாதன்
அகமகிழ் கோயின் மேவி யலர் மகள்கேள்வன் றன்னை
முகமலர் பொலியக் கண்டு கண்கணீர் மொய்ப்ப நின்று (கூ0)

எனக்கவ மான மின்று நேரிட்ட விதனால் மிக்க
மனத்துய ரடைந்த தென்ன மாதவன்றழுவிக் கொண்டே
உனக்கியா ரேது செய்தா ருற்றதென் னுரைத்தி யென்னத்
தனக்குநே ரிட்ட தன்மை சாற்றுவார் நாம தேவர் (கூடு)

இன்றுநின் கோரா கும்பா ரெங்களைக் கூப்பிச்சென் றில்லில்
நன்றுண வளித்தி யார்க்குநன்கு ற வமைத்துத் தண்டந்
தன்றிருக் கரத்தா லேந்தித் தலைதொறும் புடைக்க யாரும்
ஒன்றையு முரைக்கா துற்றா ரோங்கின ரென்கம் மீது (கூஅ)

அதுகண்டு வீமங் கொண்டே யங்கையாற் றடுக்கத் தாசர்
இதுபச்சைப் பாண்ட மென்ன யாவரு நகைக்க லுற்றார்
விதுமுக முக்தா பாயி மிக்கெனைப் பகிடி செய்தார்
கதுமென வெழுந்து நின்பாற் கழறிட வந்தே னென்றார் (கூஎ)

திருமக னுதன் கேட்டுச் சிரித்துநீ யுபதே சத்தைக்
குருவையிற் பெறுத பெற்றி குறித்தன்பர் குழாத்து ணேர்ந்து
தெரிதரக் கோரா கும்பார் செப்பிய துண்மை யென்னப்
பரிவுறு நாம தேவர் பகவருவான் றொடங்கி னாரே (கூஏ)

பண்டரி நாதா வென்றன் பரிபவ மெல்லா நின்பால்
விண்டது மாறித் தேற வேண்டியான் வந்த தற்குத்
தொண்டரைப் போல நீயுஞ் சொல்லுத றகுமா வென்று
கண்டனி னீர்த தும்பக் கழறின ராகப் பின்னால் (கூகூ)

என்னுயிர்க் குயிரா யுன்னை யெண்ணியா னிருக்க வென்மீ
துன்னரு முதாசி னச்சொல் லுளைப்பது தக்க தன்று
நின்னது துவித பாவ நீங்கிட வாசான் றன்பால்
மன்னிய வருளைப் பெற்று மற்றெனை யடைதல் வேண்டும் (௧௩)

என்னலுங் கேட்ட நாம ரீசனே குருவை நாடித்
தன்னுறு பொருணீ நீயே தொலைவிலா தென்பா லென்று
மன்னயா னுன்னைக் காண மறுவிலா வுபதே சத்தைப்
பன்னிடக் குருவை நாடிற் பயனென்னை யென்று நாத்தார் (௧௪)

அவ்வுரை கேட்ட நாத னன்பரை நோக்கி நாமா
இவ்வுல கத்து முன்யா னிராமன்கண் ணுகத் தோன்றி
வவ்விய ஞான ரூப வசிட்டர்சாந் திபர் தம்மை
எவ்வமில் சரண டைந்தே யேற்றன னுன்ம ஞானம் (௧௨)

ஆதலா னீயிப் போதே யன்னது பெறுவா யாகிற்
சாதுசற் சனர்ம திப்புந் தத்துவ வழியுந் தோன்றும்
போதுதி யென்ன நாமர்பொன்னடி வணங்கி யெந்தக்
கோதிலாக் குருவைச் சார்வ தென்னலுங் கொண்டல் வண்ணன் (௧௩)

நளிர்நாரச் சடில நாகைநாதர்வாழ் கோயிறன்னில்
கிளர்ஞான வுருவி சோபா கேசர னென்போ ரங்கண்
வளர்வாரிற் சரண்பு கென்ன மால்பிரி வுன்னி யுள்ளத்
தளர்வோடு நடந்து கோயில் சார்ந்தனர் நாம தேவர் (௧௪)

சினகரம் புகவி சோபா செருப்புக்கா லிலிங்கமீது
நனியுற வைத்து றங்க நாடினர் திகைத்தெ னக்கென்
றநகனின் றெடுத்து ரைத்த வாரியன் போலுன் மத்தன்
கனவிலுங் காணே னென்று கருதிமுன் சென்று நின்று (௧௫)

ஐயதுஞ் சீர்த்தி கேட்டிங் கணுகயா னடாத செய்கை
வெய்யரும் பொருத தாமும் விபரீத வொழுக்கத் தாலே
துய்யதுஞ் ஞான மெல்லாந் தோன்றின தெனக்கென் றோத
மெய்யரு மடடா வென்னே தவறிக்கால் வீழ்ந்த தென்றும் (௧௬)

என்னுடல் மிக்க சோர்வுற் றிருப்பதா லவய வங்கள்
இன்னமோ ரிடத்தில் வைக்க வெடுப்பதற் கில்லை வன்மை
மின்னுறை நிறமா லன்ப மேவிய லிலிங்க மீதில்
மன்னிய காலைத் தூக்கி மற்றொரு பால்வைத் திரேல் (௧௭)

பொங்குப கார மாக வுறுமெனப் பொற்றா ணுமர்
அங்கையாற் றூங்கிப் பாங்கர் வைக்கவவ் விடத்தும் லிங்கம்
தங்குத லுேக்கி மற்றோர் தானத்து வைக்க வங்கும்
லிங்கமாய்த் தோன்றப் பாத நிலைகொள வைப்பதற்கு (௧௮)

எள்ளள விடமு மின்றி யெங்கணு மிலிங்க மாக
ஒள்ளிய பதங்க டம்மீ தேனுமூன் றிடுவோ மென்று
மெள்ளத்த னங்க நோக்க விளங்கின லிலிங்க மாக
வுள்ளத்து மிகவி யந்தங் கோய்வுறு வாரை நோக்கி (௧௯)

நெடும்பொழு தென்கா ரூங்கி நின்றதா லெனக்கு மிக்க
விடும்பையா யுளதென் காலை யிடுக வெற் றிடத்தி லென்னத்
தொடும்பத மேந்தி நாமர் தொழுது மெய்ஞ் ஞான வீச
தடம்பதந் தொடுமெ னக்குத் தாவர சங்க மெல்லாம் (ருஐ)

சிவமய மாகத் தோற்று கின்றதாற் சிறந்த பாதம்
எவணுற வைப்பே னைய வென்றுநற் றுதிப யின்றூர்
பவமறு ஞான வாசான் பதம்விடு மெனவெ மூந்து
நவமல ரபயக் கையை நாமர்தந் தலையில் வைத்து (ருக)

காதில்ஞா னமு தம்பு கட்டலுந் திருநி றத்தின்
ஆதிநா யகனு முள்ளத் தமர்தர வணைக டந்த
கோதிலா னந்த வாரி குளித்த னரசவ மாகித்
தீதிலாக் குருவைப் போற்றித் தெளிந்தனர் பின்போர் நாளில் (ருஉ)

பண்டரி புரத்துச் சென்று பாண்டுரெங் கனுக்கு முன்பு
தொண்டரோ டரிநா மத்தைச் சொல்லுநா மரைச்சீர் பொற்றூள்
புண்டரீ கத்துக் கங்கை பெற்றவன் புல்லி முன்னர்
இண்டவை ணவரை நோக்கி யினியிந்த நாமர் தம்மை (ருங)

சுடாததிப் பாண்ட மென்னச் சொல்விரோ வெனவி னவ
விடாதரி கீர்த்த னங்கள் விளம்பிய தாச ரெல்லாம்
அடாதினிப் பகர லென்னு வடையும்யார்க்கேனு மென்றுங்
கெடாதபே ரின்ப நல்குங் கிளரடி தொழுதுற் றூரோ (ருச)

கோராகுமபார்திருவடிகளேசரணம்.

ஆகசரித்திரம் (கூ) க்குச் செய்யுள் (கூஎக)

முற்றிற்று.

பரிசாபாகவதர் சரித்திரம்.

பண்டரியி லேவாழ்வோர் பரிசாபா கவதர்மலர்ப
புண்டரிகை யானரகு மாயியன்பர் பொருந்திமிக
மண்டி யவன் பிறுகருக்கு மணிதேவி முன்வந்து
கொண்டவரு ணிறைந்தவிழி கொடுபோர்த்து மற்றவரை. (க)

உதரமுற வணைத்துமத லாயுனக்கென் வேண்டுமெனப்
பதுமமக டனைநோக்கிப் பரிசாபா கவதரன்னே
இதமிகவென் சூடும்பத்தி னிடறின்றி யெப்போதும்
துதியுனையே புரிந்தடியேன் றொழுதிருத்த லேவேண்டும். (உ)

அருள்செய்க வெனப்பதுமை யக்கணத்தோர் பரிசக்கல்
ஒருநீகொள் கெனக்கருணை யுடனுதவி யிதுதினமுந்
தருமிரும்பெல் லாங்கனகந் தானாக்குந் தசுப்போற்றி
வருகவென வருள்செய்ய வணங்கிமகிழ் வொடுவாங்கி. (ங)

வந்துமனை யார்கமல சாமகிழ வவர்கரத்திற்
றந்துசெயும் வகையுரைப்பத் தடவுமிரும் பதுபொன்னாய்
முந்துறுத லான்மகிழ்வின் மூழ்கினரை நோக்கியிதைச்
சிந்துதல்செ யாய்பிறர்தஞ் செவியிலெனத் தெரிவுசெய்து. (ச)

மனைவியொடு மகிழ்ந்துருக்கு மணிதேவி தனைவாழ்த்தி
இனைவுசெயுங் கவிநீங்கி யெல்லோர்க்கு முன்போல
அனையருற வொருநாளங் கவர்மனைவி கமலசா
வினைதெறுசந் திரபாலக நிர்முகந்து மீளுங்கால். (ரு)

நாமதே வரதுமனை ராசாயி யெதிர்வருவார்
தாமவரை நோக்கியன்பு சார்கமல சாமின்னே
ஆமதுகொண் டேதிரும்பு மளவுமிங்கே நிற்கவென
மாமதுரச் சொல்லினவணிறுத்திமழை முகந்துவந்தார். (சு)

நிடியில்வருந் துறுகின்ற ராசாயிவிரைவறிந்தே
அடியில்வருந் தியகமல சாவன்பு மிகநோக்கிப்
படியிலெனக் கன்புமிக்க பாவாயுன் வளமதனை
கொடியிலுற மகிழ்வெனென நுவலுதற்கு மிகநாண. (எ)

கண்டுகம லசாவென்பார் ராசாயி கலந்தநட்புக்
கொண்டுறுவோ ரிடத்துவெட்கங் கூடாது மிகமகிழ்வு
மண்டுறவுள் ளதுவழங்க வேண்டுமென வுளநாணம்
விண்டுடனே ராசாயி விளம்புகின்ற தென்னென்னில். (அ)

எனகணவர் நாண்மான மிகந்துகுடும் பங்காப்பத்
தன்கணொரு நினைவுமின்றித் தரித்திரத்தாற் றளர்வுபடும்
புன்கணொன்றுந் தோன்றுமற் புகழ்பாண்டு ரங்கனடி
யின்கணன்பு தனின்மூழ்கி யேதுமறி யாதவராய். (கூ)

அன்னமுடன் வத்திரம்வேண் டாராகி யரிபசனை
நன்னயங்கொண் டேதிரிவோர் நடக்கைதனைக் கமலசா
என்னவகை யுரைசெய்வே னெனவுரைத்த ராசாயி
தன்னருமை முகநோக்கித் தயைமிகுந்து சாற்றுகின்றார். (௫)

உனதுபதி பசிக்கின்ற வுத்தமனு யோங்கொருவன்
றனதுமனத் தருள்கொண்டு தந்திலனோ மிடிதீரக்
கனகமது வெனவில்லை யெனக்கழறக் கமலசா
அனவிமலன் றனைப்பசித்தென் னுவதுமற் றென்கணவா. (௬)

தாயான ரகுமாயி தனைப்பணிந்து வாழ்த்துவதற்
காயார்க்குங் கிடைக்கரிய பரிசக்கல் லதையருளி
நோயான மிடிதீர்த்தா னுவல்பசனை யைக்கேட்டும
காயாத தருவினுக்குப் புனல்வார்க்கக் கடவதேன். (௭)

என்றுரைக்க ராசாயி யெழிற்கமல சாமின்னே
நன்றுமக்குத் தந்தகல்லை நான்பார்க்க வேணடுமென
இன்றுனக்குக் காட்டுகின்றே னெனதகம்வா வெனபபேசிச
சென்றுதம இல்லடைந்தார் தெரிவதற்கு ராசாயி. (௮)

கமலசா மனைவந்து காட்டுகென வக்கல்லை
விமலமனத் தொடுகாட்டி வீட்டிற்குக கொடுபோயுன்
னமலமனை தனிலுள்ள வயங்களிலே பரிசிதது
நிமலமுறு பொன்கொண்டு நீக்குதியுன் மிடியென்னு. (௯)

தந்திதனை யெவாகளுக்குஞ் சாற்றுதென் வயினுக
வந்துகொடு வெனபபோக்க மற்றவரும் வாங்கிவந்து
சொந்தமனை தனிவிரும்புசோதித்துக் கிடையாமற்
றந்தொழில்செய் கத்தரிகை யூசிகளிற் றுன்றடவி. (௧௦)

பொன்னுக்கி யதுகொணடு போனகஞ்செய் துறுபொழுது
நன்னும தேவர்வந்து நாயகிசெய் நலந்தெரிந்து
பன்னுளு மில்லாத படியேதிங் கெனவினவ
மின்னுர்மெய் யுரைக்கிலிவர் வெருள்வாரொன் றுறவெருவி- (௧௧)

நிகழ்ந்தபடி தனையறிநதெ னித்தமுநீ ரமுதுணடு
புகழ்ந்திரும்பண டரிநாதன் பொன்னடியை யெனவுரைக்க
மகிழ்ந்தருளா தேநாமர் மற்றதனை யுள்ளபடி
திகழந்துரையா யெனிலுண்ணேன் செபபுகெனத் தேவியரும. (௧௨)

வேறு.

உள்ள வாறுரை செய்யநன் குத்தமர்
எள்ள லில்பரி சக்கல்லை யீதியான்
கள்ள மின்றதைக் காணவென் றேதலும
தள்ள வஞ்சினா தந்தனா காணவே (௧௩)

குலவு நாமாகைக் கொண்டுகண் டன்னதை
நிலவு பாகை நெடுநதி நீத்தத்தே
வீலக லாக விடிதுவிட் டுக்கனாத
தலமி ருந்தரி தன்புகழ பாடினா (௧௪

அதுகண் டஞ்சிரா சாயியை யன்னது
கதுமெ னக்கரந் தந்த கமலசா
விதுப குப்பில் விடக்கொடுத் தாயிது
வெதுக டுபபதென் றெய்திக்க டுக்கவே (௨௩)

கூட்டி வந்து கொழு நரிருப்பிடங்
காட்டி யப்பரி சாபா கவதருங்
கேட்டி தெபபடிச் செய்யக் கிடைத்திரொன்
றூட்டி நின்றன ரன்னுரா சாயியே (௨௪)

அன்ன காலை யளித்த கமலசா
முன்ன நேர்படு வார்முக நோக்கியீ
தென்ன யான்முன ரீந்ததை யீகலா
துன்னு மாநதி வீசியிங் குற்றதே (௨௨)

என்று கூற வெதிர்ந்தவ ரிற்சிலர்
அன்று சீரரி தாசருக் காசையுந்
துன்று கல்லுஞ் சரியெனச் சொற்றனர்
நின்ற சிற்சிலர் நீதியன் றென்றனர் (௨௬)

ஒருவர் தம்பொரு ளைப்புன லுய்ப்பதோ
தரும நீதியென் பார்சிலர் தந்ததைப்
பெருகு மாநதி பெய்திலர் வஞ்சனை
மருவி யுற்றன ரொன்பார்சின் மாக்களே (௨௪)

அங்கு றும்பரி சாபா கவதர்தாந்
தங்கு நாமனா நோக்கித் தகுவதோ
எங்கள் செல்வமெ னுங்கலைக் கைக்கொடே
யிங்கி ருப்பதென் றின்னமுஞ் சொல்லுவார் (௨௫)

நீர்நி ராசையி னின்றவ ரொன்றிந்த
ஊர்க ளியாவு முளாக்க வரியடி
யார்கள் போலமைந் திப்படிச் செய்திடில்
நேர்வ தோவுமைச் சற்சனர் நீர்மையே. (௨௬)

எனலு நாம ரிவர்முக நோக்கிக்கோ
கனகை தன்னடி காதல ரேகன்னும்
மனம்வி ரும்பின் மடவினி டைக்கிடப்
பனபல் லாயிரம் பாய்ந்துகொள் கென்றனர் (௨௭)

கேட்ட யாவருங் கேழ்கிள ராற்றிலே
கூட்ட மாகக் குவிந்தகல் யாவையுந்
தேட்ட மாம்பரி சக்கலைச் சேர்ந்தவோ
நாட்டு கென்ன நகைத்துரைத் தார்களே. (௨௮)

வினவு நாம ரெழுந்து வியனதிப்
புனலின் மூழ்கிப் பொருந்திய கற்களைக்
கமை தாயிரு கைக்கொடு வந்துநும்
அனக மாநக லாய்ந்துகொள் கென்றனர் (௨௯)

கண்டு தம்மது கற்றெரி யாமற்பொன்
தொண்ட ரூசி பலகொடு சோதிக்க
அண்டு கன்முழு தும்பரி சக்கலாய்
விண்டு தாசர்கை மேவிச் சிறந்தவே (௩௫)

அன்ன கண்டவர் யாரு மதிசயந்
துன்ன நின்று தொழுது துதித்தினர்
பொன்ன தாசர் புகழரி தாசனை
நன்ன ரேத்தி நயந்துசொல் கின்றனர் (௩௬)

அச்சு தன்றனக் கன்பரொன் றுயறும
மெச்சு மெய்மை பொதிந்துறு மேன்மையி
னிச்ச யந்தெரி கின்றிலெ னேரிலீர்
இச்சை கொண்டல ரேந்திழை தன்னையே (௩௭)

போற்றி யோர்பரி சக்கல் பொருந்தினேன்
ஏற்றி லேனும் மருளை யினிதெனு
மாற்றி யாசையை மற்றவர் பொற்பதந்
தேற்ற மாகி வணங்கினர் சென்னியால் (௩௮)

இதம தாமுப தேச மெனக்கு நீ
ருத்வ வேண்டுமென் றோதிட நாமர்தாம்
முதல்கொ ணர்ந்தவக் கற்கண் முழுவதுஞ்
சிதறி யாற்றிடைச் செங்கரஞ் சென்னிமேல் (௩௯)

வைத்து நல்லுப தேசம் வழங்கிட
உய்த்த நாமருக் கோரடி யாரென
மெய்த்த ஞானம் விளங்கிச் சிறந்தனர்
பைத்த சீர்ப்பரி சாபா கவதரே (௪௦)

பரிசாபாகவதர்திருவடிகளேசரணம்.

ஆகசரித்திரம் (௫) க்குச் செய்யுள் (௪௪௭)

முற்றிற்று.

ஐகமித்திரர் சரித்திரம்.

பரளி யென்னுமூர் தனிற்சக மித்திரர் பார்ப்பார்
வரகு லத்தவ தரித்தவர் வைணவ ராகி
யிரவு கொண்டுதா னியங்களைச் சேகரித் தென்றுந்
தரம தாங்குடும் பரட்சகஞ் செய்வது தனிலே

பொருள்வி ருப்பறு புண்ணிய ராகியே பொருந்து
மிருவ கைப்பற்று மில்லவ ராயரி நாமங்
கருதி யேத்துதல் கடைப்பிடித் துறுகின்ற காலை
மருவுமூரிலுள் ளாரிவர் மான்மியந் தெரிந்து (உ)

இவரிம் மானிடத் தன்மைய ரல்லரெத் தேவர்
அவத ரித்தன ரோ வெனப் புகழ்ந்தன ராகத்
தவந லத்தினர் தமைச்சிலர் சாதுசற் சனரோ
இவரொ னப்பொரற் கெய்தினர் கற்றன வியம்பி (ங)

வருத்தி மானபங் கஞ்செய்து மதைமதி யாராய்ந்
திருத்து ஞானவை ராகங்க டிகழ்சிறப் புடனே
யிருத்தல் கண்டறி வில்லவர் தாம்பொரு ரிவர்தம்
கருத்த ழிந்திடச் செய்வதற் குன்னினர் கறுவி. (ச)

வருமொர் நாட்சக மித்திரர் மனங்கலங் காமற்
றிருவி னுயகன் றனைப்புகழ் செய்கையிற் றிருந்தி
மருவு மில்லிடைக் குடும்பங்க ளொடுதுயில் வதிந்தார்
கருது தீயவ ரவர்மனை யிட்டனர் கடுந்தீ. (ரு)

மடுத்த தீச்சிகை பரப்பியின் முழுவது மாய்ப்பப்
படுத்து றங்கின தாசர்கண் விழித்ததைப் பார்த்தே
அடுத்த தீயவிப் பதற்கொரு வகையுமின் றாகித்
தொடுத்த தண்டுழாய்ப் பண்டரி நாதனைத் துதித்தார். (சு)

தீனர் தங்களுக் காபத்தைக் காத்தருள் செய்யும்
ஞான நாயகா நினையன்றித் துணையில்லை நாடிற்
றானெ னுஞ்சக மித்திரர் துன்பத்தைத் தவிர்க்க
ஏன மாகிமண் ணெடுத்தவன் சக்கர மேந்தி. (எ)

வந்து றங்குகின் றார்தமைத் தீவருத் தாமல்
முந்து சக்கரத் தாற்றடுத் தானிரா முழுதும்
அந்த வீடெரி கின்றதீச் சிகையொளி யதுகண்
டெந்த வீட்டி லுள் ளாருமங் கெழுந்தனர் வந்தார். (அ)

கண்டை யோசக மித்திரர் குடும்பம்வெங் கனமூன்
மண்ட மூழ்கினர் மடிந்தன ரென்றுவாய் குழறிக்
கொண்ட லைந்துகூ கூவெனக் கங்குலுங் குறைந்து
சண்ட வெங்கதிர் தோன்றிடத் தீயெரி தணிந்த. (க)

உள்ளு றங்கின குடும்பமும் விழித்தன ருணர்ந்து
வெள்ள மேற்றுயி லரிதிரு நாமத்தை வேண்டக்
கள்ள மில்லவ ரியாவருங் கேட்டனர் கருதி
மெள்ள வந்துளே நோக்கினர் வெந்திடா திருத்தல். (௩)

அதிச யித்தன ரரக்குமா ளிகைதனி லேவர்
முதிர்நெ ருப்பிடை வெந்திடா தருள்செய்த முறையே
இதுவும் பண்டரி நாதன தின்னருளென்று
துதிசெய் தாரரி தன்னொடுந் தொண்டரைத் தொழுது. (௪)

பின்னர் யாவருங் கூடின ரிவரது பெருமைக்
கென்ன தாமள வென்பதா யிவர்தமக் கிணைந்த
நன்ன ராகிய குடும்பநாங் காப்பதே நலனென்
றுன்ன லாகிய வயித்திய நாதன்றன் னுழையில். (௩௨)

சிலநி லந்தரு வோமென்று தாசரிற் சேர்ந்து
பலரு மீவது பகர்ந்திடத் தாசரும் பகர்வார்
உலகெ லாந்தனக் குள்ளதோர் குடும்பமா யுள்ளோன்
இலகி யேயுறு பொழுதெனக் கொருகுறை யில்லை. (௩௩)

என்று பந்தமில் லாவெனைப் பந்தத்து ளிசைக்க
நின்று கூறுதி ரெனவவர் யாவரு நெடிது
நன்று நன்றென வலிந்தவர் நாமத்தை நவின்று
துன்று சாதனஞ் செய்தொரூர் தந்தனர் தொகுத்து. (௩௪)

தாங்க ளேயந்த நிலத்தினிற் பயிர்செய்து தரற்கும்
பாங்க ராயின ரப்படி யேசில பருவ
நீங்க லானபி னிருபனு னியமிக்க நேர்ந்தான்
ஆங்கு நீடதி காரியா யறிவிலா வவிநதன். (௩௫)

வந்தெ லாம்விசா ரித்தவன் வயித்திய நாதன்
சொந்த மாநிலத் தூர்சக மித்திரர் தொடக்கத்
தெந்த வாவியைந் ததுவென வரசனுக் கிசையத்
தந்த தாகமுன் றந்தவர் தமையெலாந் தடுக்க. (௩௬)

அவரெ லாமுந்தி யாஞ்சக மித்திர ரான
தவர்த மக்குத வியதரு மந்தனைத் தடுத்துப்
புவனி வேந்தன தாக்குதல் பொருத்தமன் றென்ன
உவன டங்கிடா துலோபமே செய்திட லுற்றான். (௩௭)

பின்னு யச்சக மித்திரர் பெருமையைக் கேட்டுத்
துன்னி னைவ ரில்லினைச் சோதிக்கத் தொடங்கி
என்ன நீர்சக மித்திர ரோபகை யிலையோ
மன்னு மிச்சகம் பகையிலை யுமக்கெனின் மாதோ. (௩௮)

எனது புத்திரிக் கிசைந்தது மணமதற் கேற்ப
அனக தெய்வபூ சனைசெய்ய வேண்டுமெற் றதற்குச்
சினமு லாவிய வொருபுலி வேண்டுநீர் சேர்ப்பீ
ரெனவி சைத்தன னன்றெனத் தாசரு மெழுந்தார் (௩௯)

காடு சென்றன ரொருபுடை யிருந்தனர் கவினு
னீடு பண்டரி நாதனை நினைந்தனர் நெடிது
பீடு சேர்திரு நாமங்கள் பற்பல பேசிக்
கூடு வாய்புலி யுருக்கொடின் றெனவுளங் குறித்தார் (௨௫)

பத்த ருக்கருள் பாண்டுரங் கன்னந்தப் படியே
சித்தி ரப்படி வப்பலி யாய்முனஞ் சேர்ந்து
மெய்த்த வச்சக மித்திரர் கண்டுளம் வியப்ப
எத்த லத்தினில் யாருமை நலிந்தவ ரியம்பில் (௨௬)

கொன்று தின்றிடு வேனெனக் குவலய நண்பர்
நன்று வெம்புலி யாய்வரு கின்றவென் னாதா
துன்று நின்னையல் லாதெனக் கொருதுணை யுண்டோ
என்று தோத்திரம் பற்பல வியம்பின ரினிதே (௨௭)

கஞ்ச நாபவெம் மூரினி லோரதி காரி
எஞ்சி லாததன் மகள்மணத் தினுக்கிசை வாக
விஞ்சு தேவதா பூசைக்குப் புலியொன்று வேண்டுஞ்
செஞ்செ வேகொடு வருகென வெனக்குனா செய்தான் (௨௮)

ஆத லாலிவ ணெய்திநின் றனையழைத் தேன்யான்
காதலோடுநீ வருகெனக் கண்ணபி ரானை
நீத மாகவுத் தரியத்தைக் கழுத்தினி னிரப்பிப்
போதலாயின ரீர்த்துறை கின்றவூ ரபுகுந்தார். (௨௯)

காசி னிக்கெலா மித்திரர்வேங்கைகளைக் கொண்டு
நேச மாய்வரக் கண்டவர் யாவரு நில்லார்
பாய்சி னப்புலி கண்டெதிர் நிற்பரோ படிந்து
வாசலிற்கத வடைத்தன ரூர்க்குள்வா ராமல். (௩௦)

உலக மித்திரர் தமக்கு மித்திரரென வுள்ளார்
பலரு நீடிய மரங்களி லெறியே பார்த்துச
கலச லோசனன் முசரே நீர்புலி தன்னால்
கொலையி யற்றவோ வருகின்றீ ரென்றனா குறித்து (௩௧)

அஞ்சு நீர்புலி யன்றுபாண் டுரங்கனே யாகும்
விஞ்சி நீடதி காரிக்கு மெய்க்கொள வேண்டி
இஞ்சு வந்தன னெனவதைக் கேட்டவ ரேகி
நஞ்சு நேர்துருக் கனுக்குரைத் தனரவ னடுங்கி (௩௨)

தன்ம னைக்கத வடைத்துறச் சார்ந்தவத் தாசர்
நன்ம திற்கத வடைத்திருப் பதுதனை நாடி
முன்ம யக்குறப் புலிவடி வாய்வந்த முதல்வன்
பொன்ம ணிக்கரத் தறைந்துபோம் வழிதரப் புகுந்தார் (௩௩)

துட்டன் வாழ்மனை வாசன்முன் சார்ந்தந்தத் துருக்கன்
கட்ட மைந்தன கதவையுஞ் சார்த்துறல் கண்டென்
னிட்ட னேமுன்ன நீசொன்ன படிக்கியா னின்றே
எட்ட ரும்புலி தனைக்கொடு வந்தன னெனுமுன் (௩௪)

கொண்டு வந்தவெம் புலிகுமு றிடுங்குரல் கொண்டு
மிண்டு வாலடித் தார்த்திடக் கேட்டவன் வெருவிப
பெண்டு பிள்ளைக ளோடழ வவன்கொள்பெண் டாட்டி
அண்டு நீமிகு வயதுசென் றுயத னாலே (௩௫)

வெளிச்செல் வாயெனில் யாம்பிழைப் பேமென விளமப
ஒளித்த துஷ்டனங் கதற்குடன் படாதழ வுள்ளே
களித்த வூரினர் கேட்டற நகைத்திடக் கலங்கி
அளித்திர் நீரென வுலகநண பரையஞ்ச லித்து (௩௬)

அவனி மித்திரர் நீரென்ப தறிந்திலே னுகித்
தவறு செய்தன னென்றந்தத் துருக்கனுஞ் சாற்றப்
புவன மித்திரர் தமக்கருள் சுரந்துமீப் பொங்கி
உவமை யற்றவப் புலியைக்கொண் டேர்கடந் துற்றார். (௩௭)

கான்பு ருந்தொரு தனியிடங் காண்டலுங் கண்ணன்
நான்கு தோளொடு சகுணரு பங்கொடு நன்கு
தோன்ற வேசக மித்திரர் பொன்னடி தொழலுந்
தேன்ற ருந்துழா யவன்றமு வினனருள் செய்தான் (௩௮)

ஆகமித்திரர் திருவடி கமலசரணம

ஆக சரிதத்திமயக-க்கு செய்யுள் (௩௯௬)

முற்றிற்று.

ஜோகாபரமானந்தர் சரித்திரம்.

வாகாகிய பாரசி யென்னுமூர் வந்த
ஜோகாபர மானந்த பக்தரோர் சோர்வு
மாகாதரி நாமசங் கீர்த்தன மான
பாகார்தரு நாவினா தோமறு பண்பார். (க)

சரியாவிர வேகொடு தஞ்சமு சார
பரிபாலனஞ் செய்பவ ராய்ப்பல நாளும்
அரிதாளினைக் கெணணிரண் டாமுப சார
மரியாதைகொள் பூசையி லேதும்வ ழாமல். (உ)

இனிதாயியற் றிப்பின்ன ரோரெழு நூறு
கனிவாகிய வந்தனை செய்துபின் கண்ணன்
உனவோதிய சேசையி லோர்சுலோ கத்தை
நனியோதிய பின்புவந் துண்பரந் நல்லார். (ங)

இவ்வாறிவ ரொய்துவ திற்பிச கெய்தில்
ஒவ்வாருண வத்தின மேயுப வாசஞ்
செய்வார்மனை யிற்குடி யானவர் சில்லோர்
நைவாறிட வேயிறங் குற்றவந் நாளில். (ச)

மழைபெய்தத னுலவர் வாசல்சே ருகிக்
குழைவெய்திடக் கும்பிடுங் கொள்கைகுன் றாராய்த்
தழைவெய்திய சக்கரக் கையனைத் தம்முள்
விழைவெய்துறக் கொண்டுநின் றார்புகழ் வேண்டி. (ரு)

அரிதன்பத தாசர்செய் யுஞ்செயல் யாவுந்
தெரிதந்தன ரக்குடி யானவர் தேர்ந்து
மருள்விண்டிடு மாதவ ரேயிவ ரென்ன
ஒருவன்கடி தோடின னுவண முற்றான். (சு)

கொண்டானொரு பொன்னுடை கொண்டுவந் தன்பர்
கண்டாமுறக் காட்டிநீர் கைக்கொள்க வென்றான்
தண்டாமரைக் கண்ணவன் றாசர்வேண் டாராய்
விண்டார்விலை மிக்குள திக்கலை வேறே. (எ)

பழைதாகிய துண்டெனி லீகெனப் பார்த்து
விழைவேமிகக் கொண்டவர் தம்மிடை மீதே
அழகாயுற வேயுடுத் தேகின னப்பால்
மழைபோனிறத் தான்றனைத் தாள்மற வாதார். (அ)

வேறு

அருமைசெய் திவரை யன்னு னரைதனி லுடுத்துப போன
பெருமையை நினைந்து பீதாம் பரத்தினைப் பெரிது பேணி
மருவுமக் கலையிற் சேறு வாய்த்திடிற் பழுதா மென்று
தருகலை தொங்கு ருமற் றம்மிடை யுடுத்திக கொணடு. (௬)

மருவுதே காபி மான மாற்றிமுன் வணங்கல் போலத்
திருமகள் கொழுநன் றன்னைத் தேர்ந்துகும் பிடுதல செய்யா
கருதிய கலைமேல் மிக்க காதலின் வணங்க லாலே
பருதிமேல் பாலிற் சார்ந்தும் பணிவது முடிவுறு மல (௩)

மனத்துளே வருத்தங் கொண்டு மாலடி பணியுங் காலங்
கனத்திக் கலையா லன்றோ வென்றகங் கருதி யிருத
அனர்த்தமா மபரா தந்தீர் வதற்கிந்த யாக்கை தனனைச
சினத்தவா ளாலீர்ப் போமோ தியிடை யமிழத்து வோமோ (௩௧)

எனப்பல நினைந்து ணும லேகின ரில்லம் விட்டு
மனக்கிசை வான வேறோ ரிடஞ்சென்று மருவும் போது
கனத்ததோர் நுகத்தைப பூண்டு காளைக ளிரணடு கொணடு
சினத்துட னோட்டிச் சென்றான் செறுவினை யுழுதறகாக (௩௨)

ஓட்டியே செல்லு கின்ற வுழவனை நோக்கியன்பர்
ஈட்டிய துயரத்தோடு காளைக ளிரண்டுங் கொண்டோய்
கேட்டியுன் னிரண்டுமாடுங் கிளத்துமென் றனக்குத்தந்து
நீட்டிய விலைகொள் பீதாம் பரந்தனை நீகொள்கென்றா (௩௩)

மற்றவ னுகந்துகொண்டு மாடுக ளிரண்டுந் தந்தான்
குற்றமி லன்பர்பாசங் கொண்டென்கா லிரணடுங்கட்டி
உற்றதோர் நுகத்தி லேர்க்காற் கொபபுற மிகுந்தபாசஞ்
சுற்றுறப் பிணித்து மாட்டைத் துரந்துபோ கென்னச் சொன்னார் (௩௪)

செயற்கருஞ் செயலிதென்று தேர்ந்திடா னுதலாலே
மயற்செயுங் கலையைக்கொண்டு மாதவர் சொன்னவாறே
இயற்றினன் போக மற்றை யெருது களிரணடுமீர்த்துப
பெயர்த்தன கல்லு முள்ளும் பெருகின விடங்களெல்லாம் (௩௫)

நரம்புட னெலும்பு நிற்க நண்ணிய தசைக டேய்ந்து
குரம்பையில் வழியச்செந்நீர்க் கோலமா யன்பரின்று
நிரம்பப சாரந்தீர நேர்ந்தது நன்றே யென்றார்
வரம்பறு துன்பநேர்ந்தும் வருத்தமெள் ளளவுமின்றி (௩௬)

அரி திருநாமந் தன்னை யறைவது குறைபடாராய்ப்
பெரிதரை பட்டுச்சீவன் பெயர்வுறு மளவதானார்
கரிதுயர் காத்த கண்ணன் கருணைகொண் டோடிவந்தே
எருதுக டமைநிறுத்தி யிசைத்தகட் டவிழ்த்துவிட்டு (௩௭)

அன்பர்த முடல மெல்லா மங்கையாற் றடவுமுன்னே
துன்பங்க ளெல்லாந்தீர்ந்து தோன்றிட வடிவ நன்றாய்
முன்புநின் றவனாநோக்கி மூதறிவினாரே நீர்தாம்
என்புறத் தேயச்செய்தீ ரேதுமோ பிழையின்றாக (௩௮)

என்னடி யார்களுண்ப தெனக்குநல் லவியதாகும்
அன்னவர் பேசுகின்ற வவையெலாந் துதியேயாகும்
முன்னுகைத் தொழில்க ளெல்லா முத்திரை கொண்டதாகு
மன்னவர் நடப்பதென்னை வலஞ்செய்த லாகுமின்னும் (௩௬)

அவர்துயில் வதுதானென்னை யன்புடன் வணங்கலாகும்
எவமறக் களிப்பவெல்லா மெனதின்ப வடிவமாகும்
கவமுற வென்று கொண்டு நானும்மை நோக்கிநிற்கத்
தவலரும் பரமானந்த தாசரே நீரொன்செய்தீர் (௨௩)

இப்படி யாகச்சொல்லி யெதிர்நின்ற பாண்டு ரெங்கன்
மெய்ப்படி வத்தைநோக்கி விரைமல ரடியில் வீழ்ந்தும்
ஒப்பறு துதிகள் செய்து முவமையில் லானேயின்று
தப்பறக் கருணைசெய்க வென்னலுஞ் சார்ங்கபாணி (௨௪)

நன்றென வருளிக்கோயி னண்ணிநல் லன்பர்க் கெல்லாம்
ஒன்றிய பரமாநந்த ருஞற்றிய செய்கை கூற
கின்றுணர் ஞானதேவர் நின்னடி யார்கள்செய்கை
என்றும்யா ராலுஞ் சொல்லற் கெளிதலவெனத் துதித்தார். (௨௨)

ஜோகாபரமானந்தர் திருவடிகளே சாணம்.

ஆகசரித்திரம் ௩௨-க்கு செய்யுள் ௬௫௩௨.

முற்றிற்று.



நரஹரிபக்தர் சரித்திரம்.

கலிவிருத்தம்.

பரமன்வாழ் பண்டரிப பதியி லேயொரு
நரகரி யெனும்பெயர் நண்ணு பொற்கொல்லன்
அரனெனு மல்லிகார்ச் சுனனை யனபுறு
திரமிகப் பூசனை செய்து வைகுவான். (க)

குடநடன் கோயிலுக் கணித்து மேவியும்
நடையுறு கோயிலின் மார்க்க நணணியும்
படவர வமளியான றன்னைப பார்த்திடான்
அடமுட னுறைகுவா னான நாளிலே (உ)

மிகுதன முளனொரு வணிகன் வினணவா
தொகுதனம் போலொளிர துளவ மாலையான
நகுதருங் கோயிலில் வந்து நாதனை
நெகுதரு முளத்தன்பு நிரமபப பூசித்து (ங)

தோத்திரம் பலபல செய்து தூயனும்
தாத்திரி நாதவோர் தனைய னல்குதி
சீர்த்திற மிகவெனக் கென்று செபபியத்
தீர்த்தனை வணங்கித்தன் மனைக்குச் சென்றனன். (ச)

சென்றபின் சிலபகல கழியச சேரன்
நன்றரு ளாலொரு நந்தன தோனறினான்
ஒன்றிய வுவகைமிக் கோங்க லுறறவன்
மின்றிகள் மார்பின னருளே வேண்டியே. (ரு)

நவமணி பொதியவா ஞாண்செய் திருதிரை
தவனிடைச் சாத்திடத் தழைக்கு முள்ளத்தான்
அவனிநா யகனுறை கோயி லண்மினான்
எவமிலன் புடன்றொழு தேத்தி நின்றனன். (ஙு)

அர்ச்சகர் தம்மை நேர்ந் தியாரிவ் வூரிலே
சர்ச்சனன் பொன்னனா ஞாண்செய் தக்கவன்
மெய்ச்சரி தன்னிடை மேவச் சாத்தற்கு
நிச்சயஞ் சொலுமென வவர்நி கழ்த்துவார். (எ)

இச்சின கரத்தரு கிருக்கின் றானொரு
மெய்ச்சுபொற் கொல்லன்மற் றவனில் வேறிலர்
கச்சின படிசெயற் கென்ன நன்றெனக்
கச்சமில் பொருள்வணி கன்வந் தெய்தினான். (அ)

கம்மியன் றனைக்கண்டு கமலை கேள்வற்கு
மம்மிய மணியரை ஞாண்செய் கென்னலும்
விம்மிய தனத்திரு விரும்பு மார்பினான்
அம்மிய விடையன வறிந்து வாவென்றான். (கூ)

வணிகனவ் வளவெடுத் துதவ மற்றவன்
மணியரை ஞாண்செய்து வழங்க வாங்கிவந்
தணிதிகழ் விமலனை யருச்சித் தேத்தினன்
பணிவுட னிடையிட விறைபற் றுமலே (௩)

இருப்பது கண்டுமீண் டெய்திக் கம்மியன்
விருப்புறச் சொலிச்சரி செய்ய வேண்டினன்
சரிபடுத் தித்தரக் கொண்டு சார்ந்திடை
தரிப்புற நீண்டது தனைக்கொண் டேகினன். (௪)

நீண்டது குறைசெய்து நேர்க வென்றனன்
ஆண்டதைக் கம்மிய னன்னவா செய்து
பூண்டுகா ணெனத்தர வந்து பூட்டினன்
மீண்டது குறைவுற விம்மி மீண்டனன. (௫)

நீட்டுறிற் குறைவுறுங் குறைக்கி நிள்வுறும்
பூட்டுறத் தக்கதா காது போவது
வேட்டிடு விமலற்கு விருப்ப மில்லையோ
ஈட்டுமென் பிழையினே யாதினேவெனு. (௬)

மீளவும் வந்துகம் மியனை வேண்டி நீ
கோளிடை யளவது குறிக்க வாவென
நீள்சடை நிமலனை யன்றி நேருறேன்
வாளர வமளியான் மாட்டென் றேதினன். (௭)

ஓதலும் வணிகன்மிக் குறுக ணெய்தியே
நீதயை செய்தென்ற னியம முற்றுதி
மாதக வுனக்குறு மென்று வாழ்த்திநீ
போதரு கெனக்கொடு கோயில் போந்தனன் (௮)

வந்தகம் மியன்விழி மறைய வாடையாற்
பந்தனை செய்துகொண் டளவு பார்ப்புற
முந்தினன் வணிகன்கை பிடித்து முந்தலும்
நொந்தனர் கண்டவர் நுவல்வ தாயினர். (௯)

உயர்பரஞ் சோதியை யுற்று நோக்கிட
நயனங்க ளாயிர நாங்கள் வேண்டுவேம்
இயலிவன் கண்மறைத் தேக லென்னையோ
செயலெனத் தீவிழி தெறிப்பச் செப்புவார். (௰)

கற்பகம் போனிமிர் கமலக் கண்ணனர்
பொற்பிவன் கட்புலம் பொருந்துறுததோ
சிற்பர வடிவுகண் சேர்வ தேயன்று
பற்பல சொலியென்ன பயனென் றேசினர். (௰௧)

ஆகவந் தமலனு ரங்கந் தீண்டலும்
வேகவெம் புலியதள் வேழத் தோல்செறி
பூகநீள் சடைநுதல் பொருந்து தீவிழி
மாகவெம் மழுத்துடி மான்வி ளங்கவே. (௰௨)

துணுக்கெனக் கண்களைத் திறந்து தோன்றிய
இணர்த்துள வணியலு மிடையிற் கைகளும்
திணர்த்தசெங் கல்லிலே திகழுந் தாளுடன்
மணித்திரு மேனிமால் வடிவுங் கண்டனன். (உ௩)

காண்டலு மூடினன் கண்கள் முன்புபோல்
நீண்டசெஞ் சடையவ னிலையை தாகவே
தீண்டிய கைகட்குத் தெரியப் பட்டது
மீண்டுதன் கண்களை விழித்து நோக்கினன். (உ௪)

யச்சுமா மலைநிகர் பசும்பொற் சோதியை
அச்சுத னுகநின் றருளு மையனை
[illegible]சிவ வடிவுமாம் விழிகள் மூடினல்
[illegible]யே திறக்கினு ரணனி தென்னையே. (உ௨)

என்றுற மயங்கினு னெதிர வுஞ்சினன்
தன்றுணைக் கண்கணீர் ததும்ப நோக்கினன்
மன்றலஞ் செழுஞ்சரண் வணங்கி வாழ்த்தினன்
ஒன்றல பலதுதி யுருகு முள்ளத்தான். (உ௩)

நின்னில்வே றேசிவ னெனநி னைக்கநின்
றன்னில்வே றிலையெனச் சமைத னன்றரோ
என்னிலா மையமின் றேத விர்ந்தது
பொன்னிலா வியநிறப பூமி கேள்வனே. (உ௪)

சிவனுரு நின்னுளே செறியச் செய்தியேல்
புவனமேல் லாமுன துந்தி பூத்ததே
தவறிலை தவறிலை யென்று தாழ்ந்தனன்
அவன்முக நோக்கியீ தமலன் கூறுவான். (உ௫)

வேற்றுமை கொள்ளலை சிவன்வே றேயெனத்
தோற்றுமென் னிடத்துநீ தொழுஞ்ச தாசிவன்
சாற்றுமென் சொற்படி தயங்கக் கண்டுநீ
போற்றுகென் றுரைசெயப பொருந்த நோக்கினன். (உ௬)

தலைமிசைச் சிவகுறி தயங்கக் கண்டனன்
நிலமிசை வீழ்ந்தடி நெடிது தாழ்ந்தனன்
அலைமிசைத் துயின்றவ னடியை யன்றுதொட்
டுலைமிசை யுருகுபொன் னெத்துப் பற்றினன். (உ௭)

பற்றிநின் றுன்றனைப் பழிப்பி னுமர்செய்
துற்றபோ னகவமு துண்கிற் பாரொடும
இற்றைநீ யும்வரு கெனலு மெய்தினன்
கற்றையஞ் சடைமுடிக் கண்ணு ளானெடும். (உ௮)

அடியரோ டிருவரு மமுதுண் டார்ந்தபின்
ஆடலவான் பிறையவன் றமனி யக்கொலன்
படியைநேர் கண்டுநீ பதும நாபன்றன்
ஆடியை யவரொடு குழுமி வாழ்வதே. (உ௯)

எனக்கிசை வெனவினு யவனு மின்றுதொட்
டெனக்கிசை வேயெனக் குறுதி யாமென
மனக்கிசை நரகரி தாச வாழ்கெனக்
கனக்கிசை வணணடி யார கன்றனர். (௩௫)

நரஹரி பக்தர் திருவடிகளே சரணம்.

ஆக சரித்திரம் ௫௩-க்கு செய்யுள் ௪௮௨.

முற்றிற்று.

ஜனுபாயி சரித்திரம்.

எழுசீராசிரிய விருத்தம்.

கார்த்திகை யேகா தசித்தின மெவருங் கருதுசீர்ப் பண்டரி புரத்தில்
யாத்திரைக் காரர் பலரவண் வந்தா ரதிலொரு கன்னிகை யீன்ற
தாய்த்தரு தந்தை யொடுவந்து கண்டு சவுரிவாழ் பண்டரி மகிமை
ஏத்தினள் மகிழ்ந்து தந்தைதாய் தம்மை யின்பொடு நோக்கின ளிசைப்பாள் (௧)

நானிவி டத்தி னிரந்தர வாச நனிசெய வேண்டினே னுங்கள்
பானினை வில்லே னுடன்வரு கில்லே னென்றவள் பகர்வதைக் கேட்டு
மானினை விவளுக் கிச்சிறுவயதில் வந்ததென் னென்றவர் வியந்து
மீனிகர் விழியா டனைத்தனி விடற்கு மிகமனம் வருந்தினர் மீண்டும். (௨)

பலவிதத் தழைத்து முடன்படா தரியின் பாததா மரைநறை பருகி
நலமிகக் களித்துப் பொருந்துநிச் சயத்தை நன்றறிந் திருவரு நயந்து
மலர்மகள் கொழுநன் கோயிலில் விடுத்து வந்தனர் தங்களூர் பின்பு
நிலமளந் தவனைச் சேவிக்கக் கோயி னேர்ந்தனர் நாமதே வென்போர். (௩)

பாண்டுரங் கனைக்காண் பவரவ னுலவு பாவையைக் கண்டவள் மீது
வேண்டுறு கருணை பிறந்துநீ தனியாய் விரும்புதாய் தந்தையை யின்றி
ஈண்டுவந் தனையா ருன்பெய ரென்னை யியம்பெனச் சனுயிதா னென்பேர்
தாண்டுறு தரங்கக் கடனிறத் தவனே தந்தைர குமாயிதான் ருயே. (௪)

எனக்குவே ருருவ ரின்றென விங்ஙு னிருக்கின்றே னென்பது கேட்டு
மனத்திடைத் தயைமிக் கெய்திய நாமர் மற்றந்தச் சிறுமையை வருக
எனக்கொடில் லேகிக் குணுயியை நோக்கி யிச்சிறு மியின்வர லாறு
தனைத்தெரி வித்து மற்றிவள் கண்ணன் ருசியா கியவொரு கூனி. (௫)

கலியுகத் துதித்துப் பண்டரி புரத்துக் கருணைமா னுமத்திற் களித்து
மலிதரு மனத்தா ளென்னலுங் குணுயி வளர்த்தனள் மருவியன் புற்று
மெவிவுற வளர்ந்து பெரியவ ளாக வேறுளோர் யாரைநீ யென்றால்
குவிசிசேய் பாக னடிபுகழ் நாமர் குடியடித் தாசியா னென்பாள் (சு)

இப்படி நாம தேவர்தம் மனையி லியன்றவூ ழியமபல செய்து
மைப்படி மேனி மாயனை நாமர் வாழ்த்தலகேட் டுளமகிழ் வாவாள்
அப்படி யாக வொருதினத திரவி லேந்துநா ழிகையள வதிலே
மெய்ப்படி நாமர் முதலினர் துயில மேவின காற்றொடு மழையே (எ)

மழைதெறுங் காற்றான் மாடம்வேய் கூரை மாய்ந்தன பலபடி யாகத்
தழைதுழாய் மார்பன் றான்பொரு ளுகிச் சக்கரத் தாற்றடைசெய்தான்
விழைதரு நாமர் முதலினர் துயரா விதம்பின்பு தானவண் மேவிக்
குழைசுவ லொடுத்துக் கூரையும் வேய்ந்து கொண்டுறு போதிலே நாமா (அ)

விழித்தனர் வெளியே வந்துமுன் கண்டா விமலபீ தாம்பரம் விளங்கச்
செழித்தகே யூர குண்டல மகுடந் திகழ்திரு மேனியைப் பணிந்தார்
வழுத்துசீ ரடியைப் பற்றிநா தாநீ மற்றிநத வீரவிலவங் தென்னை
இழைத்துள தென்னத் தொண்டடைக் காபபோ னியம்புவா னெறிமழைக்காற்

உன்னது குடிசை யழிந்தது போகா துறச்செவ்வை செய்தன னீநின் [றால்
றன்னது குடும்ப வியற்கையை விட்டென் றனைச்சரண் புகுதலா லின்னே
என்னது சுமையா யிதுசெயே ஞகி லெனையனை யீன்றவள் வைவாள்
மன்னது தனைநீ யறிதியே யெனுமுன் வந்தனள் குணுயிமால் வடிவை (ப)

கண்டடி வணங்கிப புகழ்ந்தன ளாகக் கலநதுமூ வருமனை புகுந்து
கொண்டுறை போது ஜனுபாயிவந்து கொண்டல்வண ணன்பதம் வருடி
மண்டுப சாரம் புரிநதன ளிருக்க மாலடி வணங்கியே நாமர்
தொண்டுகொண் டவனே யெம்முட னமுதுசெய்கென வேண்டினர் சொன்னார்

நாயக னிசைந்து கோவிந்தன் விட்டலன் நாரணன் மகாதேவ னென்போர்
ஆயபின் னைகளு நாமருங் குணுயி யன்னையு மனைவியு மாகப
பாயவோர் கலத்தி லமுதுணும் போது பார்த்தனள் ஜனுபாயி மனத்தில்
மேயதோர் வருத்தங் கொண்டுபெண் டரிவாள் விமலனே யெனைவிடுத் தனையே

இழிவுநீ செய்வ தியல்புனக் காமோ வெனைபபர தேசியென் றென்ன
வழுவில்சீர் விடல னுமரை நோக்கி மற்றெனக் கருத்துமிவ் வமுது
கழியநன் கிலதென் றுரைத்தலு நாமர் கருதினள் ஜனுயியு முண்ணு
தொழிவதே யென்ன வதுதனு லுணவிங் குருசியா யிலதுனக் கென்றார் (ஙரு)

எனலுமுண் பவன்கேட் டெழிற்கர முதறி யெழக்கண்ட ராஜாயி நாதன்
றனதுகை கால்கள் சுத்திசெய் தனள்பின் சாமியோர் பாயன்மீ திருந்தான்
பினரனை குணுயி ஜனுயியை யழைத்துப் பெறுகென மிச்சிலைத் தந்தாள்
அனகமா மிதுதான் பிரமருத் திரர்க்கு மகப்படா வமுதெனக் கொணடாள். ( )

கொண்டவ டனது குடிசிடை வைத்துக் கோகன கத்தவள் கொழுநா
அண்டிய வெனதில் வருகென வேண்ட வன்புள நாமரோ டாங்கு
மண்டுறத் துயிலு மாதவன் விழித்து வந்தந்தச் சனுயியை மடந்தாய்
உண்டிடும் போது நீயிலா தநிஞ லுண்டி லேனிரம்பவிப போது (ஙரு)

பசியுள தன்ன மெனக்கிடு கென்னப் பாண்டுரெங் காபவ நாசா
நிசியிடைக் குணாயி தந்தனள் மிச்சி னினக்கது தக்கதோ வென்று
கசிவுறு மனத்துச் சனாயிதான் சொல்லக் கண்ணனன் றதையிடு கென்ன
வசியது ஜனாயி யிடவவ ளுடனே மாதவ னுண்டுள மகிழ்ந்தான் (௫௬)

பின்புகை கால்கள் சுத்திசெய் தங்குப் பேசிய விருவருந் துயில
வன்புறு குணாயி விழித்தனள் வெளியே வந்துதன் புதல்வனைக் கூவி
அன்புள நீயு நானுந்தூங கினபின் பகிலகா ரணனிந்தச் சனாயி
தன்புடை வந்து மிச்சிலை யுண்டு சயனங் கொண் டனனங்கே யென்றாள் (௫௭).

நாமதே வன்ன யெவருளந் தூய்மை நணுகிய தோவங்கு நணுகக்
காமனார் தாதைக் கிலையொரு கால நியதிதான் கருதிய போதே
போமதே செய்கை மிச்சிலுண் பதுமோர் பொருளன்ற தியற்கையே யென்ப
தாமது கேட்டுத் துயில்செயும் விமலன் சாமமொன் றுறவிடி யற்கே (௫௮)

எழுந்திரு ஜனாயி திரிகையிற் றூசி யெலாந்துடைத் துன்வர வினையான்
விழைந்தினி திருக்கின் றேனென விழியாள் விழித்திட வெடுத்தினி திருத்திச்
செழுந்தனிக் கரத்தா லவடலை மயிரைச் சிக்கறத் திருத்திமுன்றானைக்
கொழுந்தினைத் தலைமேற் றந்துதா னேயோர் கூடையி லரிசியைக்கொணர்ந்து

நானனைக் கின்றேன் மாவையிங் குனது நன்கையால் முனைதொட்டுக்கொண்டு
தேனெனப் பாடு கென்னலும் ஜனாயி தீண்டின ளன்பினிற் சிறந்து
ஞானதே வாதி யடியர்பால் விமல னல்லருள் செய்தினி தாடத்
தானெலா மோவி யபங்கமாங் கவியாற் சாற்றிடக் கேட்டனன் சௌரி (௨௦)

தலைதுளக் குடனே பரவச ஞதிச் சார்ங்கவிற் கையன்மா வுனைக்கும்
நிலைதெரி குணாயி ஜனாயிபால் வந்து நின்வயி னரிசியே தனைக்கச்
சொலையெனப் பேசா திருப்பது கண்டு சுளித்துவேத் திரங்கரங் கொண்டே
அலைவுற வடித்தாள் யாருடன் பேசி யமர்ந்தனை யிங்ஙனே யென்று (௨௧)

சினத்தின ளடிதான் சீதரன் முடிமேற் சேர்த்லு நான்விடோ பாவிம்
மனத்திலன் புடைய ஜனாயிபால் வந்தேன் மாவனைத் திடற்கெனை யடியேல்
எனத்திரு நாத னுமதே வறிந்தே யீன்றதாய் தன்முகநோக்கி
வனத்துழாய் மார்ப னென்றுநீ யறியாய் வருகெனக் குணாயியு மயங்கி (௨௨)

நாணின ளுலக நாதனை யடித்தே னேயென நலிவொடு மனத்திற்
கோணின ளாகி ஜனாயிதா னரிசியைக் குறித்தன டன்வசங் கொண்டாள்
ஏணிலை யெனக்கென் றிருத்தலும் ஜனாயி யெம்பிரா னிடத்துறு மன்பாம்
ஆணியைத் தொட்டு விராகமாந் திரிகை யனாத்தனள் சஞ்சித வரிசி (௨௩)

அவ்வியத் தத்தில் வியத்தமா யனாத்த வந்தமா வனைத்தையும் வாரிச்
செவ்விய கூடை நிரப்பிவைத் தன்பின் றிருவினா யகன்றுயில் செய்ய
வவ்விய ஜனாயி விடியுமு னெழுந்து மாதவன் றனைத்துயி லெழுப்பி
இவ்விடைவிடுத்துன்கோயில்சே ராம லிருத்தியேற் கலகமா மென்றாள் (௨௪)

என்றலுந் துயின்றோன் விடிந்ததோ வென்ன வெழுந்துநித் திரையையக் கத்தால்
தன்றனிப் பீதாம் பரத்தையும் பதக்கந் தன்னையுங் கிடத்தியச் சனாயிக்
கொன்றிய கந்தை யுடுத்தித்தன் கோயி லுட்புகுந் துறைந்தனன் விடிந்த
பின்றையாச் சகர்தாம் வந்துபொற் கோயிற் பிறங்கிய கதவினைத் திறந்தார். (௨௫)

கந்தையைப் போர்த்துச் செங்கன்மே னின்ற கருணையங் கண்ணனைக் கண்டார்
எந்தையே பீதாம் பரமெவர்க் கிந்தா யெங்ஙனே தேடினாய் கந்தை
நிந்தையி லுனது மேனிக்குக் கந்தை நோவதோ வென்றதை நெகிழ்த்து
விந்தைசேர் பதக்கந் தன்னையு மார்பிற் கண்டிலர் வெருண்டனர் வியந்தார். ( )

மூடின படியே கதவுதா னிருக்க முந்தின தெவ்வழி யென்பார்
கூடினும் போவ தியாரக மென்பார் கொண்டவிக் கந்தைதா னமர்
தேடின தாசி தன்னது போலத் தெரிகின்ற தறிகுவ மென்று
நேடினர் நாம தேவரிற் புகுந்து நின்றதோர் ஜனாயியைக் கண்டார் (உஎ)

நின்னிடைக் கண்ணன்வந்தாதா லிங்கேநேர்ந்ததுபொன்னுடையெனக்கொண்
டுன்னிடை யவன்றன் பதக்கமு முளதா முதவுதி யென்னலும் ஜனாயி
என்னிடைக் கிடையா தென்னலு நீதா னெப்படி·யன்னவ னிங்கே
துன்னிடச் செய்தா யென்றவ டுகிலைச் சோதிக்கப் பதக்கந்தோன்றியதே (உஅ)

கண்டவர் வெருட்டுங் காலையி லூரார் கலந்தனர் நாமர்தம் மனையோ
பண்டைய தன்று நேற்றுறு காற்றிற் பறந்தன கூரைக ளெல்லாம்
கொண்டநம் மனையோ புதுக்கில மிதுவோ கூரிருள் விடியுமுன் புதிதாய்
அண்டிய தென்னே யதிசய நாமர்க் கமைத்தவன் கண்ணனே யாமால். (உகூ)

என்பது கேட்டோர் கண்ணனே யருளி னீகல ஞேபெரு மாடம்
நன்பொரு ளென்பார் சிற்சிலர் செல்வ நனிதரிற் செருக்குமிக் காகி
அன்பில ராவா ராதலா லுதவா னமலனென் றுளாப்பவ ராக
முன்புசோ தித்துக் கொண்டவர் ஜனாயி மோசஞ்செய் பவளென முனிந்தார் ( )

இங்கிவள் சாமித் துரோகியா தலினு லேற்றுதுங் கழுவினி லென்றே
அங்கவ ளைக்கொண் டம்புலிப் பாகைக் கணுகலுஞ் சனாயிதா னமலா
செங்கன்மே னின்ற சீதரா வடியேன் செய்ததெ னிங்ஙனே செயற்கென்
றங்கைக ளலைமேல் வைத்தனள் புலம்ப வநாதர க்ஷகனரு ளாலே (கக)

கழுமர நீராய்க் கரைந்தது ஆனாயி கண்கலக் கத்தனைக் கரைப்பான்
வழுவில ஞேடி வந்தனன் கண்ட மகிதலத் தோரொலா மகிழ்ந்து
குழுவினர் புகழச் சனாயியைப் பிடித்தோர் கோதிலாய் நின்பொருட் டமலன்
தழுவிவ ஞேடி வந்தத னாவி தன்னியை யெனவிடுத் தகன்றார். (கூஉ

விடுத்தபின் ஜனாயி வீட்டில்வந் தமர்ந்து விமலனை முன்புபோல் வேண்டித்
தொடுத்தன ளபங்கக் கவிகள்செய் நாளிற் றுளவணி தோளினான் மைக்கூ
டடுத்தெழு துங்கோல் காயிதங் கொண்டங் கவள்சொலு வனவெலா மெழுத
மடுத்தனன் கோயி லிருக்கநேர் வந்தார் மாறிலா ஞானதே வருமே (கூகூ)

ஞானதே வரைக்கண் டெழுதிட வுள்ள நாணிமை முதலெலா மறைத்துத்
தானமர் போதுகண்டவர் வணங்கிச் சாற்றுவார் தேவகி தனயா
ஊனமின் றேகாந் தத்திருந் தென்னை யெழுதினை யுரைக்கென நாதன்
றானரு ளுடனே ஜனாயித னபங்கக் கவியெழு தினனெனச் சாற்ற. (கூச)

கேட்டலுஞ் சிரித்து ஞானதே வமலா கிளத்திய ஜனாயிநின் புகழே
நாட்டல்செய் கின்றா ளதுபிற ராலே நயந்திடத் தக்கது நீயே
தீட்டல்செய் வதுதான் சிறந்ததன் றென்னச் சீதரன் ஜனாயிதான் செப்பல்
வேட்டன னினிதா யிருத்தலா னானே யெழுதவும் விரும்பினே னென்றான். ( )

முன்புபோ லெழுது கின்றவன் ஞான தேவர்த முகத்தினை நோக்கி
நன்கிது தன்னை மறைத்தது கமல நான்முகற் குந்தெரி யாது
கின்புலந் தோன்றிற் றெவ்வித மென்ன நிமலனை ஞானதே வென்போர்
அன்புட னேக்கி யையநின் பெருமை யடியருக் கௌிதுதா னென்றார். (௩௪)

வினவிய விடலன் சிரித்துற ஞான தேவரவ் விமலனை நோக்கி
அனகநீ வருக நாமனாக் காண வென்னலு மமலனும் விரும்பிப்
பினருணர் ஞான தேவர்தங் கையைப் பிடித்துட னுமதே வமரும்
மனைபுகுந் திடலு நாமதே வெதிர்ந்து மார்புறத் தழுவினர் மகிழ்ந்தார். (௩௫)

ஆசனத் திருவர் தம்மையு மிருத்த வப்பொழு தன்பரொல் லோரும்
நேசமுற் றடைய வவர்கள்யாவனாயு நிமலனுந்தழுவின ளிருத்தி
மாசறு நாம தேவனா நோக்கி மாலடி யார்களைக் காணக்
கூசமில் லாமல் ஜனுயியை யிங்கே கொடுவரு கென்றனன் கூற. (௩௬)

அடியவர் கேட்டுத் தாய்க்குரை செய்ய வவள்மரு மகட்குரை செய்யக்
கடிதிரா ஜாயி வெளியிலே சாண மிதித்துறு ஜனுயிக்குக் கழறப்
படிறறு ஜனுயி கால்கரஞ் சுத்தி பண்ணினள் விரைந்துவந் தங்கே
நெடிதம ரன்பர் குழாத்திடை யிருந்த நிமலனைக்கண் டடிபணிந்தாள். (௩௭)

நின்றவப் போது ஞானதே வென்போர் நிறைகுண நாமனா நோக்கி
இன்றுள தான வதிசயங் கேளீ ரெம்பிரான் ஜனுயிபா டுவதை
நன்றினி தெழுதிக் கொண்டுறு வதனை நான்கண்டு வந்தன னென்ன
மன்றலந் துளவோ னுனெழு துவதால் வந்ததோர் குறையென்னை யென்றான். (௩௮)

பின்னரு மெனக்கு ஜனுயிசொல் வதெலாம் பெரியதோ ரின்பத்தைத் தரலால்
நன்னரங் கெழுத லாயின னதனை நவிலுவோர் கேட்பவர் தம்மேல்
முன்னரன் புடையே னுகிப்பின் றருவேன் மோக்கமு மெனவவன் மொழியத்
தன்னரு கிருந்த தொண்டரொல் லோரு தனித்தனி சிரித்தனர் மாதோ. (௩௯)

ஜனுயியை நோக்கி ஞானதே வென்போர் தங்குமிந் நாமதே வென்போர்
முனுளிர ணியற்கு மைந்தனுய்ப் பின்பு முரணிய வாவிக்கு மகனுய்ப்
பினுளிலுத் தவராய்ப் பாண்டுரங் கனுக்குப் பெரிதன்ப ராயினர் நீதான்
இனுளென வுரைத்தி விமலனுக் கன்பா யிருத்தலின் காரண மென்றார். (௪௨)

பத்தவ தாரஞ் செய்தவனுன பரமனர்ச் சாவதா ரத்தும்
உத்தம னுகி யுறைதலால் யானு முடனுடன் றோன்றிவந் துற்றேன்
இத்தனை தானென் றியம்பலு ஞான தேவென்போ ரின்பொடு கேட்டு
மெய்த்துள மகிழ்ந்தார் பின்புபாண் டுரங்கன் மெய்யடி யவர்க்குரா செய்வான்

நீவிரொல் லோரும் பாடுமெய்க் கவிக ணிலைபெற வெழுதுகி றதற்கு
மாவிர குள்ளோர் தம்மையான் வகுப்பேன் வழுவிலா ஞான்தே வியம்பும்
பாவினைச் சச்சி தானந்தர் நிவர்த்தி பாட்டினைச் சோபான தேவர்
மேவிய முக்தா பாயிதன் கவியை ஞானதே வெழுதவும் விதித்து. (௪௩)

பரமவா னந்தர் பாடலை விசோபா கேசரர் சாவந்தியாமா
ளரகவி சிவாகு ரவர்கூர்ம தாசர் நன்கவி யாவையுஞ் சுதேவர்
அரமிய சோகா மௌர்தந் தொடர்பை யனந்தபட் டராகவு நாம
வரமிகு தூக்கும் ஜனுயிதன் யாப்பும் வரைகுவன் யானென வகுத்தான். (௪௪)

அங்குள ரான வன்பரொல் லோரும் ஜயினையப புகழ்நதன ராகப
பொங்கிய வுவகை கொண்டுளே நாம ரன்பரைபபூசனைபுரிந்து
மங்களஞ் சொல்லப பாண்டுரங் கனுக்கு மாதவன் கோயிலுக் கெழுந்து
தங்கின னுருக்கு மணிக்கிவை யுரைக்கத் தாசாதந தமதிடஞ் சாரநதா. (௧௬)

ஜனுபாயி திருவடிகளே சரணம.

ஆக கதை கச-கரு செய்யுள் ஸுாஉ௬அ.

முற்றிற்று.

மச்சேந்திரநாதர் சரித்திரம்.

சங்கரனெரு நாள்பாற் சாகரதி ரத்கில
மங்கையொடினி துற்று மகிழதருகிற ராமன்
தங்கருளுரு வத்தைத் தனதுளமுற வைததுப
பங்கமிலவ னுமமபகர்தருமவ னுனன். (௧)

அதுதெரிபமா யான வம்பிகைபதி யான
விதுவணிமுடி யானை வேண்டினளுனை மிக்க
தெதுவுளதொரு தெய்வ மெனவினவலு மன்னுன்
கதுமெனரகு ராமன் காரணமுமா செய்வான. (௨)

பிரமனைமுத லாகப் பேசிமையவ ரோடே
அரனெனவுள யானு மாவதுமவ னுலே
கிரனிலையித னுலே சீஹரிதிரு நாமம்
பரவுவெனவ னீலப் படிவமுமுளம் வைபபேன் (௩)

என்றதுவின வுற்ற விம்மலைமக டேர்ந்து
நன்றது ஞகத்தி னண்ணியுமிது காறும்
ஒன்றதுதெரி யாம லுறைவதுதக வாமோ
இன்றதுமொழி கிற்பா யெனவிரசித வெற்பான். (௪)

பணிவுடனெதிர் நிற்கும் பார்வதிதலை மேற்கை
அணிவுடனுப தெச மறைதருகிற போது
துணிவுறுநினை வின்றிச் சோர்துயிலது மேவ
மணிதருகடல் மீனின் வயின்மகவும் மென்றே. (௫)

சிவனருளுட தேசஞ் செலிகொடுவின வுற்று
நவுநரவுரு வாகி நண்ணியவது கண்டு
திவமிகவுறு மச்சேந் திரனெனுமொரு நாமம்
பவனிலகுற நல்கிப் பார்வதியொடு போனான். (௬)

அம்மகவுட னேயீ சானனதரு ளாலே
செம்மைகொள்வை ராக லிலமென்மேலாகி
வெம்மயலது வின்றி மேவரிதிரு நாமம்
தம்மணிநா வோதத் தனிதிரி தரலானார் (௭)

தாய்வயிறது விட்டுத்தாம் வருகிற போதே
மேயினஹம் சோஹம் விடுகிலரத னாலே
ஓய்வருதிரி காலமும்முணர்தரு சக்தி
ஆயினர்யா ராலு மரிவருநிலை யுற்றார் (௮)

அகலிடமுள தீர்த்தம் யாவையுமே மூழ்குந்
தகவுறுநினை வோடு தாம்வருமூர் தோறும்
நுகர்தரலிர வூனுய் நோன்பது செயல் காடாய்
பிகவயதீ ராறு மேவினர்வரு நாளில். (௯)

ஒருதினமோ ரூரிலோர்தனவணி கன்வாழ்
தருமனைமுன் நின்று சாற்றினரா லக்கென்
றருமைகொ ளொலி கேளா வம்மனையுநா கிற்பாள்
இருகரநிறை பிச்சை யேந்தின ளெதிர்வந்தாள். (௰)

வந்தவளெதிர் நிற்கு மாதவர் தமைநோக்கி
அந்தமிலுப சாரத் தஞ்சலிபல செய்து
நிந்தையிலுரு வத்தீர் நீரிவண்வரு மாயான்
எந்தநல்வினை செய்தே னென்றுருகின ளன்பால். (௰௧)

அன்புறவெதிர் நின்றீ ராதலி னடியேற்கோர்
துன்பிலைமக வில்லை யெனுமொருதுய ரன்றி
நன்பொருளுணர் கிற்கு நற்றவமுதி யோரே
இன்புடனருள் செய்வீ ரென்றரிசியை யிட்டாள். (௰௨)

அன்றவளுநா செய்யு மன்புறுமொழி கேளா
மன்னினதவ யோகர் மற்றவள்முக நோக்கி
நின்னிடமக வுண்டா நீயிது பெறுகென்று
நன்னிற முளநீறு நல்கினருரை செய்வார். (௰௩)

நீயிதையுண் பாயே னின்வயி னெடுமாறன்
தூயநலம் சத்தாற் றோன்றுவன்மக வென்றே
ஆயவரகல் வுற்றா ரானபி னம்மாது
போயயல் மனையாளைப் புகவகம்வரு வித்தாள் (௰௪)

வருமவடனை நோக்கி மானனவிழி யாளே
ஒருதுறவின ரிங்கே யுற்றனர்பெறு பிச்சை
தருதல்செய்தவர் தம்மைச்சந் ததியருள் கென்றேன்
அருளினர்திரு நீற்றை யயில்கெனவவர் போனார் (௰௫)

நானுணநினை கின்றே னவிலுநினினை வென்ன
மீனுறழ்விழி யன்னாள் வேண்டலைதிரு நீறு
தானுணவுத விப்பின் றம்வசம்வரல் செய்வோ
ரானுணர்வது மாறி னார்பலரறி யென்றார். (௩௬)

அவளுநாகொடு நீயி லன்னதை யிட்டாள்பின்
நவமுடனொரு மூன்று நண்ணின வாண்டாக
உவமையின்மச் சேந்த்ர நாதருமுவ ணுற்றார்
இவள்மனையிலும் வந்தே இடுகென வெதிர நின்றார். (௩௭)

மற்றவளிடு பிச்சை வாங்கினாமுக நோக்கி
அற்றையினினை வுண்டா யரிவைநின்மக னெங்கே
இற்றையெனெதிர் காட்டு கென்றனரவ ளஞ்சிச்
சொற்றருகில ணின்றா ளுள்ளது சொல்கென்றா. (௩௮)

மாதவரே நீற்றால் வஞ்சனை யுளதென்றே
ஓதயன்மனை யாளா லுளவடுப புறுகீயில்
மேதகுதிரு நீற்றை யிட்டனன்வெகு ளன்மின்
ஏதமிதென வென்றா ளெதிர்துறவினா சொலவார். (௩௯)

நீறிடுபலி யெங்கே நீயிடுமிட மென்ன
மாறிலன்பனி ரண்டு வருடமுமிடு சாம்பர்
வீறொருகுழி யுண்டென் றக்குழியிடை மேவ
ஆறினர்தமை யுய்த்தா ளன்னவரவ ணின்றே (௪௦)

அதிர்தரவா லக்கென் றாரதுவின வுற்று
முதிர்குழியிடை நின்று முந்தினதா தேசென்
றெதிரொலிகுரு சாமி யென்பதொடது கேளாப்
பொதிரதிசய ராகிப பொங்கினரு ருள்ளார் (௪௧)

அவ்வயின்மச் சேந்தர ரானவர்வணி கன்றன்
செவ்வியமனை யாட்குச் செப்பினராட் கூட்டி
இவ்வயினுறு குப்பை யெடுமெனவெடுப் பிக்கத
தீவ்வியவுரு வோடு சேயுறுவது கண்டார் (௪௨)

பன்னிருவய துள்ள படிவமொடுரு யோகு
மன்னினர்படி மீது வைகுதலில ராக
முன்னுறுவது கண்டு முற்றியதவ யோகர்
சென்னியின்மிசை யத்தஞ் சேர்த்தினர்நிலைதீர (௪௩)

அக்குழியிடை யுற்றோ ரப்பொழுதெழ லுற்றுத்
தக்கவரிரு தாளிற் றாழ்தலுநா மந்தான்
தொக்கதொர்பலி கின்றுந் தோன்றினரத னாலே
மிக்கதொர்கோ ரக்க ளென்றனர்வினை தீர்ந்தார் (௪௪)

வேறு.

குழியினின்றும் வெளியில்வந்த கோரக்க நாதர்தமைக் கூட்டிக்கெண்டு
பழியிகந்த முனிவர்செல்லப் பார்த்ததன வணிகன்றன் பாரிதன்னை
மொழிகடந்தின் னனசெய்தா யெனவெறுக்கப் பெரியதவ மோனர்கண்டு
விழியினருள் சுரந்துமக்கு மகனுண்டா மெனவாழ்த்தி மேவி னாரே (௪௫)

போம்பொழுது கோரக்கர் மச்சேந்திரர் தமைப்பணிந்து பொருந்தெனக்குத்
தாம்பதுமக் கரமெனது தலைவைத்துத் தாரகமந் திரத்தைச்சாற்றி
மேம்படுத்து கெனவேண்ட மச்சேந்தர நாதருடன் விளம்ப கில்லார்
ஓம்புகுரு சேவைசெய்தாற் பின்புதெரிந் துபதேச முறுதி யென்றார் (உசு)
நன்றென்று கோரக்கர் நவில்குருவின் றாள்வணங்கி நடந்து கூடச்
சென்றங்கோர் நகரத்தின் புறத்திருந்து பிச்சைகொண்டு சேர்கோ ரக்கா
என்றந்த மொழிகேட்டுக் கோரக்கர் மனைகடொறு மிரந்து சென்று
மூன்றுன்று பிராமணபோ ஜனமனைமு னுலக்கு மொழிந்து நின்றார் (உஎ)
அம்மனைவாழ் பார்ப்பினியச் சொற்கேட்டு வடைபோளி யதிர சம்பை
விம்மநிறைத் தலுங்கொண்டு மேவிவெளிப் புறத்திலுறு விமல ருக்குத்
தம்மனதன் புடன்கொடுக்கத் தாமுண்டு சந்தோஷந் தழைப்ப தாகி
இம்மதுர வடையெனக்கு ருசியாகி யிருத்தலா லினமும் வேண்டும். (உஅ)
நானைக்குங் கொணர்கவெனக் கோரக்க ரப்படியே நகருட் சென்றிவ்
வேளைக்குந் தரல்வேண்டு நேற்றளித்த வடையென்று வினவக்கேட்டு
வாளைக்கு நிகர்விழியா ளின்றேது தானியநீ வாங்கு கென்னக்
காளைக்கு நிகர்சிறுவர் குருவுக்கு வேண்டுமது கடிதீ கென்றார் (உகூ)
அதுகிடையா தெதுவேண்டு மாயினும்யான் றருவலென வன்னாள் கூற
எதுவளித்தா லும்வேண்டே னிக்கலையேற் போகிலனென் றிவருங் கூற
மதுமலர்சூழ் குழலினவள் மாதவவே டங்கொண்டு வருகின் றோருக்
கிதுதெரியா தோ விலதிங் கெங்கிருந்து வருமென்றே யிகன்றுசொல்வாள் (௩௦)
உன்கண்ணைக் குருவினவிற் றருவாயோ தரத்தக்க துளதேல் யானும்
நின்கண்வடை தரத்தக்க திப்போதென் றுரைசெய்ய நிமலர் கேட்டு
நன்கணொன்றைப் பறித்தவர்க்கு நல்குவதை யுனக்கீவே னென்று நல்கப்
புன்கணுடன் பயந்தவளு மவர்விழிவார் செந்நீரைப் போக்கிநின்றாள். (௩௧)
தயைசாந்தி வைராகந் தாங்கிநின்ற கோரக்கர் தம்மு னின்று
பயநீளும் பார்ப்பனியை யஞ்சேனீ வடைசெய்து பரிந்தீ கென்னும்
நயமான மொழிகேட்டு விரைவினெய்யிற்செய்ததனை நல்கலோடும்[ட்டார். (௩௨)
துயர்தீர்தி யென்றுரைத்தோர் கரத்தாற்போம் விழிமறைத்துச் சோரார் மீண்
வந்துகுரு வடிவணங்கி வடைபுசித்தி றானமுன்பு வைக்கக்கண்டங்
கெந்தவிதத் தாலுனது கண்போன தெனவுள்ள தியம்ப லோடும்
இந்தநெடுந் தீரமரி தெனக்குமற்றைக் கண்ணுதவு கெனக்கோ ரக்கர்
அந்தவிழி யையும்பறித்து முன்வைக்க மச்சேந்தர ரதிச யித்தார் (௩௩)
உடனேநல் லன்பனென வுகந்தவரைத் தடவிவிழி யுடைய ராக்கித்
திடமேவு மான்மஞா னந்தன்னை யுபதேசஞ் செய்து ணுண்டார்
மடமேவு மயலிகந்த கோரக்கர் தமக்குமிச்சில் வாய்ப்ப நல்கித்
தடமேவு சீடனுனைப் போலெனக்குக் கிடைப்பரிது ஜகத்தி லென்றார் (௩௪)
கோரக்கர் சாம்பவரத் துவயர் பிர பாவர் கைனி யர் நிவர்த்தர்
போரப்பொங் கியஞான தேவர்விசோ பாநாமர் புகல்ஜ னுயி
சீரொத்த விவர்களொரு வருக்கொருவ ருபதேசஞ் செய்யப்பெற்று
நேரொத்த வான்மஞானம் புவியிற் பரம்பரையாய் நிலவிற் றம்மா (௩௫)

மச்சேந்திரநாதர் திருவடிகளே சரணம்.

ஆக சரித்திரம் ௩௫-க்கு செய்யுள் தூசு ௩௩.

முற்றிற்று.

கோபிசந்தராஜன் சரித்திரம்

உத்தரகண் டத்துளே கௌடபங் கா லென்னு மிராச்சி யத்துள்
சித்திரகாஞ் சனபுரிக்கோ ரரசனுந் திரிலோக சந்த னென்னும்
அத்தகுசீ ரரசன்மிக வும்பிர தா பசாலியா யாண்டு வந்தான்
சத்திய னுகியவிவன்றன் பட்டமனை யாளழகு தனிற்சி றந்தே. (க)

நற்குணநற் செய்கைகள்யா வும்பொருந்தி னவளாமை னுவ திக்கு
மிக்குளரு பலாவணிய மிகுந்தமகன் கோபிசந்தன் மேவு நாளில்
தக்கவவன் பிதாவான திரிலோக சந்தென்போன் சாத லாக
பிற்குழந்தை யாகியகோ பிசந்தனர சாளுங்கா லத்தின் மாதோ. (உ)

ஆயிரத்தோ டிருநூறு மனைவிகளை விவாகஞ்செய் தமர்ந்தும் போகம்
தோய்தலுக்கோ ராயிரத்தோ டறுநூறு தோகையர்நா டகசா லைக்கண்
மேயிருக்க வைத்திராப் பகற்சகல விபவமுடன் விடயா னந்தம்
தேய்தலின்றி யனுபவித்து வந்தான்ரு யாமைனு வதிசீர் சான்ற. (ங)

பதிவியோ கத்திலுன் மிகுந்தவயி ராகமுற்ரூர் பகன்மேன் மாடம்
அதிலேறி யுதாசீன மாய்நான்கு திக்கிலும்பார்த் தமரும் போது
நிதிமேவு மந்நகரத் திற்சகல சித்திகளு நிறைவு நேர்ந்த
விதிமேவு மாசாபா சங்கள்கன விலுநினையா வான்ம ஞானி. (ச)

ஆகியரி தன்னையிடை விடாமற்றியா னித்திடுவ ராயும் பிச்சை
வாகொடெடுத் துண்பவரா யும்விகார சீலமுள வராயுஞ் சால
பூகமிகு தயைசாத்து விகமுடைய ஜாலந்த ரர்க னற்றற்
கேகியா ரணியத்திற் சென்றுலர்ந்து கிடக்கும்விற குகளெ டுத்து. (ரு)

கட்டாகக் கட்டித்தந் தலையேற்றி வழிநோக்கிக் கடுகும் போது
கிட்டாத விவர்தேக நிழற்பூமி யிற்கிளரா திந்த னங்கம்
ஒட்டாதோர் முழத்துக்கு மேல்விறகு கட்டுவரு முதனைநோக்கி
எட்டாத வாச்சரிய மிதுவென்னை யென்றுதிகைத் திந்த மாது (சு)

இவரோமா னிடரல்ல ரிறையவனே யெனநினைநதிங் கிவரொ னக்குப்
பவரோகந் தீர்த்தருள்வா ரெனத்துணிந்து மானவெட்கம் பலவு நீத்தே
அவர்தாளே சரணெனவேண் டியதென்றங் கவர்மேவு மடத்தை நோக்கித்
தவர்பாதந் தனக்குபசா ரம்புரிய வேண்டுவன தருவித் தேக. (எ)

ஆராய்ந்து தாதியரோ டம்மடத்திற் சதானந்த ராகிச் சீமந்
நாராய ணன்பதத்திற் சித்தம்வைத்துத் தங்குகின்ற நல்லோர் முன்பு
சீராகச் சிரமீது கரங்குவித்துப் போய்வணங்கிச் சீரி யோரே
நேராக வுபதேச நல்கியெனைக் காத்திரென்று நின்று வேண்ட. (அ)

வினவுமவர் நானெளியேன் கண்டவிட மெலாந்திரிவே னீயோ வேந்தற்
கனையுனது பெருமைக்குத் தக்கவரா யாய்ந்திதோ பதேசம் பெற்ரூல்
நனிநலமா யிருக்குமென வும்மின்மிக்கோ ரின்றென்று நான்ம தித்துப்
புனிதமுள்ளவுமைச்சரணம் புகுந்தவெனக் குபதேசம் புரிக வென்ரூர். (கூ)

அதற்கவடன் றிரிகரண சுத்திகண்டா னந்தங்கொண் டருக ழைத்தங்
கிதத்தொடுதங் கரஞ்சிரம்வைத் திணையிலுப தேசத்தை யினிது நல்க
மதர்க்கும்விழி யவட்குடனே மமதையகன் றிறையவனை மனத்திற் கண்டு
சுதத்தைவிட்டுக் குருநாதன் றனைவணங்கி யானந்தங் கதித்து நின்றாள். (ப)

விடையுதவ மனைமேவி யவகாச நேரிட்ட வேளை யெல்லாந்
தடையறத்தன் குருநாத னருகில்வந்தான் மாநுபவந் தனைப்பே சிக்கொண்
டடையுமனை புகுந்துள்ளம் பரிசுத்த மாயரியை யானந் தத்தோ
டிடையறத்தேர்ந் திருக்குநாள் சிலகழிய மகன்செய்கை யியம்பு கிற்பாம். (ஙக)

வேறு

மைந்த னான மகிபதி யோர்தினஞ்
சந்தமேவித் தனக்குப் பிரியையாய்
முந்த லாமனை யாண்முக நோக்குற
வந்த னன்வந்த போது மகிழ்வுடன். (ஙஉ)

சயன மேவித்தாம் பூலங் கொடுத்தெனக்
கியைவ தாகிய வென்பிராண நாதனே
மயல்செ யான்சொலும வார்த்தையைக் கேட்டினித்
தயைசெய் வீரொனச் சாற்றுகின் றாளரோ. (ஙங)

உமது தாய்க்குப தேசம் வகுத்துநன்
கமைவு செய்தவ டன்வச மாக்கிய
விமலன் போல்பவன் பாற்றின மேவலால்
நமர்களுக்குப் பழிப்பு நணுகின. (ஙச)

என்ன வேயவ் விறைவனுக் குச்சினந்
துன்ன லாகிநீ சொல்வதைக் காலையில்
இன்ன தென்றறி வேனென் றிராச்செல
மன்ன வைக்குவந் தோன்மந்தி ரிதனை. (ஙரு)

நேர்க்கி யிங்கொரு நோன்பினர் பற்பலு
ளாய்க்கி ளர்ந்துசா லந்தர ரென்னும்பேர்
வாய்க்கின் றோர்தமை நான்கண்டு வந்திக்கப்
போய்க்கொ ளுவெனப் போக்கினன் போயினன். (ஙசு)

பரிச னங்க ளுடன்சென்று பண்புளோர்த்
தரிச னஞ்செய்து தாழ்ந்துமை யெம்மிறை
துரிசி லாது தொழற்கழைத் தானென
கரிசி லார்நடந் தேகவக் காவலன். (ஙஎ)

எதிரொ ழுந்துவந் தன்பினி றைஞ்சித்தன்
அதிர வைக்கழைத் தாசனந் தந்தகிற்
றுதிசெய் தேத்தியின் றைத்தினந் துன்னிதிர்
முதிய ரேயென்று நன்குமொ ழிந்தனன். (ஙஅ)

அன்றி ராவவ ரன்னவன் சொற்படி
துன்றி னார்துயி லக்கண்டு தோன்றரூன்
றென்றி வீரரின் மேவுங்கி ணற்றிடைச்
சென்றி வன்றனைச் சிக்கிரம் வீழ்த்தியே (ஙகூ)

மீதி லத்தியின் மூடித்தூர் மின்னென
நீதி யின்றிவி ழுத்திநி ரப்பினர்
கோதி லாதவர் கூவத்து ணீரின்மேல்
தீதி லாதுதி யானத்தி ருந்தனர் (௨௫)

உதயமாயின பின்மயி ளுவதி
சிதைவி லாததந் தேசிக னைத்துரீஇ
இதய நொந்துநீ ரின்றிம யங்குமீன்
அதையு மன்னையில் லாதம கவும்போல் (௨௬)

தத்த ளித்துத்த யங்கிப் புலம்பியென்
உத்த மக்குரு வெங்கணுற் றூர்கொலோ
எத்தி சைச்சென்று காண்பெனென் றேங்கியூண்
நித்தி னைக்கொள்வ தின்றி நினைப்பிலாள் (௨௨)

ஆயி ருக்கச்சால ந்தரர் சீடரில்
நேயமிக்கசா னேபாவென் போர்பவ
நோய றுத்தெழு நூற்றுவர் தம்முடன்
தூய விப்புவி முற்றுந் துருவுற (௨௩)

இங்கு வேந்தனெ ருதினத் தின்பொடு
தங்கு முன்றிலி னேரந்த யங்கொளி
பொங்கு மாசனத் திற்பொலி வாயுற
அங்கு மாத ரமைத்தத யிலத்தால் (௨௪)

தலையிற் றேய்த்துடம் பெங்குந் தடவமீ
துலவக் காலுற வீசவு லாசமாய்
இலகு றத்திரி வோரொழில் கண்டுகோன்
கலவைச் சேறு கமழக் களித்தனன் (௨௫)

என்னைப் போல்பவ ரெங்குள ரின்றெனத்
தன்னைத் தான்மதித் துற்றது கண்டனள்
மின்னைப போலுமைளுவதி மேனிலை
மன்னச் சாளர வாயுறீஇக் கீழரோ (௨௬)

இனைய பேரழ குள்ளவென் மைந்தனே
வினையி ளுலெமன் கைவச மேவுவான்
எனநி னைந்தழு தாளிரு கண்ணினீர்
அனையன் மேல்விழ யார்தெளித் தாரெனு (௨௭)

மீது பார்த்தன்னை மிக்கழு தற்கிவண்
யாது காரண மென்னலு முன்பிதா
தீது தீருன்னி லுஞ்செவ்வி யோர்திறம்
பாது காலன்கைப் பட்டனர் போலவே. (௨௮)

வாயுஞ் செல்வ மனைவிம காருடன்
ஏயுங் காமத் தழுந்தியி ருப்பதில்
நீயுங் காலன்கை நேரிடு வாயெனு
நோயி ளுன்மன நொந்தழு தேனெனு (௨௯)

தோன்றும் யாவுந் தொலைவதன் றிநிலைத்
தேன்ற தொன்றுமின் றுண்டென்ப துண்டெனில்
ஆன்ற நீசொல் லெனவவ ளாசைநோய்
கீன்ற தாகக் கிளர்குரு நாதனை. (௩௰)

சரண டைந்துன் சரீர மமரமாந்
திரம தாகநீ செய்கென வப்படிக்
குரமு ளோரெவ ரோதுகெ னச்சாலந்
தரர்செய் வாரவர் தம்மையான் கண்டிலேன். (௩௧)

பனிரண் டாண்டள வாகநீ பார்ப்பதற்
கினிதின் றென்றமு கின்றதைக் கண்டு கோன்
தனின டந்ததைத் தோர்ந்தொன்றுஞ் சாறறிடா
துனிவெந் நீரின் முழுகியு ணுண்டனன். (௩௨)

உண்ட பின்னது தாபத்துடன் முன்னே
கொண்ட வோர்மனை யாள்சொலக் கோபதகி
மண்டக் கூவலின் மாய்த்தன னிந்நகா
அண்டத் தேசிக னையென் றமுங்கினன. (௩௩)

வேறு

ஏழு நூறுநற் சீடரோ டெழுந்து கானேபா
தாழ்வில் புண்ணியத் தலங்களுங் கங்கையுஞ் சாந்து
வாழ்வு சேர்நக ரங்களும் வளங்கொணு கெளும்
சூழ்தல் செய்துதே சிகனைத்தாந் துருவின ரெங்கும். (௩௪)

தெரிகி லார்சென்று பரததே சந்தனைச் சேர
வேறு.

இப்படி யெழிற்கொ ளுங்கா ளிந்திரி ரத்தில் மேவி
ஒப்பற விளங்குங் கண்ண னுழையுமை மேவு பாகன்
தப்பறு நரசிங் கம்மே தாவொடு வந்து கண்டு
மெய்ப்புடன் வணங்கி நிற்க விருப்புடன் கமலக் கண்ணன். (உவ)

தழுவின னநேக மென்கோ பிகைகளி னடுவிற் றங்கி
வழுவறு பூட ணுலங் காரத்தின் மகிழ்ந்தி யாவுங்
குழுவற வேணு கானங் குறிக்கக்கோ பிகைகள் கூடி
நழுவுத லின்றி யாட நக்கன்மத் தளங்கை கொட்ட. (உக)

விளங்கிநிற் கின்ற கண்ணன் மெய்யெழில் கண்டு சில்லோர்
துளங்கிதழ் சுவைக்க வேண்டச் சிலர்தழு வுதற்குச் சூழக்
களங்கமில் சில்லோர் செய்ய கரந்தொட வேணடச் சில்லோர்.
உளங்குளிர்ந் தினிது முத்த முதவுதற் கடுத்து வேண்ட. (உஉ)

கண்ணனெவ் வொருவ ருக்கோர் கண்ணனு யவர வர்க்குள்
நண்ணிய மனோர தங்க ணல்கின னுடல் செய்து
பெண் ணுறுபாகன் றன்னை நோக்கிக்கோ பிகையாய் மேவப்
பண்ணினை யாரா யென்னப் பசுபதி மிக நகைத்து. (உங)

நரசிங்க மேதா வுக்கு நயனத்நாற் குறிப்புச் செய்ய
விரைவுட னேடிவந்து விமலனை வணங்கக் கண்ட
முரஹரி தன்னை நோக்கி முந்திய பிறப்பி லின்னான்
உரமிகு புலியாய்ப் பிம்பா ஜிதனரு ளுறுத லானான். (உச)

செய்தவெம் பாவ மெல்லாந் தீர்ந்துவே தியர்கு லத்தில்
எய்தின னன்னை தந்தை யிறந்தபி னென்பால் வந்து
மெய்தனைத் தந்தா னேழு நாருப வாச மேவி
நைதல்கண் டிரங்கி முன்னே நான்பிர சன்னமாகி. (உரு)

உனக்கென்ன வேண்டு மென்ன வுறுவது தெரிந்தி லேன்யான்
நினகநித மானதொன்றை யருள்கென நின்னை யன்றி
எனக்நித மில்லை வேறே யென்றியான் கூட்டி வந்தேன்
அனுக்கிர கஞ்செய் கண்ணு விவனுக்கென் றறைந்து நின்றான். (உரு)

வினவிய கண்ண னந்த நரசிங்க மேதாவென்னும்
அனகர்தந் தலைமேற் கைவைத் தனுக்கிர கித்து நீயிவ
வனநதி தீரத் தென்னை மருவுகோ பிகைக ளோடு
மனம்வியந் தினிது கண்டாய் மற்றிந்த வாட நன்னை. (உஎ)

பிரபந்த மாகச் செய்தி பெரிதுல கத்தோர் கேட்கச்
சரதநின் கண்கள் காணத் தயங்குவ னின்ன வாறே
வரமிது வுனக்கேன் றோதிச் சிவனுக்கும் விடைவ ழங்க
நரசிங்க மேதா வோடு நக்கனும் வணங்கிப் போந்தான். (உஅ)

தானமர் கோயில் மேவித் தக்கதங் கவர்க்கு நல்க
லானபின் பமல லீலை யனைத்தையும் பாடல் செய்து
ஞானநற் சோதி தன்னை நயந்தகக் கண்ணிற் கண்டே
ஊனமின் றாடிப் பாடி யுளமகிழ் வெய்த லானார். (உகூ)

இவர்மனை தன்னிலுள்ளோர் யாவரு மிவரைக் காண
தவரவர் தேடித் தேடி யலைந்தன ருலையுங்காலைச்
சிவனது கோயில் மேவித் திகழ்குஜ ராத்தி பாவை
நவமுறு லீலைப் பாட னணுகினர் கேட்டு வந்து. (௬௫)

தேடுவோர் தமக்குச் சொல்லத் தெரிந்தவர் வந்த ழைத்து
நீடுறு மனையிற் சேர்க்க நிமலனைத் தினமும் பாடி
ஆடுறு மகிமை கண்டோ ரந்தணன் மகளைத் தந்து
கூடுற மணத்தைச் செய்யக் குலவினர் வாழு நாளில். (௬௬)

மகளொடு மகனைப் பெற்று மருவுமூ ராரொல் லோரும்
தகவொடு மிகக்கொண் டாடச் சௌரித னமல லீலை
அகவிழி தினமுந் தோற்ற வருள்கொடு பாடி யாடி
மிகமகிழ் வெய்தி யுஞ்ச விருத்திகெய் கிருககு நாளில். (௬௭)

அப்பதிக் கடுத்த சாம புரத்தினிற் றிரிபு ராந்த
கப்பெயர்ப் பார்ப் பான் பெற்ற கன்னிகை விவாக காலம்
இப்பொழு தென்ன நேரிட் டிருபபதைப புரோகி தர்கருக்
செப்புறக் கிஷ்ணபட்டர் சென்றனா வரனைத் தேடி. (௬௮)

விண்டுபானேய ராகி விளங்கிய கிஷ்ண பட்டர்
அண்டிய பதிக்கு வந்து நரசிங்க மேதா வான
தொண்டனைக் கண்டு மற்றுஞ் சுதனுக்கென் னெஜமா னன்றன்
பெண்டனைக் கொடுப்ப தாகப் பேசுகென் றென்னை யேவ (௬௯)

வந்தன னென்று சொல்ல மற்றவர் சம்ம திக்க
அந்தணர் பொருத்தம் யாவு மமைவது தெரிந்து வந்து
முந்தினர் நிச்ச யித்து மொழிதிரிபுராந்த கற்கு
நிந்தையில் லாது தாம்போய் மீணடதை நிகழத்தி னாரால். (௭௦)

அவ்வுரை கேட்ட யாரு நகைத்தன ரைய ரேநீர்
செவ்விய வரனைத் தேடி வந்துளீர் சிரி தாமோ
வெவ்விய மிடியி னொந்தோ னரசிங்க மேதா வென்போன்
எவ்வியல் பும்மில் லாதோன் மகனுக்கோ விசைந்து வந்தீர். (௭௧)

நன்றுநன் றென்னக் கேட்டு நவிலுவார் கிஷ்ண பட்டர்
என்றுமப் பேயோ டாடிக் கிமவரா யினி துபெற்ற
தன்றனி மகளை யீயத்தக்கதன் றென்பார் போல
நின்றநீர் மறுப்பீ ராயி னிச்சய மான பின்னர் (௭௨)

உங்குலத் தவர்கள் செய்த ஆழ்வழு வாம லுங்கை
அங்குலி யீயத் தக்க தாமென வதற்கு வேட்கும்
மங்கையைப் பெற்றோன் சொல்வான் மணமக னெமது செல்வப்
பொங்கினுக் கேற்ப வஞ்னா றூனையும் புரவிக் கூட்டம். (௭௩)

ஜஞ்சகத் திரமுந் தேர்க ளாயிர முங்குன் றூமல்
மைஞ்சரு மங்கை மாரு மருவுமு மவைகட் கேற்ப
விஞ்சுபூ டணம் பொன் னுடை விளங்குற வெகுவி னோத
பஞ்சவார் தியமு நாளைப் பகன்மண மான தாலே. (௭௪)

குறைவ்லா தெய்தல் வேண்டுங் குறிபுரோ கிதரோ யென்ன
வறியவன் வரனென் றெண்ணி மகடர மனமில் லாறுய
முறைகெடக் கூறும் வார்த்தை முகக்குறிப் பதனாற் றேர்ந்து
மறையவர் நாளை நீசொல் வகைவரு வாரொன் றோதி. (௪௩)

நரசிங்கமேதா பக்க னண்ணினர் நாளை யேதான்
பரவுநன் மணத்துக் கேற்ற பகலுள தாத லாலே
விரவுவை பவத்தி னோடு வருகென விளம்பிப் பின்னுந்
திரிபுரார் தகனை நணணிச் செபபினர் சிறபப மாதோ. (௪௪)

கேட்டவன் சிரித்து நீர்சொல் கின்றவன் மிடிய னென்று
நாட்டமில் லாது சொல்லு நயந்தெரி யாம னீரோய்
மீட்டுவந் துரைத்தீ ரெந்த விதத்தவர் வருவர் போம் போம்
கூட்டியே வருதற்கென்ன கோபமிக் குடையர் போனார். (௪௨)

மறுதினங் காலை யேசொல் வார்நர சிங்க மேதா
முறையுட னெழுந்து நித்தக் கடன்களை முடித்துநானங்
குறைவறச் செய்தீ ராறு நாமமுங் குலவச் சாத்திக்
கறையறு துளசி மாலை கழுத்தினிற் றரித்துக் கொணடு. (௪௩)

வீரவை ணவர்க ளோடு மனைவியுஞ் சேயு மேவச்
சீரரி பஜனஞ் செய்து சென்றனர் விவாகத் துக்குச்
சாரது துவரா மேவுஞ் சக்கர பாணி [illegible]
நேருருக் குமணி தன்னை நோக்கின னிகழ்த்து கின்றான். (௪௪)

என்னடி யவனே யானநரசிங்க் மேதா வென்போன்
றன்மகன் மணத்துக் கின்று சார்கின்றா னாத லாலே
நன்மணந் தன்னை நீயே முன்னிற்று நடத்தல் வேண்டும்
நின்னது கூட்டத் தோடே நேருதி யென்று கூறி. (௪௫)

உத்தவ ரக்குரூர ருறுசுகர் பிரக லாதர்
சுத்தநா ரதர்வான் மீகர் தும்புரர் புண்ட லீகர்
மெய்த்தப ராசரர்சௌ நகர்விபீ ஷணர்வி தூரர்
பொய்த்தலி லாஞ்ச நேயர் வீடுமர் சுதாமர் போல்வார். (௪௬)

கோவலர் கூட்டத் தோடு குழீஇவரச் சாது ரங்கம்
மேவரத் தேவி மாரும் வியநதுற வியமு ழங்கத்
தாவறு நரசிங் கம்மே தாவொடு கலந்து கூட
ஆவலின் வணங்கி யன்னா ரொடுமண வூர்க்கு வந்தார். (௪௭)

வந்தவர் நகர்பபு றத்து வதிநதுதிரி புராநத கற்கு
முந்துபோ யொற்ற ராலே மொழிந்திடச் செய்யக் கேட்டுச்
சிந்தையிற் றிகைத்துப் பந்து சேகரனாகி வாத்தி
யந்தமின் முழங்க வந்தான் கருடன்முன் மசக மன்னன். (௪௮)

மணமகன் வருவ தான மங்கள சம்பர மத்தை
உணர்வுற லாகி நாண முற்றனன் கிஷ்ணபட்டர்
துணர்செறி துளவ மாலைத் தூயவ னருளி னாலிவ்
வணமுற லாய தென்று மகிழ்ந்தனர் பின்பு மாதோ. (௪௯)

விச்சுவ கருமன் வந்து விவாகமண் டபத்தை யாரும்
நச்சுறப் புரிய ரம்பை மேனகை நடனஞ் செய்ய
மெய்ச்சிமே னின்று தேவர் முனிவர்வே டிக்கை பார்க்கக்
கச்சமில் பொருள்க ளெல்லாங் கலந்தமை வாகக் கொண்டு. (௫௦)

வதுவைமண் டபத்தைச் சேர்ந்து மருவுருக் குமணி யாதி
அதிகரஞ் சிதஞ்செய் கின்ற வரிவையர் மொய்த்தி ருக்க
யதுகுல நாதன் றன்னோ டியல்பவ ராருங் கூடப
புதுமணம் புரிய வேண்டிப் புகுந்தினி திருக்கும் போது. (௫௧)

மணம்புரி மகனை யீன்றோன் வந்துதஞ் சுற்றஞ் சூழ
அணங்கினைக் கொடுவந் தாங்கே யணுகவை குண்ட நாதன்
இணங்குதன் குழாங்கள் சூழ வெழுந்துப சரிக்கக் கண்டு
கணங்கொளுந் திரிபு ராந்த கன்னதி சயித்துச் சொல்வான். (௫௨)

உம்மைநா னின்று காறுங் கண்டில னும்மு ரோது
செம்மைசேர் நாம மேது செப்புதி ரென்னக் கண்ணன்
நம்மதூர் துவரை நாமஞ் சாமள நம்பி யிந்த
வெம்மையில் சிங்க மேதா மித்திர னெனக்கென் றோத. (௫௩)

அக்கணந் தனிலே பெண்ணோ டமையமாப் பினைகோ தூளி
லக்கன முகூர்த்தந் தன்னி னல்லமங் கலநாண் சாத்த
மிக்கமா மறையோ ரெல்லாம் வேண்டுன ராசி சொல்ல
எக்கிய முடிந்த பின்ன ரியலுமூர்க் கோலமாக. (௫௪)

ஐந்துநாட் சடங்குஞ் செவ்வே யானபி னிரவலாக்கும்
வந்துள மறையோ ருக்கும் வழங்கினன் றானங் கணணன்
பந்துபோ ஜனஞ்செய் விக்கப் பரிவுடன் பெண்ணை யீன்றோன்
முந்துமாப் பினைக்குத் தக்க படிசெய முயன்று நின்றோன். (௫௫)

என்னுடைப் பொருள்க ளெல்லா மிவர்பொருட் குறையும்போதா
நன்னரொன் செய்கே னென்று நாணுதல் கண்டு கண்ணன்
முன்னரோ தனக்குத் தக்க சம்பந்த முயல்கி லாது
பின்னர்யோ சித்து நாணிற் பிழையுனக் குளதே செய்க (௫௬)

எனுமது கேட்டுத் தன்னு லியல்வகை செய்யச் செய்து
பினரவன் றன்னை நோக்கிப் பெரிதரி தாச ருக்கு
நினதுபெண் கொடுத்து நன்கு நின்றதா லென்றும் வாழ்தி
இனிதென வாழ்த்தி நார சிங்கமே தாவே யின்றே. (௫௭)

வருகென யாருங் கூட மாப்பினை பெண்ணோ டெய்தத்
திரிபுராந் தகனு நேரோ வழிவிட்டுச் செல்லத் தாசர்
மருவுமூர் சேரச் செய்து மற்றுநீ நினையும் போது
பரிவுடன் வருவ னென்று பகர்ந்தனன் றுவரா சேர்ந்தான். (௫௮)

வேறு.

வந்தவ ருடனருள் மாதவ னேக
நிந்தையி லரிபத நேயர்தி னந்தோ
றுந்திரு நாயக னுறுவகை யாவுஞ்
சிந்தையு ளேகொடு பஜனைசி றந்தார். (௫௯)

வளர்வுறு நாளிடை வந்தனர் துவரா
அளவுற லாகிய யாத்திரை யாரிற்
கிளரொரு நல்லவர் கேசவ பட்டர்
களவள தென்பது கருதின ருற்றார். (௧௩)

போகிற வழியுள பொருள்கவ வுற்றால
எகுவ தெபபடி யெனவ வண யாரோ
சகைகொ டவ்விடை யீவகை செய்வோ
வாகுட னென்னவு சாவிட மாணார். (௧௪)

இங்குள ரீவகை செய்பவர் நார
சிங்கரொ ணும்பெய ராரெனல் செய்ய
அங்கவர் தம்முழை யன்னவ ரெய்திப
பங்கமி லொன வுற்றது பகர்வார். (௧௨)

நம்முழை நானது நூறுவி ரகன்
செம்மைய டன்றரு கின்றது சொ
நம்மது நாயக னணணுது ம
தம்மிடை யென்வயி னீதல்ச மைப்ரீ. (௧௩)

என்றுரை செய்வதி னியல்பணர் தாச
நன்றென வேகொடு நலகி ர கிட்டித்
தன்றனை யேநிகர சாமள நம்பி
கன்றது வேகொடு சென்றன ரன்றே. (௧௪)

தருபொருள் கொண்டரி தாச்ர்த மில்லில்
வருவயி ணவர்பெற மகிழ்வின்ல ழங்கித்
திருநெடு மால்பெயர் செபபியி ருக்க
ஒருதுவ ராபதி யுற்றது ரைபபாம். (௧௫)

போமவர் தம்பொருள் கொண்டவா புரிவ
காமதை யுன்னிய கத்தில்வி யந்து
தாமதி தூரந டந்தயல் சாருங்
கோமதி யாறுகு டைந்தனா சென்றார். (௧௬)

சென்றது வாரகை யிற்றிகழ் கண்ணன்
மன்றன்ம லர்ப்பதம் வந்தனை செய்து
நின்றரி நாமநி ரம்பநி கழ்த்திப்
பின்றனி யர்ச்சகர் தம்மடி பேணி. (௧௭)

தூமதி யீர்துவ ராபதி தன்னிற்
சாமள நம்பியெ னும்பெயர் தக்கோன்
ஆமக மெங்கறை வீரொன வன்றார்
நாமம நிந்திலெ மென்றுந வின்றார். (௧௮)

பின்புறம் வந்துமவி ஞவினர் பேரோர்
இன்பினிவ் வூரினி லில்லையெ னக்கேட்
டென்புரி தும்மென வெண்ணின ரங்கே
துன்புமி குந்துறல் கண்டவர் சொல்வார். (௧௯)

ஏன்னிவ ணிங்ஙனி னைந்தயர் கின்றீர்
சொன்மென வுற்றது சொல்லினர் கேட்டோர்
நன்மதி யீநர சிங்கனெ னும்போ
துன்னினன் வெம்மிடி துன்னின னின்னும். (எம)

மானமு டாணுமி லான்வயி னெங்ஙன்
ானமி னும்பொரு ளீந்தனி ரன்றே
போனது நீர்துயர் புக்குற லாலென்
றூனுறு மென்றுச லிப்பைய கன்ற. (எக)

பின்னரு மிவ்வகை பேதுற வேயான்
முன்னரி யற்றிய தேதென முன்னிப
பன்னரு மின்னல்ப டிந்தனா தம்பால்
நன்னர டைந்தொரு சாமள நம்பி. (எஉ)

இவணடை நீரொவ ரெய்திய தென்னை
நவநர ரேயுரா செய்ம்மென நானித்
துவரையின் மேவுது ழாய்விரி மாரபத்
துவமையி லாதவ னைத்தொழ வுற்றேன் (எங)

கள்ளர்ப யத்தினில் வைத்தது காமம
விள்ளுநர் பாலறு நூறுவி ராகன்
கொள்ளவர் தீட்டி து கொண்டுகொ டேபான்
தள்ளரு மாளொரு சாமள நம்பி (எச)

இங்கிலை யென்றனர் யாவரு மீதால்
மங்குறு கின்றனன் மாதுய ரத்திற்
பொங்கிய தேர்மிசை வந்துபு குந்தோ
யெங்குளை யாரென யாமள நம்பி (எரு)

என்பவன் யானினி யும்பொருள் யாவும்
இன்புட னீரபெற வையுற வில்லை
அன்புட னென்யஜ மானன னித்த
நன்பொரு ளாதர வெங்கென நல்க (எசு)

பெற்றரு ணன்குபி றங்குவி ழிக்கண்
ஒற்றுதல் செய்நரு குத்தவ ராதி
மற்றுமு ளார்முக நோக்கிம கிழ்ந்து
நற்றிய வென்யஜ மானன யந்தே (எஎ)

எழுதிய சீரினை யென்சொல்வெ னென்ன
வழுவறு முத்தவ ராதியர் மாயம்
ஒழிகிலை யுன்கப டத்தினை யொன்றெ
அழிவுறலின்றருள் செய்வத னாலே (எஅ)

பற்றிலர் "பற்றென நின்றருள் பண்பே
உற்றுனை யென்றுளு கந்தன ரேத்த
நற்றுணை யாய்வரு நம்பிந யத்தோ
டற்றுதொ கைப்பொருண் முற்றுமளித்தான் (எகூ)

கேசவ பட்டர்கி டைத்தனர் கண்போய்
நாசமி லாதது பெற்றென நாடி
ஈசனு டைச்செய லிங்கிது வென்ன
நேசமி குந்துநி கழ்த்துத லானார் (அ௫)

நின்யஜ மானனை நீடுற நோக்கிற்
புன்மிடி யோனென லாயது பொற்பார்
உன்வ யினுற்றசி றப்பினை யுன்னில்
மன்மக னென்னம தித்திட வாய்த்தாய் (அக)

இப்படி யாயுற லெங்கணு மில்லீ
தெப்படி யென்னலும் யாமள நம்பி
அப்படி யாயின தன்னவர் மையற்
குட்படி கின்றிலர் சீருறல் வேண்டார். (அஉ)

நாமந மைந வின்றுறு வாயார்
தாமடை கின்றவி திக்கெனை சாற்றல்
யாமனை சேயையெ ழிற்செயல் போல
மாமலி வாயெனை வைத்தன ரிங்கே (அ௬)

அன்னவர் தம்மரு ளாலல வோநான்
இன்னற விர்ந்தமர் கின்றன னென்று
தன்னுடன் வந்தவர் தம்மொடு பூமேற்
பொன்னமர் மார்பனு வபபொடு போனான் (அ௭)

போனபின் வந்தபொ ருட்குவை தன்னை
ஊனமி லாதெண வுற்றது மென்மே
லானது கண்டம லன்செய லீதென்
றீனமில் கேசவ பட்டரெ ழுந்தார் (அ௮)

தானமெ னைத்துள வத்தனை யுந்தந்
தானபி னங்கமர் கோயிலை யண்மி
ஞானமு தற்றனி நாதனை வந்தித்
தூனமி லார்மகிழ் வுற்றனர் மீண்டார் (அ௯)

மீண்டவர் தாநர சிங்கரை மேவி
ஆண்டுந டந்தத னைத்துமு ரைத்து
நீண்டவ னைக்கட னுய்க்கநி றைத்திர்
வேண்டிய நுகதுணை மேன்மைய ருண்டோ (அ௰)

என்றுபு கழ்ந்தினி தேகினர் பின்பு
நன்றுண ருந்தனி நல்லவர் கண்ணீ
ரொன்றுற நாதனை யுள்ளுள்வி யந்து
நின்றரி நாமநி கழ்த்தியி ருந்தார் (அ௨)

வேறு

பங்கமறு ஞானமிகு பத்தராம்
சிங்கர்மகள் மாமியனை சேர்தரா
அங்கணுறை காலைதெரு ளாகவே
பொங்குமகிழ் கொண்டதுபொ ருந்தவே. (அ௩)

தாய்மனை தனக்கறித ரச்செய்வான்
ஏயவொரு வன்னிவணி லெய்தினன்
ஆயதனை யோடுரைசெய் தானதை
நாயகனை நோக்கிநவில் வாரரோ, (கூ௦)

பாபமகல் பாகவதர் பத்தியில்
தீபநிகர் வீர்நமது செல்வியின்
சோபனந லந்திகழவு சொல்லினன்
கோபமறு குன்றுநிகர் கொள்கையீர். (௧௧)

நாமகிழ நல்வரிசை நல்குமா
ருமதனை நீரறைதி ராலென
ராமனது நாமநல நம்வயின்
ஏமமென நின்றதுணர் கென்றனர். (கூஉ)

என்றவொ ழுந்துமக ளில்வயிற்
சென்றபொழு தங்கவர்சி ரித்துநீர்
நன்றுதுள வத்தொடையு நாமமும
ஒன்றுஜப மாலையுமொ ருங்கவே. (கூ௩)

மகடனது சோபனம ணத்தினுக்
கிகழ்வுறவெ றுங்கையுட னெய்தினீர
தகவிதுகொ லோமகிழ்த ழைக்குமோ
மிகவயிண வீரொனவி ளம்பினர். (கூ௪)

வரிசைகளில் மிக்குயரும் வஸ்தெலாம்
தெரியவெழு தித்தருதிர் சேர்க்கென
அரிபதநி னைப்பினர றைந்தனர்
விரிநகைவி ளைத்தனர்வி ளம்பவே (கூ௫)

அவ்வயினெ ழுந்தொர்குடி லன்றுணிந்
தெவ்வகைகள் சொல்கெழுத வென்றனன்
நவ்விவிழி நங்கைமண நாரிதான்
மெய்வனேந லாடையணி வேண்டினள். (கூ௬)

அவ்வவர வாவுவவெ லாம்வரா
செவ்வியனை நின்விழைவு சேர்க்கென
திவ்வியகுண பூர்ணருமா செய்திட
வெவ்வினையி னேன்விழைவு மேவவே (கூ௭)

நெட்டயிலி லேகணியி னேர்மணங்
கட்டியென வும்மெழுதல் கைக்கொளா
எட்டிறுவ ராபதியு ளின்பனைக்
கிட்டுநல னேயர்நினை கிற்கவே (கூ௮)

எழுதுவதை யன்றிவர லின்றெனக்
குழுவிடைவி ராவுகுடி லன்சொலத்
தொழுமடியர் குழுறவு குழுவான்
வழுவில்சுமை யாளொடவண் வந்தனன். (கூ௯)

மறையவனெ னச்சொல்வடி வங்கொடு
நிறையுமனை வாயிலிடை நின்றுகொண்
டுறையுமடி யார்தெரிய வோதுவித்
திறையறவெ லாருமவ ணெய்தியே. (௩)

வந்துசுமை யாளொடுதம் வாயிலின்
முந்துமறை வேதியனை முன்னிநீ
எந்தநக ரிங்கணுக லேதென
இந்தநர சிங்கர்புரி யேவலேன். (௩௧)

வரிசைமக ளுக்குதவு வனவெலாம்
தெரியவொரு பெட்டி யொடு சேர்ந்ததென்
றுறைசெயவ ழைத்துளுறை யச்செய
வருமவன்வ ளைந்ததனை வாங்கியே. (௩௨)

அதிலெழுது கின்றபொருள் யாவையுங்
கதுவும்வகை யொவ்வொருக ணக்குடன்
விதவிதம ளித்தெழுது மெல்லியோன்
அதையுமவ னுதுதலை யாகவே. (௩௩)

வைத்தபொழு தங்கணுறை வாறெலாம்
மொய்தநதிச யித்துமகிழ முநதவே
மெய்த்துநகை செய்துமதி மெலலியோய்
மொத்தைமணு னுதுதலை மோதவோ. (௩௪)

பெற்றனையெ னப்பலபி தற்றினர்
மற்றவனு நாணிமிக மாழகினன்
நற்றவமி குத்தநர சிங்கரை
உற்றனைவ ரும்புகழ்த லுற்றனர். (௩௫)

ஞானநல மிக்கநர சிங்கரோ
ஜானகிம னுளனருள் தங்கினீர
ஆனவதை யிபபொழுத றிந்துளேம்
ஈனமதி யேமெனவி றைஞ்சினர். (௩௬)

பின்புக ளுக்கணிபி றங்கவே
இன்புதரு சோபனமி யற்றினர்
அன்பின்விடை பெற்றுதம தாயனூர்
முன்புதிகழ் கண்ணனெடு முந்தினர். (௩௭)

கூடவரு கண்ணன்மகிழ் கொள்ளவே
நீடுபுகழ் கூறியெனி மித்தமாய்
ஆடரவின் மீதுதுயி லப்பனை
வாடுசிர மம்படவும் வாய்த்ததே. (௩௮)

என்றவரை நோக்கிமகிழ் வெய்தியே
குன்றவரை கொண்டமுகில் கோதிலீர்
ஒன்றவரை வுற்றபடி யுய்த்துளேன்
துன்றவனை வீருமது தோளெனு. (௩௯)

தனதொருக மூத்திலுறு தண்டுழாய்
வனவணிய லைக்கொடுமெ கிழ்ச்சியாய்
அனகர்கள னிற்பொலிவ தாக்கினன்
பினரவர்வ ணங்கவிடை பெற்றனன். (௩௮)

அன்றுமுத லன்னவர்க மூத்திலே
நின்றபஜ னைப்பொழுதி னேரவே
துன்றரிக மூத்திலுறு தொங்கருன்
நன்றுவிழ லாயதுக ளெலாம். (௩௯)

ஆகவரு கின்றதைய றிந்துமண்
கேவர சன்பெரிது மூயொ
மோகமுறும் லித்தையென முன்னியே
ஏகியது சோதனையி யற்றுவான். (௪௦)

அந்தநக ரிற்சினக ரத்துளே
வந்தரிக மூத்திலுறு மாலையை
முந்துகவ சத்தொடுமு டிந்தது
சிந்துதலி லாதுசெறி யச்செய்தான். (௪௧)

இனையநர சிங்கருமி யற்றுப
னைபுரிய நாளும்வரு தன்மைபோல்
முனைவாவி நின்றதுமொ ழிந்தபோ
தனையவர சன்புகல்வ தாயினன். (௪௨)

நீருலகி லேதினமு நேருவோர்
யாரையும யக்கிடவ றிந்துளீர்
தாருமது தோள்விழல்ச மைபபதை
நேரறிவ னின்றெனநி கழ்த்தியே. (௪௩)

மேவுதொடை தோளிடைவி ழாவிடில்
நோவுபட வேதுமைவ ருத்துவேன்
காவுமென வேயருள்செய் கண்ணனை
ஆவலுட னேதுதிய றைந்தனர். (௪௪)

என்றும்விழு தொங்கலவ ரின்களம்
துன்றலில தாகியது சோதனைக்
கன்றுவரு வோனறிய வாதரித்
தொன்று துதி நன்றுறவு ணர்த்தினர். (௪௫)

பின்னரும்வி ழாதுறுதல் பேணியே
இன்னலுட னேயிறையை யின்றுநீ
நின்னதுது ழாயணிய னேர்தியேல்
என்னகுறை வாமுனதி லென்றனர். (௪௬)

பரிவுடனி னைந்துதுதி பண்ணுமுன்
வரிவதுவ ரிந்தபடி மன்னவும்
ஹரிகளனி லாகியவிர் கின்றவோர்
தெரியலிவர் தோளிலொளி செய்ததே. (௪௭)

சிங்கரிவர் தோளிலொளி செய்துறும்
சொங்கலைய றிந்தவொரு தோன்றலும்
அங்கரிச முத்தறும லங்கரான்
எங்கெனவ றிந்தனனி லாததே. (௩௨௬)

பயமிகவி யந்தவர்ப தத்திலே
நயமுடன்வ ணங்கியிவா ராகடோ
வியலிடம திற்பிறவி மேவினா
ஜயஜயவெ னப்புகழ்த ழைக்கவே. (௩௨௭)

முகமனுரை செய்துமது முந்துசீ
தகவறிவி லாதுறுத ருக்கிறல்
மிகநுமைவ ருத்திநவை மிக்கதே
அகமகிழ்வி னோடுபொறை யாற்றுவீர். (௩௨௮)

எனுமவனை யாசிகளி யம்பியே
துனவகம்வி டுத்தரிது ணைபபசம்
மனனுறநி றுத்திமிக வாழ்த்தியே
அனுதினமு மிவ்வகைய மர்ந்தனர். (௩௨௯)

நரசிங்கமேதா திருவடிகளே சரணம்

ஆகசரித்திரம் உருகுசெய்யுள் ௩௫௨

முற்றுபெற்றது.

இராமதாசர்சரித்திரம்

பரம சதருணர் பத்தரிற் றிலகர்பார்ப் பாரில்
விரவு முத்தம ராமதா சென்றொரு மேலோர்
தாமி குத்தடாங் கூரிலே வாழ்பவர் தாஞ்சென்
றிரவு பிச்சையு ணேடுரும் பம்பெற வியல்வோர். (க)

ராம நாமமே நல்கிய னுவுடை நல்லோர்
மாம ரந்தனைக் குடைந்தநிற் றுளசியை வளர்த்துத்
தோமி லாதுநூற் றைம்பது கோசுநூ ரத்தி
லேமு யங்குது வாரகைக் கேகுவ ரொடுத்து. (உ)

வருமெ காதசித் தினந்தொறுங் கண்ணனை மருவித்
தரிச னஞ்செயும் விரதத்தைத் தவிர்கில ராகி
விரவுமார்க்கத்கி னடக்கும்போ தானந்த மேவிப்
பரம னுமத்தைப பாடின ராடினர் பயில்வார். (ரு)

தேத மீதபி மானமில் லாதவர் சென்று
வாக தாகிய கோமதி மூழ்கிமா தவன்பால்
எகி யன்பொடு வணங்கியென் பிறப்புட னிறப்புப்
போக நீயருள் கெனத்துழாய் கொண்டுபூ சிப்பார். (ச)

மீண்டு தாமுறை யூர்வரு வாரிந்த விதமாய்
ஆண்டு நாலைந்து மைந்துமே கழிதர லாக
வேண்டு கோளின. ரொருதர மேவுதல் விலக
மூண்டு றுநதுயா கொண்டவர் தவறையை முந்தி. (ரு)

பதித பாவனு ககபதி வாகனு பரமா
அதிதி ரக்ஷகா வெனக்குமூப படைந்த தனுலே
விதித ரித்திரற் கெனநின்ற நின்னிடை நேரும்
விதித விர்ந்ததா லசக்தியு மெனக்குமே வியது (சு)

இனிநின் பால்வரு கின்றில னேலுமென் னிடத்தில்
கனியு மின்னருள் குறைவுறு தருள்செயக் கடவை
எனவு ரைத்தனர் கண்கணீர் பெருகுற வெனையாள்
அனக நின்னையான் காண்பதெப் போதென வழுது (எ)

முடிவ தாகிய சேவையீ தாதலால் மொழியும்
படியெ தாயினுங் கிடைத்தில னென்றுபோய்ப் பரமன்
அடிபி டித்தன ராயுற வருணிறை கண்ணன்
துடிது டித்தது பொறுக்கில னுன்குதோ ளுடனே (அ)

ஜம்பெ ரும்படை யொடுமுக மண்டல மவிரப்
பைம்பொ னார்கலை விளங்குறு பத்தர்முன் றோன்றி
அம்பொன் மார்பகத் தணைத்தன னெடுத்தவர் தம்மை
நம்ப னேவெகு நாளெனைச் சேவித்து நயந்தாய் (அ)

ஆத லாலுனக் கியான்கடன் காரனே யானேன்
ஏது செய்குவ னெபபடி யிக்கடன் தீர்ப் பேன்
போதல் செய்குவ னின்னுட னெனைக்கொண்டு போதி
காத லோடென ராமதா சென்பவர் கருதி (௨)

உன்னை யெபபடி யான்கொண்டு போவதென் றுரைபபப
பின்னை நாயக னெனதுதேர் வரும்வந்த பின்னா
என்னை யன்னதி லேற்றியின் றிராவிடை யேநீ
நின்ன தூர்புகு கென்றுதேர் வரவுட னினைத்தான் (௩௧)

நினைத்த மாத்திரை வந்ததேர் கண்டன்பா நிமலன
றனைச்சு மந்தெடுத் தங்கதி லேற்றியூ சாரந்தார்
பினைச்ச ரணடொழு தமலனை யென்னையாள் பெரும
உனைக்க ரந்தெங்கன் வைபபதென் னகதுநீ யுற்றால (௩௨)

அங்குக் கண்டிலா தேடிவந் தடியெனை யிலைபபாரா
தங்கு நின்னினை வெபபடி யோவெனத் தளாவோ
டிங்கு றபபின்பு விடிந்தபி னெழிற்றுவா ரகையிற்
பொங்கு மாச்சகர் காணகிலா கண்ணனைப புகுநது (௩௩)

வியந்து விம்மினா மயங்கலு மவரிலோர் விரகர்
நயந்து நேற்றிரா ராமதா சென்பவர் நணுகி
இயைந்து பூசனை யியற்றினர் தினந்தொறு மியற்றப
பெயர்ந்து டன்கொடு போயின ரோவென்று பேச (௩௪)

யாரு மப்படி யாயினு மாமெனட் டாங்கூர்
சாரு வோமெனத் தெரிதரச் சார்ந்தன ராக
நேரு மன்னதை ராமதா சென்பவர் நினைந்து
சோரு நெஞ்சொடு கணணனைத் துதித்தனர் சொல்ல (௩௫)

கண்ண னேதொன்றுங் கழறில னுயுறல் கண்டு
திண்ண மேவருந் தணடனையென்றுநீ தரனை
நண்ணு மங்கொரு கூபத்திற் கிடத்தினர் நண்ண
எண்ணி வந்தவர்ச் சகரிவ ரில்லிடை யெய்தி. (௩௬)

கொண்டு வந்தகண் ணனைக்கொடு மென்றவா குறிக்கத்
தொண்டர் யான்கொடு வந்திலே னெனதகந் துருவிக்
கண்டு கொண்மினென் றுரைத்திட வர்ச்சகர் ஈடுகி
அண்ட கந்தொறுந் தேடினர் கண்டில ரயர்ந்தார் (௩௭)

கேணி வாவியிற் கிடத்தினுங் கிடத்தலா மென்று
வாணி மாமனைத் தேடின ரீட்டியான் மார்பில்
ஆணி பாய்ந்திடக் குருதிநீர்க் குமிழிமே லாகக்
கோணி ஞரிது வென்னென மூழ்கினர் கொண்டார். (௩௮)

கொண்டு கண்ணனைக் குருதிநீர் துடைத்தொரு கொடித்தேர்
அண்டு றக்கொணர்ந் தேற்றின ரூர்செலலாகக்
கண்டு ராமதா சென்பவர் கலங்கினர் கண்ணு
விண்டு போதியோ கொண்டிலே னென்றுபோய் விளம்ப (௩௯

என்று சொல்வதைக் கேட்டருள் கண்ணனங் கிரங்கி
நன்று மற்றவ ருள்ளத்திற் றெரிந்திட நணுகி
ஒன்று பண்டலீ கன்றுவா ரத்துறு வதுபோல்
என்று நின்னகத் திருப்பனீ துயருற லென்றான். (உ௰)

எனலு ராமதா சென்பவ ருன்னையர்ச் சகர்தேர்
தனிலு யர்த்தினர் தாங்கொடு போவதைத் தவிர்த்திங்
கினிதி னெப்படி யென்னகத் திருப்பைநீ யென்று
பனிம லர்க்கணீ ரொழுகுறப் பகர்ந்திடப் பகவன். (உக)

நீசொ லர்ச்சகர் தம்மிடத் தெனதுமெய் நிறைக்குத்
தேகி கங்கொடுத் தென்னைநீ கொள்கென்று செப்ப
மாசி லாதவர் நினதுமெய் நிறைக்கொத்த மாழை
பேசு மென்னிடத் தேதெனப் பின்னைநா யகனும். (உஉ)

நினது நாயகி மூக்கணி யோடெனை நிறுக்கிற்
கனநி ரப்புவ னதைத்தந்து நீயெனைக் கைக்கொள்
கெனலு மின்புட னர்ச்சக ரிடத்தவ ரேகி
அனக ரேதுவ மாயினின்று மமலனிங் காணான். (உங)

யாது காரண மோதெரி கிலமிவ னணுகுஞ்
சீத ரன்றனை யேன்கொடு செல்கிநீர் சிறக்க
மாத னந்தரு கின்றனன் மாதவ னிறைக்குப்
போத ரும்படி யமலனைத் தருகெனப் புகன்றார். (உச)

கேட்ட வர்ச்சகர் நகைத்திவன் கினைபொரு ளில்லான்
நாட்டும் வாசக நன்றுநன் றெனநவில் வதைநாம்
ஈட்டு மிவ்விடத் தறிகுது மெனவவ ரிசையக்
கூட்ட மாயின ரூருளார் கொடுப்பது குறிக்க (உரு)

வந்து கூடினர் தங்களை மாதவர் நோக்கி
இந்த வர்ச்சகர் பொருள் கொடு தருவமென் றிசைந்தார்
உந்த மக்குமு னுரைபிற ழாதுறல் வேண்டும்
முந்த ளிப்பனீர் காண்குற நிறுத்தென மொழிந்தார் (உசு)

ஊரு ளாரந்த வர்ச்சகர் தமையுற நோக்கிச்
சீரு ளீரிது சம்மத மோவென்று செப்ப
யாரு நோக்குற விவன்றரு கிற்பனே ளளித்தும்
நேரு மூர்த்தியை யென்றன ரர்ச்சகர் நிலைக்க. (உஎ)

யாவ ருந்துலை மீதம லன்றனை யேற்றித்
தாவி லன்பரை நோக்கிநீர் பொருடரு கென்ன
மேவி யில்லிடை மூக்கணி கைக்கொடு மேவ
நீவிர் போய்க்கொடு வந்ததே தென்றனர் நின்றார். (உஅ)

கைக்கு ளாயதைக் காட்டலுங் கண்டவர் நகைத்து
நிற்கு மோவிது நிறைக்கென வன்பரு நிறுத்தால்
ஒக்குமீதென வுச்சிமேற் கரங்குவித் துன்சொல்
பொய்க்கு மோவம லாவடி யார்க்குறு பொருளே. (உகூ)

மூன்ன நாரதர்சத்திய பாமையை முயக்கி
உன்னை யேகொடு போம்பொழு துருக்கும ணித்தாய்
அன்ன நற்றுலை யிடுந்துள வத்தள மலவோ
என்ன தின்பொரு ளெனத்துலை யிட்டன ரேந்த. (கூடு)

இட்டமூக்கணிக் கெம்பெரு மானிறை யேலாத்
தட்டு யர்ந்திட மூக்கணித் தட்டது தாழ
வட்ட மாகிநின் றுரொலாம் வியந்தனா வானோ
மட்டு மாமலர் சொரிந்தனர் வாழ்த்தினர் மாதோ. (கூக)

மூன்வி னோதமா யிசைந்தவர்ச் சகரொலா முன்னிப்
பொன்னி னையக னிங்ஙன மிவர்ககருள் புரிந்தால்
என்ன தாகுநஞ் செயலென மூர்த்திதா னிங்கே
நன்னர் வைகுக வெனநிலை செய்தனர் நல்கி. (கூஉ)

நல்கி யன்பரைப் புகழ்ந்தனர் துவாரசை நண்ணி
பல்க வேறொரு மூர்த்தியைப் பதிட்டைசெய் துறுமர்
மல்கு றுந்துவ ராபதி வருமவர் டாங்கூ
புல்கு கண்ணனைக் கண்டுபோ வாரினறும் பொருந்த. (கூகூ)

அகச்சரித்திரம உஉக்குச் செய்யுள் ௯ கூறு

இராமதாசர் திருவடிகளே சரணம்

முற்றிற்று.

பிரமசாரிசரித்திரம்

அரிதது வாரமெ னும்பெய ரேயராப
பரித்த பார்மிசைப பல்கிய மாநகர்
தரித்த மாமறை யோர்சகத தாசைமா
சிரித்து ளோராகலி யாணசு வாமியே. (க)

ஹரிப தாம்புயத் தாசைவிஞ் சன்னவா
பெரிது தீர்த்தமா யாத்திரை பேணினா
புரித ரபபுகும் போதினன் பாயுடன்
றுரிசி லாரொரு வன்னியுந் துன்னினா. (உ)

இரவி நன்பக லும்மிரா மன்பெயர்
பரவி யேயுள பற்பல சீதசமும
விரவி யாடிமால வீற்றிருக் கும்பதி
கரவி லாரபல கண்டுகொண டேகினா (ங)

ஏகி யான்மவின் பம்பெரி தெய்தியே
வாகு நாலுடை மால்குண மாணபைவி
வேகர் பேகிமேன் மேன்மது நாபுரி
யாக நீள்யமு னாநதி யாடினார். (ச)

ஆடி யம்மது ராபுரி யண்மியே
ந்டு மாயனைக கண்டுநீ டாதரங்
கூடி வேண்டுறும் பூசைசெய் தேகுலாயப
பாடி னாபுகழ் பற்பல பன்னியே. (ரு)

மூன்றி ராவுகண் மூந்தினர் தங்கினார்
ஆன்ற காலைகல் யாணசு வாமியங்
கூன்று மாறுதா பசுசுர முற்றதால்
என்ற வன்னியு மேகில ரெய்தினார். (சு)

பராபொ ருட்டுப காரமே பண்ணுமா
தரவி ரக்கமுஞ் சாந்தமுந் தங்கிய
பிரம சாரிநோய் போர்தரப பத்தியம்
உரம ருந்துதந் துற்றனர் நாளெலாம். (எ)

ஆறு மாதமங் கானபி னேயறத்
தேறி னார்கலி யாணசு வாமிதேர்ந்
தீறி லாதெனைக் காத்துளீ ரேயெனக்
கூறு வாருப காரநேர் கொள்வே. (அ)

ஆண்டொ ரெட்டுளோ ளானவென் றன்மகள்
வேண்டு நற்பதி நீரோன வேண்டினேன்
ஈண்டு நின்றுநா மேகின பின்புநீர்
பூண்டு கொண்மி னென் றாருனா பொய்க்கிலார். (க)

சொன்ன வாசகங் கேட்டவர் சொல்லுவார்
அன்னை தந்தையோ டாருமில் லேனெனக்
கென்னை நன்மண மெய்தவு மென்மனந்
துன்னு றுதது துக்கமென் றோதவே. (௩)

ஓது வன்னியை நோக்கியும் பாலுறு
தேத மற்றதற் கெம்பிரா னேயுளன்
ஆத லாலெனக் கானபெண் ணீர்கொள
ாதல்செய்தன னென்னலும் வன்னியே. (௪)

நீரு னாத்தவர் நேர்வரோ நும்மனை
யார்ம றுத்திடி லென்செய்வீர் நீரொன்த
தேர்த வத்தினர் சேரவா ரும்மெனப்
பாரளிப்பவன் பாலழைத் தேகினர். (௫)

அன்ன மாதவன் முன்னர்நின் றன்பிளை
டென்ன தோர்பெணை யின்னவர்க் கீகுவேன்
சொன்ன சொற்றவி றேனெனச் சொல்லி னா
பின்னை கேள்வனைச் சான்றெனப பேணியே. (௬)

வன்னி கையினீர் வாக்கிய பின்புமால
பொன்னி னாடிப்போதினைப போற்றியே
பின்னர் வன்னியைக் கைக்கொடு பேர்ந்தனா
மன்ன ரித்துவா ரத்தில்வந் தாரரோ. (௭)

வந்து வன்னியை வைத்தோரம ருங்குற
மூந்து போதில்மு கங்கொடுத் தின்னுரை
தந்தி டாதுத னையரும் பன்னியும்
நொந்தி ருந்தபின் றந்தையை நோக்கியே. (௮)

மனைய றத்தைம றந்துபொன் னீட்டுத
றனைவி தேத்துநீர் சார்ந்தனிர் யாத்திரை
புனைவி னுள்பல போக்கிபபு கும்பொழு
தினைய னைக்கொடிங் கேன்வந்தி ரென்னவே (௯)

மைந்தன் கூறியி கழ்ந்திட மற்றிவர்
நொந்து தம்மனை யாள்முக நோக்கியே
எந்த நாட்டினு மேகிம துரையில்
வந்த போதுதா பச்சுரம் வந்ததே (௧௦)

சுரத்தி னெந்துதொ லைவுப டாதெனைத்
திரத்தி னுறுதிங் கள்வரை தீர்மருந்
துரத்தி னல்கியு தவிசெய் தானிவன்
றரத்தி லென்செயத் தக்கதென் றெண்ணியே (௧௧)

நமது கன்னியை நல்குத லேநல
வமைதி யென்றரி முன்னரன் பாகிநீர்
சமைய நல்கிய ழைத்திங்குச் சார்ந்தனென்
றுமுரு மொப்புதி ரென்றுது வன்றனர். (௧௨)

யாத்தி னைக்க ணிறத்தனன் றன்னது
நித்த னீர்கொடு நாள்வரை நின்றநோய்
தீர்த்த னளிவ னென்றுநீர் செய்ததைப்
பேர்த்தி ருக்கெனப் பேசினள் பின்னரும். (உ௩)

உலகி னன்றியொ ருவர்க்கொ ருவர்செய்
திலக லென்றமுண் டன்னதற் காகநங்
குலக லக்கன்னி தன்னைக்கொ டுப்பதோ
நலமி லன்னியற் கென்று நவிலவே. (உ௪)

மதுரை நாதன்முன் யான்சொன்ன வார்த்தையைப்
பிறிர்வு செய்வதெவ் வாறெனப் பேதையும்
எதுவை வேறொன்று செய்தும கட்பெற்று
கொதும லற்கருள் கென்றது வன்றனள். (உ௫)

ஹரிப தத்திநல் லன்புகெய் யோற்குநந்
தெரிவை யைத்தரல் செவ்விய தேமறேல்
புரிகு ழற்குயி லேயெனப் பொள்ளென
விரிசி னத்தின்வி ளம்புகின் றாளரோ. (உ௬)

இன்று மிச்சொலி யம்பவி லெனன்றன்
கன்னி யைத்தன்னு டேன்கயற் றென்னலும்
மன்று மைந்தரு மற்றது வேசொல
என்ன செய்வர்கல் யானைக வாகியே. (உ௭)

வாட்ட மிக்கவ ராய்மறு தானுட்டன்
கூட்டி வந்தவெம் வன்னியைக் கூய்க்கொலி
நாட்டு வேந்தன்மு ணண்ணியெ லாஞ்சொலக்
கேட்ட மன்னவன் வன்னியைக் கேட்கின்றான். (உ௮)

கோணி லாவிமா பெற்றரு மாரிதன்
பாணி பற்றெனை பாணிகை வார்க்குபோ
தாணி யாயவன் யாரிருந் தாரொன
வாணி மாமனென் றுரைத்த வன்னியே. (உ௯)

ஆயி லந்தம துரையில் வாழுநி
நேய மோடிவன் வந்துநி கழத்திடில்
ஈய லாமிவர் பெண்ணையு னக்கென்றான்
மேய பூதல வேந்தன்வி னவியே. (உ௰)

நன்றெ னக்கொடு நம்பியவ் வன்னியுஞ்
சென்று கூட்டிய ருவெனெ னச்சென்று
நின்ற மாமது ராபுரி நித்தன்முன்
ஒன்றி யஞ்சலித் தோதுகின் றாரரோ. (உ௰௧)

ஐய னேயகி லங்களுக் கன்பர்க்கு
மெய்ய னேயுன்றன் முன்னந்த வேதியர்
கையி னீர்தரக் கண்டனே யாதலால்
வைய மன்னன்மு னீவரல் வாய்த்ததே. (உ௰௨)

அரசன் முன்வந்த றைகிலை யேவினிப்
பிரம சாரிசம் சாரியெ னும்பெயர்த்
தாமி ரண்டிலொன் றும்மின்றிச் சாம்புவேன்
கரனி னீர்கொண்ட காரணத் தாலென்றார். (கூ0)

உன்னை யன்றியொ ருதுணை வேறிலா
என்னைக் காத்தியென் றேத்தவி ரங்கின
பின்னை நாயகன் பின்வரு கின்றவென்
றன்னை நோக்கலை சாருதி முந்தென்றான். (கூச)

திரும்பி நோக்குதி யேலுடன் சேர்கிலேன்
விரும்பி யவ்விடத் தேநிலை மேவுவேன்
அரும்பு மன்பின னேயெனு மவ்வுரை
தரும்பொன் னுதனைத் தாழ்ந்துமுன் சாய்ந்தனர். (கூ0)

செல்லு வோர்திரு நாயகன் சேவடி
புல்லு நூபுரம் பொங்குறு மோசையை
நல்ல தாகவி னவிந டந்தனர்
தொல்ல ரித்துவா ரத்திலைத் துன்னவே. (கூ)

கோச ரைக்குப்பு றத்துக்கொ ழுஞ்சிலம்
போசை கேட்கில ருன்னித்தி ரும்பினர்
நேச மோடுடன் வந்தநி மலனும்
ஈச னின்றன னேக்குமி டத்திலே. (கூ)

நின்ற மாயவன் வன்னியை நோக்கிநீ
ஒன்று நான்முனு ரைத்ததி கந்ததால்
நன்ற தாமிங்கு நண்ணுவ னண்ணிடேன்
வென்றி மன்னனி லென்றுவி ளம்பியே. (கூ)

சென்று மன்னனைச் சேர வழைத்திவண்
ஒன்று கென்னவு டனந்த வன்னிபோய்
நன்றி மன்னனைக் கண்டுபொன் னுதனைத்
துன்று றக்கொடு வந்ததைச் சொல்லினர். (கூ)

வினவி மன்னன்வி யந்துவி ளங்குமா
சனமி ழிந்தவர் தம்மைவ ணங்கித்தன்
அனிக மோடிய மார்ப்பவம் போருக
வனிதை நாதனை வந்துவ ணங்கினான் (கூ)

வணங்கி யானந்த மாக்கடல் மூழ்கியிங்
கிணங்கு மூர்த்தியெ ழில்மது ராபுரிக்
கணங்கி ளர்ந்தொளிர் கண்ணன் மேருகண்ட
குணங்கி ளர்ந்தவ ரேயெனக் கூறினான். (கூ)

கண்டு வந்தவர் யாங்கண்ட கண்ணனே
அண்டு மூர்த்தியென் றேத வரசனுந்
தொண்ட ரோடுதொ ழுதரி நாமத்தை
மண்டு றச்சொல்லி வாழ்த்திம கிழ்ந்தனன். (கூ)

சல்ல மங்கல நாள்குறித் தஞ்சுகோ
செல்லி னீளமி லங்குறப் பந்தரிட்
டொல்லொ லிப்பல்லி யங்களு மோங்குறப்
புல்ல யாவும்பொ ருந்தவ மைத்தரோ. (சம)

மான மைந்தும கிழநதுவி ளங்குகல
யாண சாமிம களைய லங்கரித
தேண நன்மணம வன்னிக்கி யற்றியே
பூணு மாடையம பொங்கவ ழங்கினன். (சக)

சான்று தொண்டற்குச் சாற்றம துரைவாழ
தோன்ற லிவ்விடை தோன்றின னென்றுதேன்
கான்ற மாமலா நாவிகச ரித்தனா
னான்ற தேவர னைவரு மங்கனே. (கஉ)

மதுரை மாநகர் மற்றொரு மூர்தகியால்
அதுவி ளங்கவ மைதகிங்கொ ராலயம்
புதுமை செய்துபொ ருந்தவெல லாம்புரி
மதுகை மன்னன்ம கிழ்ந்திருந் தானரோ. (சங)

அன்று தொட்டுத்த பதிசை யாகியே
துன்ற ரித்துவா ரபபெயாத் தொன்னகர்
ஒன்று தக்கணத திற்பணட ரியொளிர
கின்ற மேற்கிற்று வரைகி ழக்கிலே. (சச)

மேவு ருஞ்சக நாதமவி ளங்குவரன்
பூவின் மங்கைபொ ருந்துநி றத்தி ரன்
ஓவி லுலுதி சைக்கணு முள்ளவா
தேவ தேவவென் றேத்திச்சி றக்கவே (சடு)

ஆகசரித்திரம் உ ஈக்குச செடயுள் ந்சாஅ

பிரமசாரி திருவடி களே சரணம்.

முற்றிற்று.

சூரதாசர்சரித்திரம்

துவரா புரிமே விய தோரன் றலுளங்
கவரா தரமே வுகளிப பின்மகிழ்
பவரா னவர்சத் தியபா மையகத்
தவரா யினரக் குரூரர் ஒருநாள். (க)

வர்தா ருறவா கனம்வண் மைபெறத
தந்தா தரவிஞ் சுசன்மா னமிக
முந்தார் தருவோர் முகநோக் கிமனத்
துந்தா தரமோ துவர்பா மையரோ. (உ)

முன்போ லெனின்மே விமுயங் கமுகுந்
தன்பா லினிதோ துசமர்த் துடையீ
அன்பா ளிரிநே டமளா வுதலால்
என்பா லவனைப் பிரியற் றுதிரோ. (ங)

என்றா பரியின் பிரிவான் மயலேறய்
துன்றா யிழையார் புருகோர் வுதனை
நன்றா யுணரக் குரூரா இனிநா
தன்றா னிவரில் விடைசா கிலனேல். (ச)

இவரா ருயிர்போ மெனவெண் ணியனே
வலா துறுமிவ் விடைகண் ணனையான்
தவலா துறுமா றுசமைப் பெனெனு
அவரூர் லடவத் தொடுமண் மினரே. (ரு)

மண்ண னெதிர்நின் றதுகண் டவுடன்
பண்ணின் மொழியா ரொருபா மைமிக
உண்ணாந் துயிரோ வுதலோ விமகிழ
நண்ணும் பொழுதே கினனு ரணனே. (சு)

தன்னின் னெதிர்நின் றவர்தம் மையெனே
என்னின் னிவணெய் கினையா னிலையாய்த்
துன்னும் பொழுதென் றுதொடர்ந் தகலி
மன்னந் தகனம் பவம் வாய்க் கவெனு. (எ)

தளர்சத் தியபா மைநிதா சியெனக்
கிளரப் பவமே வல்கிடைத் திநிலத்
தளவக் கவிகா லமதிற் கடிதென்
றுளமொப் பவுரைத் தனனப் பொழுதே. (அ)

குருடா மவர்கோ கநகை கணவா
அருடா னிதுவோ வெனவஞ் சலியாத்
தெருளா தவனோ வெனைநீ தெளியாச்
சுருளார் குழலா ருறுசோர் வறவே. (கூ)

நின்போ லிவணின் றனனீ யதனை
என்போ லெனவெண் ணினையா வருளும்
பொன்போ லொளிர்புங் கவனே பொறைசெய்
உன்போ லிலையா கியவுத் தமனே. (௩)

எனுமின் னுரைபற் பலியம் பிடலும்
வினவுந் திருமா லறிவேன் மெயினைச்
சினமொன் றிலென்மே இனிநீ தறவிங்
கனமும் மைநவின் றனனென் றனனே. (௩௪)

ஆயிற் கலிகா லமதிற் புவியான்
ரூயிற் பவமே வுதலைத் தவிரா
நீயிப் படியென் னெதிர்நிற் கவென
வாயிற் றுதிவைத் துவகுத் தனனே. (௩௨)

கவிசேர் வுறுகா லமதிற் பிரிவாற்
சவிபா மையொர்தா சியெனப பவமே
புவிமே வுமிடத் துநீபோ தருபோ
திவியா னுமையென் னிடைசேர்த் துவெனே. (௩௬)

வேறு.

என்று மாயனி யம்புமா
நன்று மாமது ராநகர்
துன்று கண்ணெளி துன்னிடா
தொன்றி னார்செய லோதுவாம் (௩௭)

சூர தாசரொ னச்சொலும்
பேர ராயரி பேரையே
சீர ராயுரை செய்துறுஞ்
சீர ராயினர் தேறியே. (௩௮)

பலந லப்பிர பந்தமுங்
குலவ ரிப்பெயர் கொண்டதாய்
இலகு றச்செய்தி லங்குவார்
திலகர் வைணவ சேகரர் (௩௯)

ஒருதி னம்புரு ஷோத்தமன்
றிருவ டிப்பணி செய்கையில்
கருதி யிப்பவ காரணங்
தருதி ருக்கண வன்றனை. (௪௦)

எண்ணி யன்புட னேயெதிர்
நண்ண வேண்டினர் நாடியே
கண்ண னன்புக லந்தசீர்
அண்ணல் கோயில டைந்தனர். (௪௧)

சன்னி திக்கெதிர் நின்றுதாழ்ந்
துன்னி யுச்சியின் மேற்கரந்
துன்னி டத்தமி சொல்லினார்
மன்னி யிப்பவம் வாய்த்ததே. (௪௨)

ஊரிதி ருப்பெய ரன்புடன்
விரிக ருத்தினர் மேவுநாள்
வரிபுக ழ்ச்செய வந்திவாழ்
குரிசில் பேரவை கூடுவோர். (௯௦)

தேறு பாடகர் தீரனைஞ்
ஞூறு பேரினு ணங்கியோர்
ஆறு சீபம விர்ந்திடக்
கூறு வாரொரு கோதிலார். (௯௧)

முகம்வி ரும்பினன் முன்னியே
சுகமெ லாமகிழ் தானசேன்
நிகர்வர் யாருமை நேடுறின்
மிகவு மேன்மைவி ராவினீர். (௯௨)

என்று கூறிட வின்னவர்
ஒன்று சீரிலு யர்ந்துளோய்
நன்று மென்னின லங்கொடு
துன்று வோர்பலர் சொல்லிலே. (௯௩)

பெரிய தென்றுரை பேசிய
கரிய வேலைய கத்தியர்க்
குரிய வங்கையொ டுங்கிய
தரியெ னுந்திர லண்மினோய். (௯௪)

காசி னித்தரு கஞ்சனுங்
கோசி கற்கொளி குன்றினன்
ஆசில் மாருதி யங்கையால்
மாசு ஞரிம ழுங்கினன். (௯௫)

பல்ல மென்மகன் பண்புசால்
வல்ல மாயன்ம ணத்தினில்
நல்ல சாம்பன்மு ஞரதன்
அல்லல் பாடலி லாயினன். (௯௬)

இப்ப டிக்குல கெங்கணும்
ஒப்பி லீசனு ஞற்றினன்
அப்ப டிக்குற லானபோ
தெப்ப டிக்கெனை யெண்ணுவேன். (௯௭)

எனலு மன்னவ னேசிலீர்
நனிசி றந்துமி னண்ணுவோர்
இனைய ரென்றுரை செய்கென
அனையர் கூறிட லாயினர். (௯௮)

அரச னேமது ராபுரி
சுரந லந்தெரி சூரதா
சரெனின் மிக்கவர் தானெனப்
புரவ லன்புகல் கின்றனன். (௯௯)

ஆகி லன்னவ ரெத்தனை
ராகம் வல்லவர் நன்றெனப்
பாகி னின்னிசை பற்பல
வாக வல்லவர் மன்னனே. (௪௬)

என்னு முன்னர சின்பமாய்
மின்னும் யானம் விடுத்தவர்
துன்னு முன்றுதி சொல்லிநேர்
மன்னு தாளில்வ ணங்கியே. (௪௭)

ஆச னத்துற வைத்தவர்க்
கேசில் பூசையி யற்றியே
நேச மோடுறு நீளவை
மாசில் பாடகர் மல்கினர். (௪௮)

தான சேனரி தாசனா
ஆன வன்புட னஞ்சலித்
தூன மின்றும துத்தம
ஞான கீர்த்தன நாமெலாம். (௪௯)

வினவ மிக்கவி ருப்புளேம்
அனக ரோயருள் செய்ம்மெனக்
கனநி றந்திகழ் கண்ணன்மேல்
மனமு ளோர்சொல்வ ழங்குவார். (௫௦)

நானி சைப்பது நாரணன்
கான நுஞ்செவி கட்குநேர்
ஆன தாயிலி சைப்பெனென்
றேநல் வீணையெ டுத்தரோ. (௫௧)

எழுசு ரங்களு மேலவே
வழுவி லாதுவ குத்துமால்
பழுதி லின்னிசை பாடினர்
குழுமி னோர்மயல் கொள்ளவே. (௫௨)

கங்கை பெற்றரு ளுங்களிற்
றங்கை தாள மமைக்கவெண்
பங்கை யாசனி பண்சுரம்
பொங்க நன்குபொ ருத்தவே. (௫௩)

கண்ண னுடல்க லந்துற
விண்ணு லாவிய மேனகைப்
பெண்ணெ டெண்ணிலர் பெட்புறத்
தண்ணெ னோசைத ழைக்கவே. (௫௪)

துன்பு ரூரிசை சோர்விலா
தன்பர் பாடின ரங்குளோர்
இன்பின் மூழ்கிட விவ்விதம்
மன்ப ராவவோர் மாதமே. (௫௫)

அரசன் மேவுமைஞ் ஞாறராந்
தெரிவை மாரிவர் செய்கையைப்
பெரித றிந்திசை பேணியே
சூரிசில் பாலிது கூறினர். (ருவ)

நாங்க ளும்மவர் நல்லிசைப்
பாங்கு நேர்வின வும்பர த்
தீங்கி லோயருள் செய்கென
ஓங்கு சீரின னுன்னினன். (ருக

கண்ணி லாரிவர் கண்முனே
நண்ண லாமென நாடகத்
தண்ண ரங்கிடை சார்வுறப்
பண்ணி யின்னிசை பாடவே. (ருஉ)

செய்து தேவிய ரும்வரப்
பெய்த போதவர் பெட்புற
ஐது பாடிட லானபோ
தெய்தி னளிசை யின்பினல். (ருங)

சாவ மானது தாங்கியக்
கோவி லேய்பணி கொண்டுறும்
பாவை யாகிய பாமையை
மேவு மன்பர்கண் மேவியே. (ருச)

கண்டு பாடுறு கானமுட்
கொண்டுகூவல்கு றித்திடா
தண்டு கின்றனே யாலென
மண்டு தேவியர் மாழ்கினர் (ருரு)

விழியு ளாரொன வெள்கியே
முழுக நீடிரை மூடினர்
வழுவ லிவ் விரு வரு முடன்
கழும லாகிய காலையே (ருசு)

கண்ண னங்குக லந்துமாப்
பெண்ண ணங்கொடு பேசுசீர்
அண்ண லன்பரை யுந்தன
தெண்ண ரும்வடி வெய்தவே (ருஎ)

சேர்த்து நீளொளி சேர்ந்தனன்
சீர்த்த மன்னொடு சேர்ந்துளோர்
பார்த்து மற்றிவர் பண்பினைத்
தீர்த்த ரொன்றிசை செப்பினர் (ருஅ)

ஆகச்சரித்திரம் உசக்கு செய்யுள் கூ ருகூஅ
சூரதாசர் திருவடிகளே சரணம்

முற்றிற்று.

சேனாபிகர்சரித்திரம்

நானா நன்மையு நல்க விந்தர்வாழ்
மானா வூரில்வ திந்து ளோர்குலம்
எனா தியரொனி னும்வி ரக்தராய்ச்
சேனா நாபிக ரென்றோர் செவ்வியோர். (க)

அன்னார் வாழும கத்தி லேவளை
மின்னா ராழிவி ளங்கு கையனும்
பொன்னார் மார்பனை வைத்துப் பூசனை
பன்னா ளும்புரி கின்ற பண்பினோர். (உ)

அரிநா மந்தனை யனுதி னஞ்சொல்வார்
புரியாள் மன்னவன் வேலை பூண்டுளார்
கரியா னைக்கரு தற்கு நந்தொழில்
பெரிதா குந்தடை யென்று பேணிடார். (ங)

கண்ணன் பூசனை யேக னிந்துறப்
பண்ணுஞ் செய்கையி லேப யின்றுளார்
நண்ணும் போதொரு நாளின் மூள்கிநீர்
எண்ணங் கொண்டரி பூசை யெய்தினார் (ச)

எய்தும் போதர சன்ற னேவலார்
வெய்தின் வந்துவி ரைந்த ழைத்திட
மெய்தங் கன்னவர் தேவி யார்வினாய்
நொய்தி னோதினர் கேட்டு நோன்மையோர். (ஞ)

நானிங் கில்லென நாட்டு கென்றிடத்
தேனின் மென்மொழி மாதர் சென்றழை
கோனி னேவலர் கட்குக் கூறிட
வானின் வேலர சன்க ணோதினர். (கூ)

அப்போ தன்னவ ரிற்க டுத்துளோன்
வெப்போ டோடியவ் வேந்த னோர்ந்திட
இப்போ தில்லுழை யேயி ருந்துகொண்
டெய்ப்போர் பான்மனை யாளை யுய்த்தரோ. (எ)

இல்லென் றோதவி சைத்து ளானெனச்
சொல்லும் முன்னர சன்சு ளித்துமுன்
புல்லும் வீரரா நோக்கி நீர்புகா
தில்லி லெய்தும வன்க ணேகியே. (அ)

பாசத் தாற்பிணி செய்து பையுளின்
மூசக் கொண்டிவண் மூந்து கென்றுமன்
பேசக் கண்ணபி ரான் பொறுப்பனோ
மாசற் றூருரு வாகி வந்தனன் (க

தோளி லோர்புடை தூங்க டப்பமோ
டாளு மன்னன்மு ஞகி யேசலாங்
கோளும் மாறினி தேகு றித்திட
மூளுங் கோபமெ லாமு ரிந்தவே. (ஐ)

சினமா றிம்முக வெலை செய்கையில்
நனிநன் காயது கணடு நாபிகர்
முனரீ செய்பணி தன்னில் முந்திய
தினநாள் செய்பணி யென்று கோமகன் (ஐக)

உன்கை யாலெணெ யென்ற னுச்சிமேல
நன்கு பூசுக வென்று நானெய்
மின்கொண டாமணி வேய்வ ளத்துறத
தன்கண ணுசன மீது தங்கினன். (ஐஉ)

சேனு நாபிக ளுய ஸ்ரீ ஹரி
தானு ரொண்ணெய்த லைகக ணிநதிடக்
கோனுர் வள்ளம திற்கொள் குணடலம
மேனு ரொண்முடி தோள்க ளுல்விராய (ஐங)

பொன்மா ணுடைபொ ருந்த நினிற
மன்மா மேனிவ யங்கு றததெரிந்
தென்மா மாயமெ னத்தி கைத்துமேல்
தன்மா நாபிகர் தம்மை நோக்கினன். (ஐச)

மயிர்கொய் நாவித னுய்வ யங்குறச்
செயிரில் கிண்ணம தைததி ரும்பவும
பயில்பீ தாம்பர தாரி பணபினை
உயிர்தா னின்புற வுற்று நோக்கினன். (ஐரு)

அவசங் கொண்டன ளுக வெணணெய்பூ
சுவரும் பூசுற வுள்ளு ளாரொலாம
இவர்தஞ் செய்கையெ னேயெ னததிகைத்
தவர்தங் கோனைய டைந்து கூறுவார். (ஐசு)

அரசே யிங்கிரு ஜாம மாகியும்
விரசாய் நானம்வி ரும்பி யென்னுமவ்
உரையா லேயுணர் வுற்று நின்னவன்
புரைதிர் நாபிக ளாப்பு கழ்ந்தனன். (ஐஎ)

இங்கே நீயிரு வென்றொ ராதனம்
அங்கே யீதலு மவரி ராதுறத்
தங்கா யாகிலெ னுவி தங்கிடா
தெங்கே னுஞ்செல லென்று கூறினன். (ஐஅ)

வேந்தே நானக மேவி மீளுவேன்
போந்தா டின்புன லென்ற போதவன்
ஏந்தே மங்கடி தேகி வாவென
ஏந்தா நாபிக ரிற்க ணேகியே. (ஐகூ)

அளையும் பொன்னடப் பத்து ளேயுற
முளையின் மாட்டிமு ராரி சென்றனன்
திளையு மெண்ணெயி னானந் தீர்ந்தபின்
வளைவின் மன்னவன் வந்த வைக்கணே. (உ௩)

ஏவ லாளரை நோக்கி யேயிவண்
மேவ நாபிகன் வேண்டு நீர்செலீஇக்
கூ வல் செய்துடன் கூட்டி வம்மெனக்
காவ லின்றன மீதி லென்றனன். (உ௪)

உடனே யேவல ரோடி நாபிகர்
இடனே கிவ்வரு கென்ன மற்றவர்
கட்னே சென்றுநாங் காண லென்றுதோள்
வடனோ டாரடப் பத்தை மாட்டி யே. (உ௨)

கோபங் கொண்டனன் கோனெ னுமலர்
நாபன் றன்னடி யார்ந டுக்குடன்
பூபன் றன்னவை போத லும்பிர
சாபஞ் சேர சன்னெ ழுந்தனன். (உ௩)

கண்டோர் யாவருங் கல்லெ னுநகை
கொண்டா ரன்னதெ லாங்கு றித்திடான்
வண்டார் மாலைய மன்ன னுபிகர்
ஒண்டா வும்முக நோக்கி யோதுவான். (உ௪)

உதயத் தும்முரு வததை யன்னுமென்
இதயத் தின்புற வின்று காட்டி னீர்
அதைமற் றின்னமும் யான றிந்திடச்
சிதைவற் றீரருள் செய்க வென்னவே. (உ௫)

பாதங் கைக்கொடு பற்ற மற்றிவர்
வதம் வந்ததென் றேதி கைதுறும்
போதங் கன்னவர் நீழ லுட்புக
வேதங் கெணணெயி லெய் த நோக்கினன். (உ௬)

கானுன் முன்னெனக் காவ லன்மல
ராணு தாவெளி யாக னுதரா
மானு வெண்ணுழை வந்து கீழத்தொழில்
கோனு தேபுரி கோவ லாகனு. (உ௭)

என்றென் றுன்னியி ரங்கி நாபிகா
துன்றுஞ் சேவடி பற்றி யேதொழு
தின்றும் மாலினி தெய்தி னேன்மலர்ப்
பொன்றன் னுதனை யென்று போற்றியே. (உ௮)

ஹரிநா மந்தனை யன்பு மிக்குறப்
பெரிதோ தத்துதி பேசி நாபிகர்
பரிவாற் றம்மடப் பத்தி னுட்பொருள்
கரியான் வைத்தது கண்டு கைக்கொளா. (உ௯)

மறையோர் கொள்ளவ ழங்கி யேதரும்
இறையோன் முன்னுற வேத்த மன்னவன்
கறையார் மூக்குடைப் புட்க டாவுவோன்
நறைநே ருந்திரு நாமம் வாழ்த்தினன். (௯௫)

அந்நா டொட்டவ னாதி நாமமே
எந்நா ளுஞ்சொல லாக வின்னவர்
மன்னு வான்விடை கொண்டு வாழ்மனை
துன்னு வாழ்ந்தனர் சோர்வி லாதரோ (௯௬)

ஆகச்சரித்திரம் உரு க்கு செய்யுள் ௬௫௬

சேனாநாபிகர் திருவடிகளே சரணம்.

முற்றிற்று.

சாத்வீகராஜன்சரித்திரம்

வேறு.

ஜகநா தப்பொன் னகாதனை யாண்டு தனிவாழ்கோ
மகன்மால் பத்தி தனின்மிகு நேயம் வளர்கின்றோன்
புகழா நின்ற சாத்துவி கப்பேர் புனைவானான்.
முகனார் தாதை பூசனை நாளு முயல்கிற்பான். (௧)

திரிகா லத்துஞ் செய்துது ழாய்நீர் செங்கைக்கொள்
பரிவா னேரு மதிதிக ளுக்கும் பயில் பூசை
பெரிதே செய்து பின்புண லான பிரியத்தான்
விரிவா யன்ன சத்திர மாதி மிகவைத்தான். (௨)

சகலபி ராணி களினுமி குந்த தயையுள்ளான்
இகலினர் சீய மெனமிகு சீரி னியல்வானோர்
பகல்பொழு தேகக் கவறுரு ளாடல் பயில்போதிற்
புகழரி கோயிற் றிகழபிர சாதங் கொடுபோந்தார். (௩)

அர்ச்சக ரானோர் கவறுருள் செய்கை யதின்மூழ்கி
நச்சறு மன்னற் கப்பிர சாதந் தனைநல்கப்
பச்சையு கக்கப் பட்டதி தென்னும் பரிவின்றிப்
பிச்சரின் வாமக் கைதனை நீட்டப் பிசகென்றே. (௪)

அன்னவ ரீயா தேகினர் பின்பவ் வரசன்றான்
முன்னரி னுடன் முற்றிட நின்றார் முகநோக்கி
என்னிடை மேவு மின்பிர சாத மெங்கென்றான்
மன்னினர் வாமக் கைதனி லீயா மற்போனார். (௫)

என்றுமு னின்றார் கூறிட மன்ன னிதுவென்னே
அன்றுசெய் பாவ மின்றோரு சூதா யபசாரந்
துன்றிட வேசெய் ததுநனி நன்றே தொலைவுண்டோ
இன்றியல் கின்ற தென்றனன் மாளா விடருற்றான். (௬)

கள்ளேவி ரும்பிப் பாலைய கற்றுங் கலர்செய்கைக்
குள்ளுற லானே னென்றரி கோயிற் குளுமேகான்
கொள்ள கிலாவிக் கைபிர சாதங் கொளலாமோ
எள்ளல்செ யாதென் றெண்ணிய றுத்தற் கிசைவுற்றான். (௭)

மந்திரி தன்னை வருகென வந்தான் வதனம்பார்த்
திந்தவென் மாடச் சாளர வாய்வந் திரவோர்பேய்
முந்தொரு கைநீட் டுகிறதி னாலே முதிரச்சந்
தந்துறு கின்ற தக்கர மதைநீ தடியென்றான். (௮)

அன்னது செய்வே னென்றிர வூடவ் வகன்மாடந்
தன்னிடை வந்து சாளர வாயிற் சார்ந்துற்றான்
மன்னவ னங்ஙன் பின்புற முருமா றாய்வந்து
துன்னுறு கையை நீட்டினன் வாளிற் றுணிசெய்தான். (௯)

துணிசெய மன்னன் வீழ்ந்துது டித்துச் சோர்கிற்கப்
பணிபுரி கின்ற மந்திரி வெளியிற் பதறுற்றே
அணுகினன் வந்து நோக்கலு மன்ன னவனுகத்
தணிவறு துன்பங் கொண்டெதிர் நின்றே தளா வுற்றான். (௩)

சோர்வுறு மன்னன் றுயர்கொள மைச்சன் முகநோக்கி
நேர்வுறு மிக்கை சார்பிழை போக நீசெய்தாய்
ஆர்வுறு மென்னு லேயல வோநன் றாயிற்றுச்
சார்வுறு துன்ப நீயொழி கென்றான் றளாவின்றே. (௩௧)

விடியள வேகை சிவிகையின் மேவ மிசையேற்றி
நெடியவ னேசெய் பிழையது தீர நிறைதண்டம்
தடிவதை யன்றிப் புரிவது முண்டேற் றடையின்றிக்
கடிகென மால்வாழ் சினகர மேவக் கடிதுய்த்தான். (௩௨)

சொல்லிய வண்ணந் தூதர்கள் சொல்லத் தொழுகோயிற்
புல்லின ரங்கே பொலியடி யாகட் பொருவேந்தன்
மெல்லிய கையைக் காட்டினா சொன்ன விதமெல்லாஞ்
செல்வகை சொல்லத் தேறின ரீதோ செயலென்றே. (௩௩)

தழைவிப வத்தா னுடனசை விட்டுச் சகநாதன்
உழைமனம் வைததான் மிகவும்வி ரக்தியுளனென்று
குழையும ணத்தார் ஜயஜய வென்று கொணர்கைமேல்
விழைவுறு கந்த பொடிகளி றைத்தார் விரைநாற (௩௪)

பொடிபட லுங்கை தவனம தாகிப் பொலிவெய்த
அடியவர் கண்டு மிகவும்வி யந்தங் கதுதன்னை
நெடியவ னடியிற் படிவது செய்து நிகழ்நாண்முன்
படிபிர சாத முடனர சன்றன் பாலுய்த்தார் (௩௫)

வருபிர சாத மொடுதவ னத்தை மகிழ்விற்கண்
டரசனி ரண்டு கரமுமி ணங்க வவையேற்றான்
கரமும்வ ளர்ந்து குறைவற லாகக் கண்டோர்கள்
பரவினர் நாமம் ஜயஜய வென்று பணிவோடே (௩௬)

ஆகச்சரித்திரம் உசு க்கு செய்யுள் சூடு அடு

சாத்வீகராஜன் திருவடிகளே சரணம்

முற்றிற்று.

கருமாபாயி சரித்திரம்

வேறு.

நாடுஜக நாதமென நண்ணுநக ரத்தின்
ஊடுகரு மாபாயி யென்றொரு ருள்ளார்
நீடுதரு மம்பலவு நீதியொடு செய்யக்
கூடுமன முள்ளவர்கு ணந்திரிபி லாதார் (க)

கருவயினு நீஇமருவு காலமவர் கண்டன்
ஒருவியுயிர் போனபினு யிர்த்தனரொர் சேயை
அருமையின்வ ளர்த்துவளர் வானமக னுக்குத்
திருமணமி யற்றினர்நி கழ்ந்தணிசி றகக (உ)

அந்தமக னுயிழையை யன்பொடும ணந்து
தந்தனனொர் சேயதுத வழ்ந்துவளா நாளில
மைந்தனு மிறக்கமிக மாழ்கினா ளளர்ந்து
நொந்தனர்க வன்றரித னுமநல்ல கிற்பார். (ங)

நாரணத யாநிதியெ னந்தன்மக னெனுஞ்
சீருறிலெ னக்குதவு மென்றனர்சி றகப்
பேரன்மக னுகநினை பெற்றியின்வ ளர்த்தார்
ஆரமகன் மைந்தனும ணங்குறவி றந்தான். (ச)

அம்மகவி றக்கவவ லக்கடலின் மூழ்கித்
தம்மனநி லைப்பதில ராய்த்தளர்த லானார்
மைம்மலிநி றத்தமல ராள்கணவ நீயென்
இம்மலின வெந்துயரி லென்னைவிழ விட்டாய். (ஞ)

என்றுமிக நொந்தனரி ரங்கியுறு நாளில்
துன்றுஜக நாதவிறை தன்னடிதொ ழற்கு
நன்றரிந லோர்களவ ணண்ணியவர் நல்வீ
டொன்றினரு ணர்ந்தனரி டர்க்குளுறு வாரை (சு)

என்னையிங னீர்துயரி லெய்துகிற தென்ன
மன்னுதுயர் மூழ்குமவர் மற்றவரை நோக்கி
முன்னைநிகழ் வுற்றசெயல் யாவையுமொ ழிந்தார்
அன்னவர்தெ ரிந்துதுய ராறும்வகை சொல்வார். (எ)

அணுவளவு நன்மையிலை யானசமு சாரப்
புணர்வுநிலை யற்றதத னுட்புகுத லாகிப்
பிணியுறுவ தென்னமது கண்ணனடி பேணுந்
துணிவினிடர் தீர்திறொன வேயவர்து ணிந்தார். (அ)

ஸ்ரீதரன ருட்குரிய சீரினவ ரேநீர்
பேதையடி யேனொருநி லைக்கணுறு பெற்றி.
யாததையு நாத்தருள்க வென்றனரி ரந்தார்
மாதரவ ருக்கவரு மன்னுநிலை செய்வார். (கூ)

நாதனரி நாமமதை நன்கினுப தேசித்
தேதமகல் கண்ணனது விக்கிரக மீந்து
மாதகவ தாகமக வன்பிதனில் வைத்து
நீதமொடு பூசனைநி ரப்பநிய மிததா. (ஐ)

நன்றெனவு கந்துகொடு நல்குமவா தமமை
மன்றவுப சார்மொடு வந்தனைபு ரிந்து
ஒன்றுமவர் போனபின னோவுதவி லாமல்
அன்றுமுத லந்நியதி செய்கையில மாநதா. (ஐக)

பெற்றவொரு கண்ணனொடு பேசிவினை யாடி
மூற்றுதயி லந்தடவி மூழகுதல்செய் வித்துச்
சுற்றுடையி னீரமற வேநனிது வட்டி
நற்றுடைகி டத்தியுரை யெளடதமு நல்கி. (ஐஉ)

பாலமுத ருத்திவளர் தொட்டி லுறல் பண்ணி
மாலரிகு ணங்களைவ ருத்தினிதி னாட்டி க
கோலவிழி மூடுதுயில் கொணடபினெ டுத்துப
பாலரின்வ ளாததனர்செய் பாவனைத வாதே. (ஐங)

ஆடையணி சோக்கவளா வாகிவரு கண்ணன்
ஈடனமு ணற்கிசைவ தெய்துபரு வந்தான்
கூடினதெ ஞவயிறு கொள்குழைவு கண்டு
நாடியுது கண்ணனையு ணற்குநவில கிற்றா. (ஐச)

உண்கவினி துணகவென யாவு வினி துணட
பண்பினனை நன்குபச ரிகுமது பாரகுக
கண்கள்களி கூரவுள மானதுக னிந்து
நண்பினமு துண்டுமெகிழ் செய்தனன யாதே. (ஐரு)

அன்னையனை யாருபச ரிக்குமத னாலே
இன்னவித நாடொறுமி யைந்தமுது செய்தான்
மன்னுகரு ணாநிதிவ ளர்ந்துவரு நாளில்
துன்னினன வில்லிலொரு சுத்தமறை யோனே. (ஐசு)

முந்துபெறு தேவகிவ ளர்க்கமுய லாமல்
நந்தன்மனை விட்டகுறை நன்குநிறை வேற
இந்தவகை யெய்தியதி யின்பினமர் வாரை
வந்தமறை யோனறிக லானவண்வ திந்தான். (ஐஎ)

அத்தினம்வி டிந்தவுட னன்னையென லானார்
நித்தனையெ ழச்செய்துநெ டும்பசித ணிப்பான்
உய்த்தவமு தைக்கடிதி னுண்கவீனி துண்க
முத்தமனை யாயெனமொ ழிந்துறுதல் கேட்டான். (ஐஅ)

யாரையவ ணுண்கெனவ றைந்துறுதி யென்னக்
காரைநிகர் கண்ணனையெ னக்கழறல் கேட்டு
நீரையிலு விப்பதுந னீர்முழுக லாதோ
சீனாயிலி ராயஃது செய்வதுத காதே. (ஐகூ)

என்றவனு ளாத்தபடி யேபுரிவ னென்று
துன்றுமறு நாள்விடியு முன்றுயிலு ணர்ந்து
நன்றுபுன லோய்ந்துபுது நன்புனல்கொ ணர்ந்தே
அன்றகமெ லாமெழுகி னாரடுத லானார். (உ௰)

தினமுநுகர் காலமது சேர்ந்துணுத லாக
மனதுசகி யாதுஜக நாதமழை வண்ணன்
சினகரமி ருந்துபணி செய்துறும வன்றன்
கனவினிலி ராவிடைக ளுக்துரைசெய் கின்றான் (உ௧)

நானமுது செய்துவரு காலநனி நண்ணக்
தானடுதல் செய்வகைச மைத்தனனெ ருத்தன்
ஆனதனை முன்படிய மைத்திருமா பாய்
பான்முடுகி நீயினிதி னென்றுரைப [illegible] ந்தான். (உ௨)

அன்னதனை யர்ச்சகனு ணர்ந்துவி [illegible] யாமுன்
மன்னினன சோதையின்வ ளாத்துவரு வார்பா [illegible]
பன்னுருக மாதிதனி றைந்தபர மான்மஞ்
துன்னுகரு ணாநிதிய ருத்தும்வகை சொல்வான் (உ௩)

சீலநனி கொண்டடிசில் செய்கிரத னாலே
காலமிக நீடியது கண்ணனமு தாண்ணக்
சாலமிகு கின்றபசி கொண்டுதளர் கின்றான்
ஞாலமுத னானதை யென்வயின வின்றான். (உ௪)

வெளியின்மிகு சீலமுற வேண்டலப்ப னில்லுற்
களிகொடுள மானதுக னிந்துபரி சுத்தம்
கொளினதுமி கப்பெரிது கொண்டனிகர் வண்ணன்
அளிமிகமு னீர்செய்வத வாவியுள னென்றான். (உ௫)

என்பதைவி னவினரி சைத்தபடி செய்ய
அன்பினரொ லாமறிய வையனினி துண்டான்
நன்புதுமை யென்றுதுதி நன்குசெய லானார்
இன்பினது கண்டவரொ லோர்களும்வி யந்தே. (உ௬)

தூயமக மோமமொடு சோர்வருநல் யோகம்
ஆயபல செய்துமடை யாதபர னுக்குத்
தாயெனவ ளர்த்துமகிழ் தங்கியவொர் கர்மா
பாயிதவ மேபெரிய தென்றிசைப கர்ந்தார். (உ௭)

கண்ணனைவ ளர்த்தவர் காண்மிசைவி ழுந்தார்
எண்ணரிய தோத்திரமி யம்பினர வாறே
பண்ணியமை கிச்சடிப ரற்கினிய தாகி
கண்ணியது நாளுநலம் விஞ்சுஜக நாதம். (உ௮)

ஆக சரித்திரம் உ௱௨ க்கு செய்யுள் ௪௬௱௫

கருமாபாயி இருவடிகளே சரணம்.

முற்றிற்று.

ஜயவந்தபக்தர் சரித்திரம்

ராமவுபா சகராகிச் சயவந்த ரெனுநாம நண்ணி நாளும்
காமனையீன் றவனடியார் களைபூசை புரிவாராய்க் கருதுதாரி
யாம்வணிகர் புத்திரரோ னாவருள ராகலக்ஷா திபதி யானோர்
தோமறுசம் பத்துடனே ஹரிபஜனை செய்துகொண்டு துலங்க வாழ்வார் (க)

வருநாது ஜனங்களுக்கு மதிதிகட்குஞ் சுயம்பாகம் வழாம னல்கிப
பெருகாத ரத்தினரைப் புத்திரர்கள் பக்குவராய்ப் பேணுராகி
மருவாத துஷ்டதரா சாரதுன்மார்க் கத்தின்மிக மலிவா ரேதும்
கருதாது பிரமகுலத் துற்பவித்த ராவணனைக் கடுப்ப தானுர். (உ)

தகுதைதரு மச்செயலுக் கொவ்வாராய் விருத்தனுக்குத் தகாத பித்தம்
முங்கியதால் வாணிபத்துக் குளபொருள்க ளெலாஞ்செலவின் முற்று விக்கச்
சிந்தைகொண்டா னிதற்கென்ன செய்துமென வுளபொருளிற சிலம றைத்து
மைந்தரொன்போ ரேதந்தை தனைவருத்த வேந்தனிடம் வந்து சொல்வார். (ங)

எங்கள்பிதா வெமக்குள்ள பொருள்களெல்லாம் வீண்செலவே யியற்று கின்ருன்
அங்கனுல கத்தாரசே பொருள்செலவுண் டே லுமக்கு மமையத் துக்காம்
தங்கும்வகை விருத்தனைக்கூய்த் தண்டிக்கத் தக்கதெனச் சாற்றக் கேட்டுப்
பொங்குபுகழ்ச் சயவந்தர் தமைக்கூவி விசாரிக்கப் புகல்வ தானுர். (ச)

புத்திரர்க்கு வைக்காமல் வீண்செலவேன் புரிகின்ருர் யெனபபு கன்றீர்
அத்திரமே பொருள்புதல்வ ரனைத்துநிலை யாவதுதா னறமே யன்றே [ன்று
முத்தணிவெண் குடைவேந்தே யெனலுமிவன் பயித்தியத்தின் முதிர்ந்தா னெ
மெத்தவருத்து கிறதிலுங் கொலைசெய்த னலனென்று வெருண்டு வேந்தன். (ரு)

உங்கள்பிதாத் தனைக்கொல்வ துங்களுக்குச் சம்மதமோ வுரைத்தி ரென்ன
எங்களுக்குப் பிதாவல்ல னிவன்பகைஞ் ஞானதஞற் பொறியி னுள்ளே
தங்கவமைத் துக்கட்டி யாழியநீர் தனிலிடல்வேண் டி யதே யென்ன
வெங்கடுங்கோ லுடைவேந்தன் ஜயவந்தர் தமைக்கட்டி வீழ்த்தற் கெண்ணி. (சு)

கற்களொடு கனமாகப் பொதிந்தாழ நீரினிடைக் கவிழ்க்கச் செய்தான்
தற்சடி மை யானவர்நி ரிடைமூழ்கு முன்வந்து சௌரி தானோர்
வற்கடின முதுகாமை வடிவாகித் தம்முதுகின் மலையிற் ருங்கி
நிற்கவய மேன்மிதக்கும் ஜயவந்த ரியல்கண்டா னிருபன் மன்னே. (எ)

அகிலவியாபகனை வநாதரக்ஷ கன்கருணை யமைந்தி ருக்க
இகலியிவர் தமைக்கொல்ல வெண்ணியது தகாதசெய்கை யெனப்பயந்து
மிகவிரைந்தங் கவர்தம்மைக் கரையேற்றிக் கட்டவிழ்த்து விடுத்தன் ஞர்ககுத்
தகவுமிகவுபசரித்துத் தாள்பணியத் தனையர்களுஞ் சரணந் தாழ்ந்தார். (அ)

அரசனொடு மைந்தர்களும் யாஞ்செய்பிழை பொறுத்தருள்க வடிக ளென்று
பரசுதலும் ஜயவந்தர் மைந்தருக்கு மரசனுக்கும் பரிந்து வாழ்த்த
விரசரசன் ஜயவந்தர்க் கடியவனு யன்றுமுதல் வேண்டி வாழ்ந்தான்
சரசமுடன் றனையர்களும் பிதாச்சேவை செய்துமுறை தவாது வாழ்ந்தார். (கூ)

ஆகச்சரித்திரம் உஅக்கு செய்யுள் ரூசுஉஉ

ஜயவந்தர் திருவடிகளே சரணம்.

முற்றிற்று.

சுரதாசர் சரித்திரம்

அத்தின புரியை யாளு மகபர வரசன் றன்னை
எத்தினங் களும்வி டாம லியன்றவன் றயையி னாலே
மைத்தபூம் பொழில்கள் சூழ்ந்த மதுரைமா நகரத்திற்கு
மெய்த்தவோர் தலைவ ராக விளங்கினர் சுரதா சென்போர். (க)

மதுரைகோ குலம்பி ருந்தா வனமெலாம் புனித மான
புதுமைசேர் தலங்க ளாகப பொருந்தலா லவண்வந் துற்ற
சதுரசச் சனங்க ளுக்குத் தகவுப சரித்து நாளும்
முதுரச போஜ னங்கண் முதலிய வழங்கி வந்தார். (உ)

நலமிகு வழியி லுள்ள பொருளெலா நல்கி நல்கிச்
செலவுமிக் காக மற்றுஞ் செலவுசெய் வதற்குத் தம்பாற்
பொலனிலை யாக நல்லோர் பொருந்திடிற் றருவ தற்கு
வலமிலை யேயென் றுன்னி மனத்திடை யழுங்கி நைந்தார். (ங)

நம்மையே நாடிச் சாரு நல்லவர் தமக்கீ யாமல்
இம்மையில் வாழ்க்கை யுற்று லெண்பய னினியெங் கோவின்
செம்மைசேர் பொருள்க ளீவோஞ் செலவுகண் டரசன் சிறி
வெம்மைசெய் திடினு நல்லோர் விஷயத்தின் மேவ னன்றே. (ச)

என்றுதம் வசத்தி லுற்ற விறைபொரு ளெல்லாம் தம்பாற்
றுன்றுசா துக்க ளுக்குத் துயரற வுபச ரித்தும்
நன்றறச் சாலை கட்கு நல்கியுங் கட்டு வித்தும்
மன்றல்செய் துளவி னானை மதனமோ கனனென் றாக (ரு)

தாமுறு மதுரை தன்னிற் றயங்குறப் பிரதிட் டித்தா
ஆமத னாலே யெண்ப திலக்கமு மயுத முஞ்சேர்
ஏமநல் வீராக னான செலவினை யெதிர்ந்தோர் தேர்ந்து
தோமிலத் தினபு ரிக்குத் தோன்றல்பால் வந்து சொல்வார் (சு)

வேந்தநின் பொருள்க ளெல்லாம் வீண்செல வாகச் செய்தான்
போந்துள சுரதா சென்போ னென்றவர் புகலக் கேட்டுச்
சாந்தனு மரசன் கோபங் தான்மிக லாகித் தன்பால்
வாய்ந்தசே வகரை நோக்கி மதுரைநீர் விரைந்து சென்று (எ)

அங்குள பொக்கி ஷத்தி லமைந்துள பொருள்க ளோடு
தங்குறு சுரதா சென்போன் றன்னையுங் கொணர்க வென்று
பொங்குகைத் தீட்டு நல்கப் போந்தவர் மதுரை சென்று
சங்குசக் கரத்தா னன்பர் தம்மவை வந்து சார்ந்தார் (அ)

நிருபன்கைத் தீட்டு நல்கி நிகழ்ந்தவை யாவுஞ்சொல்ல
மருவிய சுரதா சென்போர் வாசித்துத் தெரிந்து கொண்டு
வெருவுறு தரச னென்மேல் வீண்சினங் கொண்டான் யானோ
தருபொருட் கமைய மாணிக் கங்களாய்ச் சமைவு செய்தேன். (கூ)

அம்மணி களைக்கோன் கன்டா லன்பென்மேன் மிகவுஞ் செய்வான்
இம்மணி மண்டபத்தி லிருத்திரொன் றுரைத்தல் செய்து
தம்மணி மனைக்குட் சென்று தக்கபே ழையினி ரம்பசு
செம்மணி யெனநி னைக்கப் பரற்களைச் செறிவு செய்து. (௭)

மன்னநின் பொருள்க ளெல்லா மருவுநல் லோக ளுககும்
துன்னறச் சாலைகட்குந் தொகுத்தொரு கோயி லுக்கும
நின்னது புகழ்வி ளங்க நிரப்பிநின் றேனே யன்றி
மின்னணு வேனு மிங்ஙன் வீண்செல வியற்ற கில்லேன். (௧)

எனவுரைந் துன்பா லேம மெய்தில வெனவென் மேனீ
சினமிகு வாயென் றியானித் தினத்திரா விடையெங் கேனும்.
வனமதின் மறைவே னென்றும் வளாந்துபே ழைக்குள் வைத்துக்
கனமிகு பேழை தன்னைக் கடுகிவந் தவர்பா லீந்தார். (௨)

இன்னதை யானே கொண்டங் கெய்துற விருகரும் போதில்
நன்னர்நீ ரடைந்த தேநன் றாகிய தெனாந வினறே
அன்னவர் தமக்குப் பொன்பூ ணுடைகள் சிறப்ப நல்கித்
துன்னவ ருடன்று யின்று நடுநிசி வனந்தொ டர்ந்தார். (௩)

வனம்புகுந் தரித ஞமம் வழுத்தின ரிருக்க விங்கே
தினஞ்செயும் பரிதி தோன்றச் சேவக ரெழுந்து பார்த்து
மனந்தெளி சுரதா சென்போர் மனையிலு மிருக்கக் காணார்
சினந்ததம் மரசற் கேது செப்புது மெனபப யந்தார். (௪)

அந்தவூ ரடுத்த வூர்மற் றாகிய விடங்க ளெல்லாம்
முந்தினர் தேடிக் காணார் முனிவனென் றரசற் கஞ்சி
எந்தவூ ருற்ற னேவென் றெண்ணியப் பேழை தன்னைத்
தந்தலை சுமந்து வந்து சார்ந்தன ரரசன் றன்பால். (௫)

உற்றதை யுரைத்துப்பெட்டி தனையொரு வேந்தன் காண
மற்றவ னிடத்து வைத்தார் மன்னவன் பீர்ப லென்று
சொற்றரு மமைச்சற் கோதிச் சுரதாசர் பெட்டி தன்னை
நற்றியே திறந்து கற்க ணனிநிரம் புறுதல் கண்டான். (௬)

பின்னரோர் கடிதா மந்தப் பேழையி லிருக்கக் கண்டு
மன்னிய வொருவ னாலே வாசிக்கத் தெரிந்து மன்னன்
முன்னர்கோ ளுரைத்தோன் றன்னை முனிவுட னேக்கி நீமுன்
சொன்னதோர் சுரதா சென்போன் வீண்செல வேது சூழ்ந்தான் (௭)

நல்வழி களிலென் னேம நனிசெல வழித்த தன்றி
அல்வழி செய்தா னென்றிங் கறைந்தனை பிழைய தாக
ஒல்வகை யெழுதி வைத்துப் பயந்தன னெளித்து ரூமல்
செல்வகை செய்தா யன்றோ நீயென மிகச் சினந்து (௮)

வயிணவ துரோகி யென்று மற்றவன் றனைக்கண் டித்து
வியனுறுங் கடிதந் தன்னை வாங்கியே விரைந்து பார்த்துச்
செயிரறு சுரதா சென்போன் றீட்டின தேயென் றோர்ந்து
நயனநீர் பெருக லாகி நல்லமந் திரியைநோக்கி. (௯)

திரிபுவ னங்க ளெல்லாந் தேடினுஞ் சுரதா சைப்போல்
ஒருவனைக் காண லாமோ வுயர்ந்த வென் மதத்தி னாலே
வெருவுறக் கோபித் தேனே யெனமிக வருந்தி வேந்தன்
இருவிழி குளிரப் பார்க்க வெங்கிருந் தாலுந் தேடி. (உ௫)

சொணர்கென வுரைக்கக் கேட்டுக் குறைவில்சீ ரமைச்ச னுனேன்
புணரிசூ ழுலக மெங்கும் போய்விராய்த் தேடிக் காணும்
வணமிகு தூதர் தம்மை வல்லிரைந் தனுப்ப மற்றோர்
துணர்விரி நிழற்பைங் கானிற் றுருவினர் வந்து கண்டார். (உ௪)

ஹரிபஜ னத்தோ டுற்ற வவர்தமைக் கண்டு நீர்முன்
புரிவுறுஞ் செயலுக் கன்பு புரிந்துமைக் காண வேண்டிப
பரிவுட னெமைவி டுத்தான் பார்த்திப னென்று கூறத்
தெரிதரு சுரதா சென்போர் தேறினர் நினைய லுற்றார். (உ௨)

எங்கணு நிறைவா யுற்ற வெம்பிரான் செயலி தென்று
சங்கையின் மனத்த ராகிச் சார்ந்தனர் தூதரோடு
துங்கவத் தினபு ரிக்குத் தோன்றலை வந்து கண்டு
செங்கையிற் சலாஞ்செய் வாரைத் தேடிய வேந்தன் கண்டான். (உ௩)

ஆசனத் திழிந்து முன்வந் தவர்தமை யழுந்தப் புல்லி
நேசமிக் குவகை தூங்க நுமக்குநே ரொருவ ருண்டோ
மாசறு வழியிற் பொன்னை வழங்கிமற் றெனக்கு நல்ல
தேசுறப் புரிந்தி ரிந்தச் செய்கைக்கோர் செய்கை காணேன் (உ௪)

உமதுசீ ரறிகி லாவோ ருன்மத்தன் சொல்லைக் கேட்டு
நுமதகம் வருந்தச் செய்தே னேக்கியென் பிழையைப் போக்கித்
தமதுளப் படியே செய்க மதுரையிற் சார்ந்து செம்பொன்
நமதெனத் தருமோ பூமின் னுதனுக் கினிய தென்றான். (உ௫)

என்பது சுரதா சென்போர் கேட்டுளத் திசைவி லாராய்
மன்பிர தாபங்கொண்ட மன்னனே யுலக வாழ்க்கை
துன்பென விடுத்த வென்னை யின்னமுந் துயரத் தாழ
வன்பர சியலுக் கேற்க நடக்கவும் வகுக்க லாமோ (உ௬)

எனுஞ்சுர தாசர் தம்மை யரசனு மினிதி னேக்கி
மனஞ்சலித் துலக வாழ்க்கை விடுத்துளீ ரெனுநும் மாண்பின்
கனந்தனை யறிந்தே னேனு நுமைவிடக் கருத தில்லேன்
முனஞ்செயும் படிநீர் செய்ய முயன்றுளேன் மொழியக் கேண்மின் (உ௭)

நீதியி னீரங் கீட்டு நிதியும துளத்துக் கேற்ற
சாதுசச் சனங்க ளுக்குந் தருமங்க டமக்கு மீயப்
போதுறு தாயி லென்பா லுள்ளன பொருளுங் கொண்டு
ஸ்ரீதரற் கடிமை யாக வென்னையுஞ் செய்தி லென்றான் (உ௮)

ஆயது கேட்ட தாச ரரசன துளமுந் தம்பால்
நேயமு மினிய சொல்லு நிரப்பலாற் றமதுள் ளத்தை
தூணிடைவரு வோய்நீ தோற்றிலை யெனிலுண்ணேம். (உ௭)

என்றிவ ரினிதோத வெதிரரு ளொடுதோன்றி
நின்றிரு கையாலந் நிமலரை நெடுமார்பந்
துன்றுற லதுசெய்து துளவணி நெடுமார்பன்
நன்றுன துளமென்னை நவிலுதி யெனநாமர். (உ௮)

சுமதித னொருமைந்தன் றூங்குதலதையோவி
எமதுடன் மிசைகிற்க வினிதரு ளுதியென்று
கமலநன்மலர் போலுங் கழல்பணி வுறுபோதில்
அமலனதருளா லங்கயர் வுறுமொரு பாலன். (உ௯)

சுரு

தெளிவுறல் கொடுதாயைச் சீக்கிர முணநன்னீர்
அளியென வுரைசெய்யவக் குரலனை கேட்டுக்
களிமகிழ் வொடுசென்று கான்முளை யினைத்தூக்கிக்
குளிர்வுறமுக முத்தங்கொடுநிற ணனிசேர்த்தி. (௩௮)

தழுவின ரரிதாசர் சந்நிதி கொடுவந்து
வழுவறு மொருநாமர் மலரடி மிசைவீழ்த்திற்
தொழுதவரடிபற்றித் துணைவிழி வருநீரால்
கழுவியெமுழை மேவிக்காத்தருள் புரிந்திடோ (௩௯)

உம்மது பெருமைக் கோரொப்பிலை யெனவோத
அம்மனை யுறுதாசரனை வருநீன்ற
இம்மகனுக் கென்னேயெய்திய தெனவன்னார்
தம்முன ருறலான தன்மையை யுரைசெய்தார் (௪௨)

அற்புதமிது வென்னுஹரியடி யவரொல்லாஞ்
சிற்பரன ருணும தேவர்தமுக நோக்கி
மற்பொருதிரு மார்பனே யொருவடிவாகி
பொற்புறலானு னென்றவர் ணனிபுகழ் வுற்றார் (௪௩)

புகழ்வொடு மகிழ்வுற்றப புதல்வனொடவ ரெல்லாம்
மிகுசுவை யமுதுண்டார் வெள்ளிலை பாகோடு
தகுநறு மலர்சாநது தரவடை வொடுபெற்று
மகனொடு தாய்தந்தை வாழ்வுறு மொழிதந்தார் (௪௪)

மூவரும் வருநாமர் மொழியுப தேசம்பெற்
றேவருமகிழ் கொள்ளவில்லறம் வழுவாமல்
ஆவயினரி நாமமனுதின ணனியோதி
மேவுற வவரொல்லாம் விடைகொடு புகலானார் (௪௫)

கமலாகரர் திருவடிகளே சரணம்

ஆகச்சரித்திரம் எஅ க்கு யெய்யுள் நிதூளஎ௬

முற்றிற்று

துக்காராம் சுவாமிகள் சரித்திரம்.

தேகுவென்னுந் திருப்புரி யிற்குடி
ஆகுவோர்நன்ம ராடரி லானமெய்
வாகுசேரநற் செய்கைகள் வாய்த்தவர்
போகுசாதுக்கள் சேவை புரிபவா (க)

இடைவிடாதிர வும்பக லுந்திரு
வுடையமார்ப னுளத்துற வெண்ணுறு
நடையர்பேர்விசு வம்பரர் நாடொறும்
மிடைசுடர்ப்படும் வேலைவந் தெய்தவே. (உ)

தாளம்வீணைமத் தாளமுங் கொண்டரி
ஆளமூசுறு மன்ப ரனேகர்முன்
நீளநீளரி கீர்த்தி நிகழ்த்தொரு
நாளணைந்தனை நன்மகற் கோதுவாள். (ங)

ஈண்டுநுங்குலத் தெய்திய முன்னவா
பாண்டுரங்கன் பழம்பதி செல்லுவார்
ஆண்டுதோறு மவ்வாறுநீ செல்வதை
வேண்டுகென்ன விரும்பி யெழுந்தனர். (ச)

தாய்பதங்க டொழுது தனித்தரி
மேயபண்டரி யாத்திரை மேவுறத்
தூயதான பஜனை சொலிக்கொடுங்
காயவன்பினர் தம்மொ டடைந்தனர். (ரு)

துண்டமாமதி தோயம படிந்துடன்
புண்டலீகனைக் கண்டடி பூசிதனுப்
பண்டரிப்பிர தக்ஷணம் பணணிநீள்
விண்டுகோயி லிடைவந்து மேயினர். (சு)

வினைதைமந்தனை யஞ்சனை மீளியை
நனர்வணங்கியங் குள்ளந லோர்சொலும்
புனிதகீர்த்தனங் கேட்டுத்தம் புந்தியில்
இனிதினனந்த மெய்தியுள் ளெய்தினர். (எ)

இன்பவாரியை யெண்ணு ளுணர்ந்தமெய்
அன்பர்ஜீவ வமுதை விமலனை
முன்புகண்டு முதிர்பர மானந்தம்
மன்பெருங்கடன் மூழ்கி வணங்கினர். (அ)

எண்ணிரண்டுப சாரமியல்வுறப்
பண்ணியாலிங்க னஞ்செய்து பற்பல
வண்ணமாக வழுத்தி வணங்கினர்
நண்ணினாரைந்து நாள்வரை நன்கரோ. (கூ)

நாமகீர்த்தனங் கேட்டங்கு நண்ணினோர்
காமன்றாதை கழல்கள் வணங்கினர்
பூமகட்கொழு நன்விடை பெற்றுப்போய்
தாமகத்துறு தாயை வணங்கினர். (௩)

பண்டரிப்பெரும் பான்மை யெலாஞ்சொலிக்
கண்டமூர்த்தி கழற்க ணெனதுளம்
மண்டுகின்றசெப் போதினி வாய்ப்பதென்
றண்டுகண்கணீர் வாரநின் றாரரோ. (௪)

தாயுந்தன்மகன் றங்குலத் தோர்செய்கை
மேயினனென வேண்டி மகிழ்ந்தனள்
ஆயபின்பொர் தினம்விசு வம்பரர்
போயினர்முன்பு போற்பணட நீபுரம் (௨)

சென்றுசந்திர பாகையின் தீர்த்தத்தில்
நன்றுமூழ்கி நலங்கிள ரத்தனி
நின்றுவிட்டல மூர்த்தியை நேமமாய்
ஒன்றச்சேவித்தொ ருங்கு துதித்தனர். (௩)

தசமியோர்பொழு தாயுறச் சாப்பிட்டங்
கிசையெகாதசி யில்லுண வின்றியே
நிசியொர்நான்கு நிரம்பிய ஜாமமுங்
கசியுமன்பிற்கண் ணன்புகழ் கேட்டனர். (௪)

சேர்துவாதசிப் பாரணை செய்தங்கு
சார்தலாயினர் முத்தினந் தாழ்த்துபபின்
கார்நிறந்திகழ் கண்ணனடி யிணை
ஆர்வமோகெண் டன்பின் வணங்கினர். (௫)

விடைபெறும்பொழு தில்விழி நீருகக்
கடையனேனுனைக் காண்பதெந்நாளென
அடையுநீர்வில கற்கரு மீனென
நடைகலங்கின னென்று நவின்றனர். (௬)

என்றபோ தெதிரிற் பிரசன்னமாய்க்
குன்றமேந்திய கோவலன் றோன்றிமுன்
நன்றுநின்னன்பு நன்றென மெச்சிநான்
ஒன்றுவேனெங்கு மாதலி னோதக்கேள் (௭)

நீயுன்னூரிருந் தென்னைநி னைப்பினும்
ஏய்வனின்வயி னன்பிக வேனெனச்
சாய்விலன்பர் சகுண வடிவையான்
நேயமோடென்றுங் காண நினைக்கின்றேன். (௮)

அன்றிவேறொன்று மாதரிக் கின்றிலேன்
என்றுமற்றிதற் கென்செய்வென் யானென
நின்றகண்ணன்புன் மூர னிலவுற
ஒன்றமார்பி லணைத்தவ ருச்சிமேல். (௯)

சனதுசெங்கம லக்கரஞ் சார்த்தித்தன்
புனிதநாமஞ் செவியிற் புகன்றனன்
இனிது நீ யெங்கிருந் தென்னை யெண்ணினும்
நினது கண்ணெதிர் நேர்வெனஞ் சேலென. (உ௨)

ஊர்க்குப் போக விடைகொடுத் துய்த்தனன்
பேர்க் கொணவன்பு கொணடு பெயர்ந்தவர்
சேர்க்குங் கார்த்திகை கொட்டெட்டுத் திங்களும்
பார்க்க வந்த னர் பண்டரி மாயனை. (உ௩)

எட்டி ரண் டென்றிய ம்பு மெகாதசி
வட்டி லாரா பணடரீ புரமே விஞர்
முட்டி லொன்பது திங்களின் முந்திய
அட்டமித்திதியில் விசுவம்பரர். (உ௪)

இரவிலே துயிலங் கனவெய்னென்
அரவிலாம யருளிய யக்சைமால்
உரவினீ யெட்டுத் திங்களென்னூர் வந்து
பரவி யென்னைக் கடனுறப் பணணினாய். (உ௫)

அதலானியமரு முன்னூர் வயிற்
போதலாயின னென்று புகன்றொரு
சூதனீள் பொ நிற்றுன்னிய மாந்துறக்
காதல் கூரவபர் கணவிழித் தாரபோ. (உ௬)

விழித்தவ் வூரில்விளங்கும் வயினவா
செழிபபுறத் தெரியச் சொல்லிச சென்று நாம்
பழுத்தமாம் பொழில்வைகும் பரமனை
வழுத்தித்வ் வூரில்வரச்செய்து மென்னவே. (உ௭)

சொல்லியாரொடுஞ் சூதபபைம்பூம் பொழில்
புல்லி நாடினர் கணடி லர் பூவுறை
வல்லிநாதனை வாய்ந்தவ ரீபபொடு
மெல்லி சுழ்த்துளவம் விரை வீசவே. (உ௮)

தெரிந்து சென்றங்கு நோக்கத் திருத்துழாய்
விரிந்தவாசப பொடியொடு மேவுறப்
பரிந்து கணடுகலைப பழுதின்றெனப்
புரிந்தெல்லோரும் வியந்தனர் போற்றினர். (உ௯)

அயபோதறைவார் விசுவம்பார்
மாயன்றன்னை யிம்மண்ண கழுந்தாயினும்
ஏயக்காணுது மென்று மளவிலா
காய மற்றி வரன்பைக் கருதியே. (உ௰)

வேறு.

விசுவம்பரரோ தனிவிட்டலனும்
கசிவன்பது கண்டி வண வந்தது மெய்
நிசியொன்று நிறத்தனி மாடுளனீர்
அசியின்றி யகழ்ந்து கொளத்தகுமால். (உ௰௧)

இனிதும் வழிதன்னிடை யெய்துவனோர்
புனிதன்றிகழ் வைணவர் பூடணன்மே
தினியங்கவ னிற்பெரு கித்திகழும்
நனிநன் கரிபத்தியெனு நவில. (கூ)

வினவுற்றவர் யாரும் வியந்துகரம்
புனைவுற்றனர் கொட்டினர் பூமகன்கோன்
அனகத்திரு நாமமறிந்த வயிற்
றுனலுற்றனர் கைகொடு தோண்டினரோ. (கூக)

தோண்டத் துளவும் பொடியுந் துனலாய்
நீண்டத்தலை நேரிலு ருக்குமணி
வேண்டத்தகுவோன வளோடு விராய்க்
காண்டற் கினிதாயுறல் கண்டனரோ. (கூஉ

கண்டார் ஜயஜயவென நன்குகளி
கொண்டார் விசுவம்பரர் கொண்டனர்கை
வண்டார் துளவோனை மனைட்டியுடன்
கண்டார் வமுடன் கொடமா நகர்வாய். (கூகூ)

சிந்தாமணி போற்றரிசிக்க வெலாம்
தந்தார்தர வேவரு தண்ணெனு நீர்
இந்தாயணி யெனனு நதிக்கரையில்
வந்தாவ யின்மன்ன நிறீஇ யினரே. (கூச)

வேதோத்தமர் தம்மின் விதிப்படியே
மாதூத்தமி யோடமர் மாதவனைச்
சீதோத்தம மஞ்சன நீர்சிரமீ
தேதோத்திரமோ டினிதாட்டினரோ. (கூரு)

எல்லாவணி யுந்திகழ் வித்தெழில் சேர்
நல்லாடையு நன்கொளிரப் புனைவித்
துல்லாச மிணங்குப சாரமெலாம்
வல்லார் சொலும வண்ண மியற்றினரே. (கூசு)

ஒருநாளிரவிற் பெரிதும் பர்தொழும்
திருநாயகன் முன்பெதிர் நின்று திகழ்ந்
தருணாயக வந்தணர் நாயகசோ
கருநாயிறுபோலொளிர் கண்ணவெனு (கூஎ)

துதிசெய்து தரும்பளவும் பொருவா
மதியில்லெளியேன் முனம் வந்தனை நின்
பொதியின்னருள்யான் புகழ்தற்கெளிதோ
விதியின்றிறமென்று வியந்தனரே. (கூஅ)

அவசங்கொடு நிற்கவருட் குரியார்
கவுசம்பொரு கண்ணன் மகிழ்ந்துமுகம்
நவசந்திரனென்ன விளங்கநணித்
திவசந்தனில் வேண்வே செப்புகென. (கூகூ)

நாதாவுனதன் பிடை நானழுவா
மேதாவியெனும் படிவேண்டுவனென்
சாதாரணமாய் வருசந்ததியும்
ஆதாரநினம்புய மெல்லடியே. (௪௫)

பற்றிச் செலுமன்புபழுத்திளகப்
பெற்றுப் பெருகும் படிபே ரருள்செய்
கெற்றைக் குமெனு முனியம் பினர்மால்
நற்றப்படியே வரநல் கினனே. (௪௬)

அருள்கொண் டவரா யனையிவ் விடைநீ
இருள்வின் டிடவென்று மிருக் கவெனத்
தெருள்கொண் டுபணிந் தனர்சென் றனரில்
மருள்வின் டுறநாள் சிலமாய்ந் தனவே. (௪௭)

வேறு

ஆயநா ளளவில் வைகுண் டத்தினின் றணிவிமானந்
தூயது கொண்டுவிண்டு தூதர்க ளெதிரிற் றோன்றி
நாயகனன்பின்மிக்கீர் நணுகும்வைகுண்டமென்ன
ஏயது கேட்டவன்பர் பண்டரிக் கிறையைநோக்கி. (௪௮)

எனக்கிரு குழவி யோடில் லவளுமுண் டிவர்கண் மேனின்
மனக்கனி விருத்தல்வேண்டும் வைகுண்ட நான்செல்கின்றேன்
புனத்துழாய் முகிலேயென்று போற்றின ரேறிப்போனார்
கனக்களே பரத்தைவிட்டுக் கடன்முறை கழித்தபின்பு. (௪௯)

ஹரியென்று முகுந்தனென்று மமைசிறு ரோடுபண்பு
தெரியமா பாயியென்னுந் தேவியார் திருமாளுமம்
பெரிதினி தியம்பல்செய்து குடும்பமும் பேணியெங்கும்
விரிபிரா ணிகளிலொத்த விருப்பின ராகிவாழ்நாள். (௫௦)

அன்னவ ரன்புக்காக வாண்டருள் பாண்டு ரங்கன்
றன்னருள் பெருகிச்சார்ந்து கனவினுந் தமக்குவேண்ட
லென்னது புகலுகென்ன வெம்பிரா னேழையேனுன்
பொன்னடி யன்றி வேண்டேன் பிறிதெனப் பூமிகேள்வன். (௫௧)

மகிழ்ந்தவர் தமைத்தழீஇப் போய்மறைந்த பின்கனவுதேர்ந்து
மிகுந்தவா னந்தங்கொண்டு மேவரி பஜனைசெய்து
திகழ்ந்தன ரிருக்கத்தந்த சேய்களா லோசித்துத்தாய்
அகந்தனி லடைந்துதாயே யகத்துள துமக்கிருக்க. (௫௨)

நாங்கள்சென் றரசன்றன்னை நயந்துசே வகங்கள்செய்ய
ஓங்கிய விச்சைகொண்டோ முதவுக விடையென்றோதிப்
பூங்கழல் வணங்கவன்னை பொருந்திலர் பற்பலாறு
தீங்கறத் தடுத்துங்கேளாத் திறத்தினுத் தரவுசெய்தார். (௫௩)

இருவருஞ் சென்றுவேந்த னிடத்தனி கங்கட்கேற்ற
பொருநராய்ப் பொலிவு பெற்றுப் போதுக தாயையென்றார்
அருளனை பாண்டுரங்கன் றனையெவ்வா றகல்வதென்று
கருதினர் கண்ணீர் மல்கக்கண்ணன் றன்கோயின்மேவி (௫௪)

பணிந்தனர் பற்பலாறு புகழ்ந்துபாண் டுரங்கா நின்னைத்
தணந்து செல்வகை யாயிற் றென்றனை யராலினி யான்போதல்
அணிந்தடி பணிவதென்றோ வருளுக விடையென்றேத்தித்
துணிந்துள மருகிமாரைக் கூய்க்கொடு சுதர்பாற்சென்றார். (இ)

சென்றுளந் தனைவிடோபாச் சேவடி சேர்த்திருக்கப்
பொன்றினசில நாள்பின் போர்தின மவர்கன விற்போந்து
மன்றலந் துளவமானீர் மகர்வயினன்பு கூர்ந்தங்
கென்றனைப் பிரிந்தீரன்றோ யானுங் கடேகுவுக்கு. (உ)

வந்ததுங்களுக் காயன்றோ வாதலானீரு மக்கள்
பந்தம் விட்டிப் போதே யென்பால் வருகென்று போனான்
சந்த தமறந்திலாததையலா ரெழுந்திருந்து
நந்தரை யழைத்துன்றந்தை நயந்தவா நளினை நாதன். (உஉ)

நம்மதூர் நணுகிநாளு நங்குலந்தனை யீடேற்றிச்
செம்மை செய்வதற்கமைந்தானின்றென்றன் கனவிற்சேர்ந்து
பொம்மல்சேர் தேகுக்கென்னைப் போதுக வென்று போனான்
அம்மழை வண்ணன்றன் பாலடைவது வேணடுமென்றார். (உ ங)

என்றலுஞ் சிரித்து மைந்தர்கனவு மெய்யாமோ வென்று
துன்றலைத் தடுத்து நான்கு தினந்தொலைவான பின்பு
நின்றதந்தாயை நோக்கி நேற்றளவினும் விடோபா
ஒன்றுமக்கென்னை சொன்னானென விகழ்ந்துற நகைத்தார். (உச)

நகைத்தவர் தம்மை நோக்கி நாதன் சொன்னதற்கு நீவிர்
மிகைத்திக ழன்மிடென்று வெறுத்தெமாபாயி சொல்லப்
பகைத்தவர் கேளாராகப் பாண்டுரங்கனுக்குக் கோபம்
தகைப்பரிதாகி வந்து சார்ந்தனன்றாய் கனவில். (உஉ)

என்னிடம் வரவுமக்கியானிசைத்து நும்மகர் பால்வாஞ்சை
துன்னிட வராதிருந்தீரல்ல வோநுஞ்சுதர்க்கு
மன்னிடு மரண நாளையிரண்டு ஜாமத் திலென்னப்
பன்னிடல் கேட்டுச்சாலப் பதறின ரழுதுசொல்வார். (உசு)

ஐயனே யெனதுமக்க ளவிந்திடி லெனக்கியாவர்
செய்கடன் செய்வாரென்ன ஸ்ரீதரன் யானேசெய்வேன்
மொய்கட னுமக்கென்றோதி மறையுமு னெழுந்துமுந்தித்
தையலார் மகரைநோக்கி யான்முனஞ் சொலத்தடுத்தீர். (உஎ)

ஆதலாற்பாண்டுரங்க னகத்திடைக் கோபங்கொண்டு
போதலா யின்றிரண்டு ஜாமத்திற் புரள்வீரென்று
நோதலாம் வகையிராவிற் கனவிடை நுவன்றானென்னச்
சாதலா கின்றமைந்தர் தாய்க்கு மூப்பானதாலே. (உஅ)

பித்தமிக் காகிவாய்க்கு வந்தது பிதற்றுகின்ற
தித்தகையென்று தாயைநோக்கின ரின்று நாங்கள்
செத்தவிவது மெய்யே நுஞ்செங்கை யாலிடுக சோறென்
றத்தகை யவருமாக்க வழுதுதாயன்ன மிட்டார். (உ ங)

வெள்ளடை துவர்க்கா யீயும்வேளை யிலரச னேவப
பொள்ளெனத் தூதர்வந்து பொருந்தலர் பொருவில் சேனை
வெள்ளம் வந்தமர் நேரிட்ட வாதலானீர் விரைந்து
தள்ளருஞ் சமர்க்குச் செல்லச் சாற்றின னரசனென்றான். (௬௩)

என்றவர் சொல்லக்கேட்ட விவரிருவருஞ் சமர்க்கு
நன்றெனச் செலவமைந்து நால்வகைச் சேனையோடும்
சென்றளவு போர்செய்து சிதைந்தடி பட்டு வீழ்ந்தார்
அன்றனை சொற்கேளா மலமலனை யிகழ்ந்த தாலே. (௬௪)

இறத்தல் வந்துற்றதென்ன வெண்ணின ரிபங்காத் தோனே
நிறத்தயா நிதியே யிப்போதெம்மை நீகாத்தல் செய்கென்
றுறத்த பித்திரங்கி வேண்டவுட னெதிர்தோன்றிக் கொண்டல்
நிறத்தினன் றழுவிச் சென்மினீ ளொளிவிசும்பென் றுய்த்தான். (௬௨)

அம்மகரிறந்த செய்திய மாபாயி முதலோர் கேட்டு
விம்மலுற்றழுங்கத் துன்பவேலையின் முகுந்த னென்னும்
செம்மறன் மனைவியாற்றாள் சஹ கமனஞ் செய்தாள்மா
லும்மவ ளுக்குங் காட்சியுத விவைகுண்டத் துய்த்தான். (௬௩)

வறியென்போன் மனைவி கர்ப்பமாயிருந்தன ளன்னளைத்
தெரியமாபாயி தேவுக்கழைத்தனர் கொண்டு சென்று
சுரிமுகச் சங்கமேந்தி கோயிலுட் சென்று தோன்றும்
கரிய மாறன்மே நோக்கிக் காற்றுணை யிறுகப்பற்றி. (௬௪)

குடும்ப நாசஞ் செய்கின்ற குடிலனே கொஞ்சமேனும்
தொடும் பரிவின்றி நீயென் சுதர்பட வினைவித்தாயே
இடும்பை திருணக்குத் தாசனென்பவர் குலத்தையெல்லாம
கெடும்பரி சியறுகின்ற கேசவா யானென்செய்கேன். (௬௫)

மூப்புறு பருவத்தென்னை யாரினி முயன்று நின்று
காப்பவ னொன்று துன்பக் கடலிடை யாழ்ந்திங் வந்து
தாய்ப்பவனத்திற் சேரமருகியை விடுத்துத் தாழ்ந்தா
மெய்ப்பவன்றன்னை நெஞ்சில் லிடுகில ராயிருந்தார். (௬௬)

அன்னவர் துயரை நோக்கியருளினை பாண்டுரங்கன்
தன்னது சகுணரூபந்தனைக் கொடுமுன்பு சார்ந்தேன்
இன்னலி லழுந்துகின்றீ ரொந்தெந்தக் காலத்தேது
துன்னுமோவது வேதுன்னுந் துயருறிற் பயனென் றுன்னும். (௬௭)

இப்பொழுதுமக்குப் பிள்ளையுடனெது வேண்டினாலும்
சொற்படி தருவேன் வேண்டல்சொல்லு கென்றுரைப்பக் கேட்டோர்
ஒப்பறு முன்னையன்றி வேறொன்று முகவேன் யானென்
றப்பொழு துரைத்த மாற்றமயர்ப் புற்றாயானீ யென்றார். (௬௮)

என்றுமற்றவரை நோக்கி யினியுமக்கியான் சேய்த்தோன்றல்
பொன்னுமக்குதவி செய்யும் புதல்வன்றன் மனைவியாகத்
துன்னுநும் பணியிலேதுஞ் சோர்வுறு தியல்வோமென்றான்
மின்னுமிழ் மணியும் பொன்னும் விளங்கெழில் மார்பினானே. (௬௯)

வினவெமாபாயி நன்றென் றிறைஞ்சிடவி மலன்றனத்
தினமுதலவர் தம்பேரனுகியே சேவை செய்தான
வனமலர்த் திருவுமன்னுர் மருகியாய்ப பணிசெய்துற்றுள்
அனகன் மற்றவரோடோர் பாத்திரத்துணடு வருவதானுன். (எவ)

சிலதினங் கழிந்தபின்பு செப்பெமா பாயிக்காயுள்
விலகுறு காலமாக விமலன்றன குறங்கிற் சார்த்தி
இலகுறு மாவிதன்னை வைகுண்டத் தேறச்செய்து
பலவகைக்கருமம் யாவும் பண்ணியுத் தரித்தான் மாதோ. (எக)

மருகியார் மாமியாரா போமவகை தெரிந்தங்கு வந்து
பெருகியது யமதாழந்து பிள்ளையுந் தானுமாக
உருகியென் மாமியாருக் குரிமைசெய்து தவகிலலேன
அருகிலேனக்தோ வென்ன வழுதன ளயாந்தாள் மன்னே. (எஉ)

அயர்வது தெரிந்து சுற்றததாரெலா ரியுஞ் சேயம்
இயலுடனிருந்துதானே கருமஞ் செய்தி ரென்றே த
பெயரரி மனைவிகேட்டு வியந்தனள் பிள்ளையான
நயமிகு விடோபா தேர்ந்தானுரணன் செய்கை யென்னு (எங)

தேர்ந்தவன் கோயில் சென்று தீர்த்தனை நோக்கி நின்னைச்
சார்ந்துறச் செய்கிலா தென்றந்தையர் தமைக் கொன்றுயே
நேர்ந்துள பிரகலாதனங்சத னென நிகழ்த்தப்
போந்தவர்தந்தை மாரைப பொன்றிடச் செய்தாய் போலும். (எச)

தருமமோ நீசெய்கில் ககவுகளாத லாலுன்
அருகிலு மருவல்கூடா தெனததனகையா யுதத்தால்
செருகித் தம்மார் பைப்போழ்ந்து சீர்தறகு முயலககண்டு
மருவலர் துளவோ ரேடி வந்தவன் கையைபபற்றி. (எடு)

கொண்டு வீணுயென் மேனீகோபங் கொணடாவி நீக்க
மண்டு கின்ருயென்றேதித் தழுவிக் கணணீரை மாற்றி
அண்டுவதண்டும் போக்கலரி தெனப்புகன்று தேற்ற
விண்டவனுகிக் கோபம்விமலனைப பணிந்து நோக்கி. (எசு)

நாதநின் செய்கை தேராநயமிலேன் செய்த தீமைக்
கோதறப் பொறுத்தாள் கென்றுபோற்றலுங் கொண்டல் வண்ணன்
மேதகு கருணை கூர்ந்து நவவித பக்தி மேவ
ஓதலு முபதேசம் பெற்றுற்றனன் ருயுந்தானும். (எஎ

பாண்டுரங்கனைப் பூசித்துப் படர்தருங் காலத்தன்னுற்
கீண்டினன் பதாஜி யென்றேர் புத்திர னிவனும் பக்தி
நீண்டுறப் பூசித்துற்ரு னிமலனை யிவனுக்கோர்சேய்
காண்டகுங்கான் ஹயாசங் கரனெனத் தோன்றினனே. (எஅ)

தோன்றினன்ருனு மவ்வாருகவே சுருதிநாதற்
கேன்றன னடிமையாகிப் பூசித்தா னிவனுமோர் சேய்
ஈன்றனன் போளோபா வென்பவ னெழிற் பாண்டுரங்கன்
ஆன்றபூசனை செய்துற்ரு னண்டிருபத்து நான்கும் (எகூ)

தன்னுயிரைபோற்ற யாவிற் றரணியி னுயிர்க ளெல்லாம்
மன்னுறச் சாதுபூசை மலிதரப புரிந்து மெய்யன்
என்னுமதிழுக்காதே சாத்துவிகனாய் வருநாளோர் நாள்
துன்னுருததிரன்மால் வேதாத் துயிலிடைக் கனவிற்றோன்றி. (அ௩)

உனக்கெதிலிச்சை யென்ன வுரைத்தலு மெதிர் வணங்கி
எனக்கு நனமைந்தன் வேண்டுமெனச் சம்புதந்தே னென்றான்
கனக்கரு நிறத்தோனருளுங் காசினிதனை யீடேற்றும்
மனக்கனி வானைத்தந்தே னெனமலரயனுந் தந்தான். (அ௪)

துயிலுணாந் தருகிற்றாங்கருந் துணைகன காயியான
மயிலினை யெழுபபிநாதன வகுததகைச் சொலிமகிழ்ந்து
செயிர்ற வாழுநாள்கள் சிலசென்றபின்பேதவி
வயினிடைச் சிவனவாத்தாற் சாம்பஜி யென்போன்வந்தான் (அ௨)

பச்சைமால் போளோபாவுக்கருளிய படியேநல்க
இச்சைகொண டடியரோடு மிருந்துழி யாவன்பாரிற்
கொச்சைநாக தறிவுமேவக் கொளுதகிநல் லொழுக்கத்தாக்கும்
விச்சைதோந்தவ னெனறெணணி நாமதேவரை விளித்து. (அ௩)

நியுலகத்தின்மூன்னே நிமலனையப பிறந்தபோதங்
கேயுமென் றாரினூறு கோடியென் றியல்கிரந்தம்
வாயுமா செய்வேனென்று வகுதததினை விரதமற்ற
தாயுறி லஞ்சுகோடி யையம்பதகோ ரிலக்க மிலை (௪௪)

அல்லவோ சரியதாக வமைக்கவுஞ் சிவகோடி
நலலொழுக் கத்துமேவ நடததவும் போளோபாவுக்
கொல்லையின் மகனாய்மேவு கெனவுரைத் தருள நாமர்
சொலலிய படியேசெய்வே னெனவர தொழுதுபோந்தார். (அ௫)

மனைகன காயியென்பாள வயினுற்றுப பிறக்கத்தோன்றும்
தனையபாப பாணடுரங்கன சனளிகிகொணடுசென்று
வினைதெறு திருவடிகளீழ் விழுதடிதிதத யோடுதந்தை
புனைமலாத துளிலொன்றன்னைப பொற்றினா வணங்கிநிற்க. (அ௬)

ஆடியருக கிரங்குசணண னருளுருக்குமணிதன்னை
நெடி துற நோக்கியிரதச சிறுவனை நினது கையாற்
றொடுதலசெய் தெடுத்தப பெற்ற தோகைகை யீதியென்ன
பாடிவிணை யில்லாள்சொனன வகைதந்தா சீர்வுதிததாள். (௨௪)

மற்றவர் கொண்டு நாதன் மலரடி வணங்கிச்சென்று
குறறமி றொட்டிவிட்டுப பெயர்வகை குறிக்குங்காலை
பொற்றனிப பாவைபோநது புகழ்த்துகா ராமனெனறு
நற்றுற நாமமிட்டுச் சடங்கெலா நடத்திச் சென்றாள். (அ௮)

பின்னருஞ் சிலநாட்சென்ற பின்கன காயிவேதா
முன்னருள் வரததாற் பெற்றாள் மூதுணா கான்ஹயாவை
நன்னர் மூவரையும் பெற்றோர் நாடொறுநனிவளர்த்து
மன்னரி யருளாலு வாழவின் மகிழ்ந்தனர் பஜனைசெய்து (அ௯)

மகர்வளர்ந்தனர் குமாரவயதுற விவாகஞ்செய்து
சுகமுறுநாளிற் றந்தைதனக் கதிமூப்புத் தோன்றத்
தகவுற மூத்தபிள்ளை தன்னைக் கூய்க்குடிம்ப வாழ்க்கை
நிகழ்வுற நடத்துகென்ன நேர்ந்திலன் வணங்கிச்சொலவான் (கூ)

ஐயனேயுலக வாழ்க்கை தன்னிலாதர மில்லேன்யான்
செய்யமா ஞாலத்துள்ள தீர்த்தயாத்திரை செய்யற்கே
மையலுற்றேனுனலு நின்னுரைவழுவிச் செல்லேன்
மெய்யரு ளெதுவோவென்று விளம்பத்தா தையும்வினவி (கூக)

சிவனருள் வரத்திற்றோன்றுந் திறத்தினத தெய்வநீதிக்
கிவனுரி யவனுனை னென்றெணித் துகாராமனைக்கூய்
அவர்வயி னெபுபுவிக்க வவருநன் றென்றுதாங்கும்
உவகைகொண் டுற்றுராகி வரவவ ருரிமைக்கந்நாள் (கூஉ)

காசமோ கம்பிடித்துக் கவலுறக் கணடுதந்தை
நேசமோ டாலோசித்து நிகழபுனுவினிலிருச்கும்
மாசிலப பாதியின்ற ஜிஜாயியை மணத்தல செய்யத்
தேசுறு துகாரா மென்பேரா சேர்ந்துவாழுந் திருக்கு நாளிலை. (கூங)

வேறு.

அன்னையும் பிதாவும பந்துவுங்களிகக வகத்தில்யா தொருகுளறபடி னாலி
மன்னுமில் வாழ்க்கை நடத்தியுநாளு மாலரி பஜனையை விடாமல
முன்னினர் புரிவாராய் வருங்காலந் தந்தைதாய் முருந்தன துபக்த
துன்னின ராகத் துயருழந் திருந்தார் தொலைந்தன சிலபகலெலையா (ஙச)

சாம்பஜி மனைவிதானும் வின்னடைந்தா டளாந்நதற்கு தாசனைதானி
மேம்படும் வரிநா மங்களைபுரழ்ந்து வேணடினர் நீத்தயாத திரைகுரு
போம்படி முயன்று முத்திவாய்க்கின்ற புரங்களே ஒொடுபனி வாணடன
ரோம்புறுஜோதி லிங்கமும் புஷ்கராதி தீர்த்தங்களுமுற்றும். (ஙரு)

காமமாதிகளைக் கடந்தொருகாட்டிற் கலந்துசா துக்களைக்கண்டு
நேமமாய்வரலா லான்மவிசார நிலைதெரிந் துணாவுற்றுநிற்க
வாமமாமனையில் வாழ்துகாராமர் மாதவா பண்டரிநாதா
சேமமாய்த் தாய்தந்தைய ருறுமளவுஞ் சிந்திப்பதொன்றுமின் றிருந்தேன். (ஙஙு)

மற்றவரிட்டி வைத்துளபொருளுஞ் செலவினின் மாணடமற் றினியான
உற்றுளகுடும்ப ரக்ஷகமெவ்வா றுளுற்றவே னெவ்வித முயல்வ
பற்றினுமன்னம் வஸ்திரஞ்செவ்வே பவித்திட லரிதெனப் பரிந்து
சொற்றனர்துணிந்தோ ராவணம்வைத்தங் கதிலுநட்டம் வரவ்வலைதது (ஙஙா)

கணணனைநினைத்துக் கடன்கொடுபொதி யேற்றுறுதொழில்புரி.து மறுறதிலு ம
நண்ணுற நட்டமெவற்றிலும பலியா நல்குரவுற்றுநாரணனை
எண்ணியான் செய்வதே தெனத்துக்கித்திருந் துழிகடன் கொடுத்தவர்தமம
அண்ணினர் தடுத்தங்கிருக்க யாதொன்று மாற்றிலராய்த் துயரடைந்தார். (ஙஙஅ)

மித்திரரிரங்கிக் கடனெலாம்வகித்து வேண்டிய முதற்பொருள் கொடுத்துப
பத்தியின்மிகுந்து ஸ்ரீதரனுமம் பகலுமல்லுஞ் சொலப்பயின்றார்
வத்திரமன்னங் கிடைத்தவரில்லை யாதலான் மற்றதை விடுதி
அத்திருமுன்வந்தா னெனத்துதிப்பாயே லுரிடை மிகவுநி யழிவாய். (ஙஙு)

என்றுபற்பலவாய் வாணிபஞ்செய்தற் கேற்றபுத்திகள் சொலியேகத்
துன்றுமனைவிதன் பதிதனக்குத் துளபமால் பத்திமிக்காகி
ஒன்றிய தின்னலதை விடுகென்னவெவ்வள வுரைக்கினுங்கேட்ப
தின்றிதற் கென்செய்கே னெனநிந்தித்திருந்தனடினந்தொறுமிருக்க (௩)

எவரொது சொலினும் ஹரிதியானத்தை யிடைவிடா ராயிருந் துழிமற்
றவர்மனை யிருந்த பொதியெரு தொருநான்கவற்றின் மூன்றுரோகத்தாலிறக்கத்
தவர்துகா ராமர் பொதியெரு தொன்றுற்றும் வியாபாரஞ் செய்துறுநாள்
பவர்வியாபாரர் தம்முடன் சேர்ந்து படர்ந்தன ரொருதினம்படர. (௩௧)

கூடநேர் வணிகர் முன்விளைந்தேகக் குறுகினர் தனியராய்க் காட்டி
னூடடை பொதிலொரு விடைமுதுகி லுறுபொதி நழுவிக்கீழ்வீழக்
காடதிற் பொழுது போயிரு கடிகை கழிந்துபெய் மழையிருள்கலக்க
வாடலாயினரப பொதியினைதூக்கி மாட்டிலேற்றத் துணையின்றி. (௩௨)

ஒருவருநடப்ப தில்லையெம் புலியோ டுறுதுட்ட மிருகங்கண் முழக்கம்
வெருவல் செய்கின்ற தென்செய்துங் குடும்பமேவியன்றோ துயர்மேவிற்
றருதெவர்பாற் சொல்லுவதிதை யென்னவுருற்றுப் பாண்டு ரங்காநீ
கருதுமெய்வினை காத்தல்செய் தருளக் கடனுனக்கென்று கண்கலுழ்ந்தார். (௩௩)

காட்டினிற் றனியராய்க் கலழ்வது தெரிந்து கண்ணனோர் பதிகனாய்க் கலந்து
நீட்டிருளிடைநீ யானொனக்கேட்க யான்செட்டி நெடுவழி செல்வேன்
மாட்டின் மீதிருந்த பொதிவிழுந்ததுகீழ் மற்றிதை யெடுத்துமீதேற்ற
வேட்டிவ ணிருந்தேன்றுணையிலே னிந்தவேளைநீ வந்தனையென்றார் (௩௪)

என்னலும் போதியைத்தூக்கி மாட்டேற்றி யிருட்டினிவழிதெரியாமல்
துன்னலே யென்பின்வாவென வழைத்துக் கொண்டிடந்திரா யணித்தூநீர்
நன்னதிமருங்கு நண்ணினனது தான்பெருகுதற் கண்டுநாடினர்முன்
மன்னு சக்கரத்தை விடுத்துநீர் முழந்தாளளவுறப் புரிந்துமற்றதனமேல் (௩௫)

வருகென வழைத்துக் கொண்டெருதோடு மனையுகச் செய்தனன் மறைந்தான்
மருவிவர் சிலநாட் சென்றபின் மூன்று மாடுசேகரித்து மேன்மிளகாய்
தருபொதி யேற்றிக்கொங் கணதேசஞ் சார்ந்துவா ணிபஞ்செயச் சென்று
கருதவண் கடைவைத்தன ரவருள்ளோர் கண்டொருமணங் கெவளவெ (௩௬)

பாண்டுரங்கன்பேர் பஜித்தவன் வழி விற் படிந்தவசத்துளோர் பார்த்து
வேண்டினகொண்டு விலைதருகென்ன விலைதந்து வேண்டின கொண்டார்
எண்டியசிலர் மற்றவர் நினைவில்லா திருத்தலால் விலைதரா தேயும்
நீண்டகையளவும் வாரினர் சென்றார் நிகழவோ துட்டன்வந் துறறான். (௩௭)

எனதகந்தனக்கு நனிமிளகாய வேண்டியதொரு பொதிதருகென்று [நி
வினவுமுன்கொடுபோபொதியெனக்கொண்டுவிரைந்துசெல்வோன்றனை நோக
அனமிளகாயைக்கொண்டுகொள் கோணியென்வயிற்கொணர்ந்து நல்கென்றார்
பினரிவன் வருபோதிவன் வேறில்லை பெய்கலமென்றுடன் பெயர்ந்தான். (௩௮)

இப்படிமிளகா யாவையுஞ் செலவாயினபின் பங்கொன்று மின்றெனப்போய்
அப்பிளட் மூழுகிப்பூசைசெய்த யினியருந்திப் பின்னரி தியானத்தில்
ஒப்புட னிருக்க மூப்பொதி முழுது மூருளோர் கொண்டன ரிவன்போய்
எப்படிக் வோன் முதற்பொருளுண்ப தெவ்வித மெனக்கண்ணனெண்ணி (௩௯)

மானிடவேடங்கொண்ட ஊரவந்து வாங்கினா வயிறசெனறு விலைநீர
ஏனினந்தாரா திருக்கினறீர விராவினீகென வவரொலா நீயாரா
தானினமிளகாய்க காரனோ வெனலுநதகுதுகாராம செட்டி கடையாள
யானிவைகொணட நுமவயிறறணடற கெயதினெ னெனறன னெமமான ( )

தூக்கியு மதிததுங் கொடுததனனோ நீ சொலகெனத தூககியே தரலால
ஆக்கியதியற்பேரது துகாராமெனனலு மவனறூகக்கியே யளித்த
வாக்கினைப புதலகவெனனலுந தூகக்கி வழங்கியவகை வழாதுரைசக
நோக்கினா சரியெனறறு விலையாருநதநதனா நுவலபொக கொணடோன ( )

பாலடைநதுளள பணநதரு கெனனவவன யஜமானன பாறறருவேன
ஏலநின பாறறரேனெனப பணநதநதாலனறியேகிலேன பொனறற
சாலவு முனிவாரெனத தடுததிருகசச சணடியடக தருஙகிலேனெனறான
மாலவனறனனை விலைதராயாகின மாயவனினனகச கெனவலிய (ரூ)உ)

அவனிதேதனா வநகடுததகெனறுனது பொதியைகொணடகலகெனவமமான
புவனியிறசாகைகைகொணடுபினறிருபபல பொருநது கெனவவனபொறறையை
எவண நீ பணநகொளவாயெனகக்கக வெமபிரானக கொருதாரபைக
கவாதல செயதகததுதநதநதிடைப பூடடிகக சதிடைசசுருகுகிடகனனறான

அவ்வயினலம பலயாவருந தெரிநதநகடுததளாயப பணநதராயாகில
இவ்வயினிறப பானிவளிதாலெயது மிருமபழி யெனறு கொணடேனை
கவ்வயினுரப பிபபணநதருவிததுக கழுதகிய சுருககைகயு நெகிழததா
செவ்வயி னெணணிபபணநகொடு துகாராமசெட்டி பாறசெனறனனறிருமால

அங்குறு பொழுதவவா விசாரிபபுகாரரையப பொருளைமளிசக
இங்கு நீ பணநதநதாயிசே கெனறிநதவுருளளவா யாரும
நுங்குறுமபொருள கொணடகனவிலை கராமனுகாவது முறை லவெனறு
தங்கு நுமபொருளைதததருகெனக கநதா கொடுதசேனென மாலசாறற ( )

ஒபபினா கொணடோ பணததைமறறவனகைபுவி நேவாங்கிவாவெனறா
தபபிலன செனறோ செமபது நிறைவுதாசபொரக வநதுடனா கொடுக்க
மெயபபது துகாராமலிவினை கொணடு மேமி ரு னனமிக யகிழநதித
துபபிடுஞ சோறுணடேகு நீ யெனனதசுளவ மாபபசற கிசைநதான ( )

சதாசிவனப போதகி யியாயகுச சாரதெனக கிவவளவனனம
உதாரி நீதருகவெனலு மவவிருவருனன முதுமடனா துகாராம
அதான பின செனறிருவருஞ செலலவநதவிரு சிலாவநது
நிதான மிலலாதோா பொதி மிளகாயை நீ யொருதுடன பாலீந்து. (ரூ)எ)

பின்னுனककாளாம விடோஜி யெனடரனைப பெறுவிலை வாங்கி வாவென்று
துன்னுற விடுததாய் துடடனீ யாதாறறெடாநச னன கழுத கினிற சுருகுகட்
டெனனதாவியை நீபபேன்றரா யெனனிலெ ர தூககிய பொழுதியாங்கள
மனனியே தடுததுப பணந்தருவிகக வாயததுனனலென வகுததாா (ரூ)உ)

அந்த ஊரா சொலவதும பணமெல்லா மணமிபதும முளததாயகிங
கிந்தமா செய்கை யியன்றதும விடோபா வெதில விளையாடெனக தெரிந்து
நந்தலில் கணணனென பொருட்டிநுனடதத நேரிட்டதே யெனறு
நொந்தனா புகழநதாரது தெரிநதாரு நுவலுகாராமரைத் துகிதாரா. (ரூ)கூ)

அங்கு நின்றவர் தம்மூர் புகவெண்ணியதர் வருபோதொரு மோசத்
தீங்கு செய்வஞ்சன் பித்தளைக் காப்பிற் செம்பொன் மேற்பூசியே திகழ்வித்
தோங்கியது காராஞ்செட்டிபாற் காட்டியுனக்கிது தருகின்றேன் விலைக்கு
வாங்குதியாநீ யென்னலும் பார்த்து மற்றிதற் குறுவிலை யில்லை. (௫௨௩)

என்னிடத் தென்ன வுன்னிடத் துளதை யீதிமேற்றக் கதையுன்பால்
மன்னியான் வாங்கிக்கொள்ளுவே னென்னமற்றிதற் கொப்பின ருள்ள [ர்
பொன்னினைமுழுதுங்கொடுத்தந்தக்காப்பைக்கொண்டுதம்மில்லிடைப் புகுந்தா
துன்னிய கடன்றந்த வன்றனக் கதனைக்காட்டிநீ தொகுவிலை செய்து. (௫௨௪)

கடன்பொருள் கொண்டு மிகுந்ததை யெனக்குத் தருகெனக்கை தரக்கண்டு
திடந்தெரிவாளைச் சிரித்து மற்றெவர்க்குந் தெரிவுறச் செயவவர் துணைவி
உடன்று தன்றலைமே லெற்றினளாகி யுன்னைப்பண்டாரி புரத்துள்ளோன்
மடன்பெறச் செய்தானன்றி மற்றில்லை மற்றவன் றன்னை நேசித்து. (௫௨௨)

திரிகிலா யென்றேன் கேட்கிலை யிந்தச்செயல் வரச்செய்தனை யிதனில்
மரிவது நன்றிங் கிருந்தென்னை பயனு மடிந்தது குடும்ப மென்செய்வேன்
தெரிகிலை கிறிது மென்றாப் புதலுஞ் செறிடன் காரனுஞ் சென்றான்
எரிசினச்சி ஜாயிகுடும்பர க்ஷணைக்காயெய்தின ளொருவணி கன்பால் (௫௨௩)

வாக்குநாணயமாய்ச் சிலபொருடருக வெறனள் மற்றவ னிவளுக்
காக்கமுள்ளோர்கள் சகோதர ரொன்னவறிந் துனக்கெவளவு வேண்டும்
நோக்கி நீசொல்க வென்றன னிரண்டுநூறு பொன்றரு கெனக் கொண்டு.
சீக்கிரத்தில்லின் மேவிநாயகனை நோக்கினள் செப்புகின்றாளால். (௫௨௪)

நீயினியேனு மோசம்போகாமனிலைத் துவாணியஞ் செய்தி யென்று
மேயின பொருளைத் தந்தன ளுப்புவிற் பவரொடு விராய்த் துகாராம்
எயினபொதியிற் பிடித்தெரு தேற்றியெய்தினர் பாலே காட்டெனு மூர்
போயினர் விற்றப் பணத்துக்கு வெல்லங்கொண்டு விற்றுப்பொருளெல்லாம்.()

கொண்டனர்திரும் பிவணிகரோ டெய்தக்குறுகினன் வழியிலோர் குடும்பி
மண்டு சங்கிலியின் மரத்திழை கலப்பைமாட்டிய கழுத்துடை யவனுய்
அண்டிய வணிகர் முன்னெதிர்ந் தியாளோந்தண னரசிறைக்கி லாமல்
பிண்டெனுரிரக்க வேண்டினன் வந்தே னென்றனன்வணிகர்கள்வெறுத்தார்.

வெறுத்தபின்று காராம்பாலடைந்தையவேண்டுபொன்னிரண்டுநூற்றைம்பான்
மறுத்திலை தரிலென் குடும்பமும் வாழுமாட்டிந்தத் தண்டமுந்தீரும்
பொறுத்தருள் செய்க வென்றிரந்தனனப் போதவர்க்கருள் மிகப்பொங்கித்
தெறுத்த தண்டந்தீர்வகை யிருநூற்றைம்பது பொனுந் தந்தனர் செவ்வே. ( )

கண்டசெட்டிகளெல்லா மிவர்தம்மைக் கடுத்தின்னபடி செயத்தருமோ
கொண்டவுன்மனைவிக்கென்சொல்வையென்றுகூறினர்பிரிந்து முன்சென்றார்
மண்டிவனொடு சேரத்தகா தென்று மற்றிவர ரசிறை செலுத்தித்
தண்டமுந் தீர்திடியென்றவன் குடும்பந் தாமுணச் செலவுக்குந் தந்தார். (௫௨௬)

அம்மறையோன் கொண்டடை வொடுதுய்த்தங் கருடுகா ராமரைநோக்கி
உம்மை நேரான ஹரிதனக் கன்பருகைத்தி லில்லை யாதலினும்
தம்மையெஞ்ஞான்றும் ஜகபதிகாக்கத் தகுவனென்றாசி சாற்றினனவ்
வெம்மை தீர்ப்பதற் கென்பொரு ளுதவியதே யென்றுள மகிழ்ந்தனர் விரும்பி.()

இல்லிடை மனைவிக்கென் சொல்வதென் றங்கெண்ணினரிருத்தலும் விடோபா
நல்லிய லன்பன் மூதலையுங்கிடைத்த லாபத்தையுஞ் செலவழித்தான்
புல்லியவணிகர் போய்மனைவிக்குப் புகலின் மற்றவள் வெறுத்திவனை
அல்லல்செய் கிற்பாளே யெனத்துகாரா மாகிமுன் சென்றனமம்மா. (௧௯௭)

சென்றுமுன்கடன்றந் தவனிடை வட்டிசேர்த் திருநூறு பொன்செலுத்தித்
துன்றுபொன் னைந்து ஜிஜாயிபாற் றருகவெனத் தரவவன் சொலுநீயே
நன்றுபோய்த்தருக வென்றன னதற்கு நான்வெகு நாட்சென்று வந்தேன்
என்றுகோபிப்பா ளாதலா னீயே யீதியென்றீந்து போயினனே. (௧௯௮)

அவ்வணிகன் கொண்டவரிலாள் பாற்சென்றைந்து பொன்னுந்தந்தங்களைத்தும்
செவ்வயி னுரைத்தா னவளவரொங்கே செப்புக வெனவெங்கே யேனும்
திவ்விய ஹரிநாமஞ் சொலித்திரிவான் சினந்திடே லென்றவன் சென்றான்
ஒவ்விய மறுநாள்வீடு வந்துற்ரு ருதவரி பஜனைசெய் துற்ரு ர. (௧௯௯)

உற்றபோ துடன்வந் துற்றனர் வணிகரோதினர் ஜிஜாயிபாலனைத்தும்
மற்றவள் கேட்டுவியந்து பொன்செலுத்தின வன்றிருமாலெனமதித்துப்
பெற்றதன் கணவனொடு பிணங்காமலிருந்தனளுள் சிலபெயரச்
செற்றதவ்வூரிற் பஞ்சமிக்கதனுற்றீனியில்லா தெருதிறந்த. (௧௯௰)

அன்னவஸ்திர நேராதனுரிடை யேயழுந்தியுங் கடன்கிடையாதும்
துன்னுவெம்பசிக் குக்கீரைகளட்டுத் துய்த்தும் வெம்பசி தொலையாமல்
இன்னலின் மூத்தமனை விநோயாலு மிறந்தனள் யாவருமெய்தி
மன்னியது காராமென்பவர் தம்மைநோக்கினர் சிற்சிலவகுப்பார். (௧௯௧)

தாங்கரு மின்னலரி பஜனத்தாற் சாருமென் றுரைத்தனமதனை
நீங்கலைவிடா யேற்றுன் பமேன்மேலு நேரிடுமினி யெனுநீக்கில்
ஓங்கியசுகத்திலுறுதி யென்றுரைத்தா ரோது பாண்டுரங்களைப் பஜியார்
தீங்கிலரோசா கார்களோ நீவிர்செபுதல் செல்வித்தன் றென்றார். (௧௯௨)

கண்ணனுமங்கள் கனிந்தனர் புகன்றுகாலம் போக்குற்றனர் சிலநாள்
நண்ணியபின்பு மூத்தகுமார னுமஞ்சந்தோபா வெனபானும்
விண்ணுலகடைந் தானவ னிடத்தன்பு மிக்கனராதலான் மிகவும்
எண்ணருந் துன்பத் தழுந்தினர் கொடிதேயிப் பிரபஞ்ச வாழ்க்கையென்று.

இதிலிருந்தி யாரீடேறினர் சீச்சீ யிதைவிட்டுத் தொலைப்பதே யினிதென்
றதில்வெறுப்புள ராயெனக்கொரு பதின்மூன்றாண்டு நேர்காலத் திற்பாரம்
பொதிதலாய்ப்பதினேழாண்டிற்றூய்தந்தைபொன்றினர் பதினெட்டிற்றமைய
முதிர்வெறுப் புற்றுவனத்திடைச் சென்றூர்முந் திருபஃதெனு மாண்டில். [ன்

மனைவியுஞ் சேயுமிறந்த னரின்னமனை யறஞ்செய்வதால் வருதல்
இனைவதேயன்றி வேறிலையினியா னெப்பொழுதினுந் திருமகள் கோன
நினைவிலே காலங்கழித்திடல் வேண்டு மென்றெணி நெடியபோ பநாதென்
றனைவரும் புகலும் வரைமிசை யேறியமர்ந்தனர் விதிகண் மூடினராய். (௧௯௩)

வேறு.

ஸ்ரீதரசஞ் சீவியுனைத் தியானித் தெவ்வாறு
சேவித்தல வழுத்தலெத்திறத்தி லெதிர் நோக்கல்
மாதவனே யெனப்பஜித்துச் சலமுணலுந் தவிர்ந்து
வதிந்தேழுநாள் வரையும் வரையிடத்தே யிருக்கும்
போதமல னரவாகித் துகாராமர்ச் சூழ்ந்து
பொதி கோரங்கொடு சிறிப்பொருந்தி யதுதெரிந்தும்
தீதறு கண்டிற வாமற்சிறிது மச்சமின்றித்
திருமா ணமங்களையே செப்பின ராயிருக்க. (௧௩௬)

அசரீரி பூமகள்கோ னரவாகி யுன்பா
லடைந்தன னென் றதுகேட்டுத் துகாராமரரியே
நிசமாகி லரவுருவை விடுத்துப் பாண்டுரங்க
நிமலவடி வாய்வந்தா னேசமுற்றுப் பார்ப்பேன்
இசைவாயென் றரிநாமங் களையோதியிருக்க
விவரது நிச்சயபாவந்தனைத் தேர்ந்து கண்ணன
நசைமேவிப் பொன்னுடையு மைம்படையும் விளங்க
நான்கு புயங்களு முடியு நன்கொளிர் குண்டலமும். (௧௩௭)

பொலியவெதிர் தோன்றியென்னைக் காணவுள்ளத்தன்பு
பொருந்துதுகா ராமா காணென் றினிதுபுகல
மலியவொளிர் பரஞ்சோதி மயமாகிநின்ற
வடிவுகண்டானந்த மிகப்புளக முடல்பொங்கத்
துலியவடி விடையொன்றி யிருந்தனரிங் கங்கே
துணைவனெனுங் கான்ஹையா தமையமாக்காணமல்
மெலியவுட லிவர்மனையை யொழிந்தனராய் வெளியே
மேவிய நாளாகி ஜலபானமு மில்லாமல. (௧௩௮)

ராமவியோ கத்தாலே பரதாழ்வான்வருந்தி
நாடிவந்தாற் போனகரு நாடுநெடுங்காடும்
ஆமயலெல்லாந்தேடி யம்மலைமேலேறி
யணைபோதங் கமலனையுந் தமையயாரு நோக்கி
ஏமமிக மெய்மறந்தோர் முயற்சியுமில்லாம
லெழிலரியைக் காணும்வகை யெனக்கியன்றதென்று
தோமறுகண்ணீர்பெருகிச் சாஷ்டாங்கமாகத்
தொழுதனரப் போதுடனே சுதரிசனக் கையன். (௧௩௯)

தழுவியெடுத்துத்துகா ராமரைத் தன்மருங்கிற்
றங்கவைத்துக் கொண்டுநினக் கென்வேண்டுமென்ன
வழுவிலன்னை தனைமறவாக் குழவியென நின்னை
மறவாமல் யானிருக்கும் வகையருளு கென்றார்
நழுவவிடா துங்களுக்கா யிவ்வகை யாம்வடிவு
நான்கொள்வே னின்விழைவு நல்கினன் மற்றினிநீர்
பழுதறுதும் மூர்புகுந்து பஜித்திருமி னும்மைப்
பகுத்திரோ னெனலுமிடைப் பக்கலி னின்றிறங்கி. (௧௩௪)

எட்டுறுப்பும்படி யக் கீழிற் பணிந்தார்தம்பி
யெனுங்கான்ஹை யாவுமிறைஞ் சப்பரமன் மறைந்தான்
மட்டறுமப் பொருப்பினிடைப் பரமனின்றபாத
மலர்ச்சுவ டின்னமு மிருக்கின்றன பின்புதுகாராம்
கிட்டிடுதேம் மிளவலொடு மூர்புருந்தங்கருகே
கிளருமிந்திராயணி திரத்திருந்தார் பொழுது
பட்டிரவு விடிந்தபின்பு நீராடி நியமப
படியுமுடித் தெட்டாநாள் பாரணையுஞ்செய்தார். (௩௪௪)

அமலனருள் பெருகவருந் துகாராமசாமி
யதிகநனி விரக்தராய்க் கான்ஹையாவான
விமலவிள வலைநோக்கி நமதுதந்தைக்குதவ
வேண்டுகடன் சீட்டையெல்லாம் விரைந்துகொண்டுமேவக்
கமலமுக மலர்ந்தருளிச் செய்தவை வந்த பின்பு
கடன் வாங்கினோ களிந்தக் காலத்தெத்திறத்தோ
தமலமறத்தருவாரோ தருகிலரோ நீவிர்
தகநிர்ப்பந்தஞ் செய்து தரக்கேட்பீரதனால். (௩௪௫)

வரவேண்டும் பொருட்கான சீட்டெல்லாமிந்த
மாநதியில் விடுப்பது நன்றென்னலுங் கான்ஹையா
உரவோர்நீர் விரக்தரா யினிர்யாரோ குடும்பத்
துள்ளவ னெவ்வாறு பிழைத்துய்யும் வகையென்னத்
திரமாகவ வாவறுத்த துகாராமசாமி
சிறிதுன்னி யவற்றையிரு பங்காகச்செய்து
தரலான வொருபங்கைத் தம்பி கையிற்றந்து
தமதுபங்கை யாற்றிலிட்டுத் தம்பிக்கீதறைவார். (௩௪௬)

ஒருவரையும் வருத்தாமற் பொழுதுபோக் குறுகென்
றுரைத்துமனைக் கேகும்வகை யுரைத்தருளிப் பின்பு
திருவுறையு மணிமார்பன் கோயிலுக் குட்சென்று
சேவித்தா ராண்டுகொண்ட பாண்டுரங்கன்றன்னைத்
தருவுறையுங் கானிடைச்சென் றுணவு பெற்றதுண்டு
தம்மூர்க்கு மூன்றுகோசளவுறு பாணடாரா
அருவரை மீதேறி ஹரிநா மங்கள் புகன்றே
யனுதினமும் விட்டலனை யகத்தமைத்துக் கொண்டு. (௩௪௭)

அங்குறைந்தோர் சார்புபொழு தத்தமித்தபின்பூ
ரணுகியிராமுழுது மருளமலனெளிர் வடிவம்
பொங்குளத்தும் புறத்தும் விளங்குறக்கண்டும்புகழ்கள்
புகன்றுதுயில் கிறதின்றிப் பொழுதளவு நடித்துக்
கங்குல் கழிகாலை யிந்திராயணிக்கு வந்து
கலந்தாடிப்பூசை செய்து கான்வரை மீதேறித்
தங்குமொரு புறத்திருந்து மால்பஜனை சாற்ற
ஏவிராதிப்படி நாளுஞ்சரித்து வருமோர் நாள் (௩௪௮)

தினமுமுழுகுறு நதியினீராடிப் பூசை
செய்து கரைதனிலிருந்துவிட்டல னமத்தை
அனவரதம்புகல்வது போற்பஜித்திருக்கச் சமீபத்
தாயவொரு சோளக்கொல்லைக்காரன் பயிரிட்
டினையதற்குக் கதிர்தோன்றும் பருவமணிக் தாயிற்
றென்றதற்குக்காவல் வைக்கவேணடு மென்றங்கெண்ணி
மனனமுறுந் துகாராமசாமி வயின்வந்து
வாளாகாலம் போக்கேல் வருகவென் பாலென்றான். (௧௪௬)

என்றெனது கொல்லையிற்புள்விலங்கு களைக்காப்பா
யேலுனக்கு முடிவிலனா மணங்களிப்பே னென்ன
நன்றெனச் சொன்னார் யாவரோது செயச் சொலினு
நன்றென்னுந் துகாராம சாமிதனை யழைத்துச்
சென்றெனக் காய்ச்செய்த பரணிதிலேறி யிருந்து
செய்தபயிர்கண்டு முதலா மளவுங் காத்துத்
துன்றெனச் சொல்லிபபோ னைற காராமசாமி
சொன்னபடி சோளக்கொல்லையிற் காவகத் துணிந்தார். (௧௫௩)

பரணிருந்து விட்ட ல மைங்களெல்லாம் புகழ்ந்து
பஜித்திருக்கும்போதுவந்து பக்ஷிகள் பாற்சோளம்
மூரணிலது இன்பதனைக் கண்டு துகாராமர்
முகுந்த னெங்குநிறைந் திருக்கின்றான தலைவற்றை
இரண முறக்கடிவோ மேற்பாவ மெனக்கடியா
திருந்துதின்று வயிறுநிறை பக்ஷிகளை நோக்கித்
திரன்மிகு புள்ளினமே நீருதகமினிப் பருகச்
சென்மினென்பார் தினந்தோறுந் திருமாலைப் பஜிப்பார் (௧௫௪)

மனையிலுறுஞ்சி றாயிகணவனைக்காண துவைந்து
மகனைப பார்த்தெனகதோ மிக்கதுபசி நானன்னம்
அனைய வருக்கிடாம லுனனே னவனைப்போய்த் தேடி
யழைத்து வருகெனக் காசிபாயி யெனுமூத்த
தனையை பலவயின் றேறுந்தேடிப போய்த்து காராஞ்
சாமியிருந்துழி கண்டு தந்தாய் சாப்பிடற்கு
நினைவிலை யோவருக வெனக்கொல்லை தனைக்காக்க
நியமித்த முதலாளி யஸ்தமிக்குங் காறும். (௧௫௨)

கொல்லைதனை விடாதிருக்க வென்றன னெவ்வாறு
கூடும் வரவுதனைக்குப் போய்ச்சொலென்று சொன்னார்
வல்லைமனைக் கணுகித்தன்றாய்க் குத்தன்றாதை
வகுத்ததுமை செய்யவவள் மனனை ருண்ண வன்னம்
ஒல்லையி லுய்த்தவ ருண்டபின் பறிந்து கொடுதா
னுண்டன ளிவ்வாறு தினந்தோறு மிரவாகக்
குல்லையணி பாண்டுரங்கன்றனைச் சேவித்தேகிக்
குறித்த பரணிருப்பாரோர் மாதவராயாக. (௧௫௩)

காவல்வைத்தோன் கொல்லை விளைந்தது காணவந்து
கண்டனன் பார்த்தன வெல்லாம் வெறுங்கதிராயிருக்க
ஓவறு கோபங்கொண்டு காப்போரை நோக்க
வுவர்விடல னுமம் வாயுளாபப வுறுபரணமேல்
மேவலைக் கண்டியா னுன்னை விசுவசித்துக் காகக
வேண்டினதற்குக் கொல்லைவிளைவு கொள்ளை யிட்டுத்
தாவறு மென்குடி முழுகச் செய்தனையே யென்று
தவவைது மங்கவளைத் தானிழுத்துச் சென்றான். (௧௫௪)

அந்தவூர்த்தலைவனிடத் துய்த்துமுன்னே நிறுத்தி
யவன்காண வயிற்றிலெற்றிக் கொணடுளது சொன்னான்
முந்தநின்ற துகாராமர் தமைநோக்கித் தலைவன்
முயன்றது நீயெனனை யெனமுழுமுதல்வனடியார்
இந்தமுதலாளி யென்னைப் பரணின் மீதேறி
யெய்து பக்ஷிகளைக் காக்கவிசைத்தன னவ்வாறே
வந்தபக்ஷிகளைக் காத்துவைகினேன் போகா
வகைபோக்கினே னென்றால வகுத்ததண்டம் பெறுவேன். (௧௫௫)

புள்ளினந்தம் வயிறுநிறையப பொசித்ததன்றிப்
புகன்றபடி சூறைசெய்து போயின தொன்றில்லை
கள்ளமிலை மெய்யிதெனக் கேட்டன ரெல்லோருங்
கலகலென நகைத்தன ரத்தலை வனதுகண்டங்
குள்ளவர் முன்பயிரிட் டோன்றனை நோக்கியுண்மை
யுரைத்தியுனக் கானகொல்லை யெவ்வளவு விளையும்
கொள்ளவென மணங்கது நாற்பது விளையுமிதற்குக்
குறையா தென்றான் பயிர்செய்குடியா னென்றானே. (௧௫௬)

பறவைகளுண்ணக் கொடுத்தபடி யானிதானே
பழுதுசெய்தாயுழுது பயிரிட்டவன் சொற்படியே
பெறவளித்தல் செயவேண்டு மெனத்தலைவ னுரப்பிப
பேசியளிப்பதற் குனக்குப் பெரிது பொருளில்லை
உறவதற் காதர வெழுதிக்கொடுக்க வெனத்துகாரா
முடனெழுதிக்கொடுத்தனர் பின்புதி செய்த தலைவன்
அறவழிந்த கொல்லைதனை நாம்போய்ப்பார்ப்போமென்
றங்குள்ளோரொடு கூடியடைந்த தனைப்பார்த்தான். (௧௫௭)

பார்க்கவரு முன்கொல்லை யளவில் விளைவாகப்
பாண்டுரங்க னியற்றின னப்படி விளைவுபார்த்துச்
சேர்க்க வியந்தனர் கொல்லைக்காரனுங் கண்டெனக்குச்
சேரவிவை செயிலெழுதுஞ் சீட்டை யளித்திடுவே'ன்
நேர்க்கவெனத்தலை வனிந்தத் துகாரா மன்றிருமா
னிளைவுளனுதலி னிவற்கு நெடுமால் செய்யருளால்
தீர்க்கவிளைவாய துனக்குளது கொள்கவென்று
செறிந்து விளைந்ததை யறுத்துச் சேர்க்கவுரைசெய்தான். (௧௫அ)

மலிந்துகுவைசெய்தது முந்நூற்று நாற்பானு
மணங்களவு கண்டு கொல்லைக்காரனுக்கு நாற்பான்
பொலிந்த வளவுள கொடுத்துக் கடன்சீட்டைக் கிழித்துப்
பொருந்து துகாராம் சாமிமுக நோக்கிக் காவல்
நலிந்துசெய்தபடியாலே மனமிரங்கி நாத
னன்றளித்த தென்றுமிகுந்தன வெல்லா நல்கப்
பலிந்தவிந்தச் சோளத்தி லொன்றேனு மாசைப்
படாதிருக்க வினைந்தவிந்தப்படி யெல்லாங் கொண்டால். (௩௩௬)

எவ்விதத்துன்பத்துக் காளாக வியற்றுறுமோ
வென்றனக்கு வேண்டா மென்றனர் தலைவன் கேட்டுச்
செவ்விதென மகதாஜி பண்டிதர் தம்மகத்திற்
சேர்த்து வைத்தான் மிகுந்துள சோளங்களெல்லாஞ் செவ்வே
அவ்விதங் கண்டானந்தங்கொண்டு துகாராம
ரரிபஜனை செய்து கொண்டு வருநாளிலொரு நாள்
திவ்விய விடோபாவின் கோயில் பழுதாகித்
திகழ்வது கண்டது திருத்தச்சிந்தை கொண்டுமுயன்று. (௩௩௭)

மண்குழைத்துக் கோயிலின் மேற்றட வியுடன் மிகவும்
வருந்துதலைத் தெரிந்து விடோபாவுக்கவ்வருத்தம்
எண்குழைக்க மகதாஜி கனவிற்போயினியுன்
னிடத்திருக்குந் தானியமெல்லா மெனது கோயிற்
கண்டுழைத்த வயினெல்லாஞ் செவ்வை செய்கவென்னக்
கண்விழித்தவ்வூரார்க் கக்கனவதனைச்சொல்லி
விண்குழைத்த சங்கொலியான் கோயிலுக்கெல்லோரு
மேவிவந்து துகாராமர்வேலை செய்யக்கண்டார். (௩௩௮)

கனவு நிகழ்ந்ததற்கிது வேகண் கூடென்றறிந்து
கற்சாந்து முதலவெல்லாங்கொண்டு பழுதகற்ற
முனர் நடுவாய் வைத்துள தானியங்களெல்லாஞ் செலவாய்
முற்றின பின்புனித நலமுடிப்பதில்லாதிருக்க
அனகதுகாராம் சாமி வருந்துதலைத் தெரிந்தா
னகளங்கன் மகதாஜி கனவிடைப்போய் முன்னர்ப்
புனமுடையோன் காத்தத்னுக்கரை மணங்குச்சோளம்
புகன்றபடி தராது கொண்டு போயினன் மற்றவன்பால். (௩௩௯)

அரைமணங்குங் கொண்டென் கோயிற் புனிதமாக
வமைக்கவெனவது தெரிந்தங்களைவருக்கும் புகன்று
வரையளவு தரவாங்கி யூரிலுளோர்க்கெல்லாம்
வரிவைத்துப் பொருடிரட்டி மாதவன் கோயிலுக்குப்
புரைதவிர்த்துப் புனித நலம்பொருந்துறவே செய்யப்
பொருவிறுகா ராம்சாமி யளவிலின்பம் பொருந்தி
நிரைமுன மேய்த்தவன் கோயிற் சபாமண்டபத்தி
னின்றரி கீர்த்தனம்பாடி நிகழ் நடனமாடி. (௩௩௪)

காமதேவொடு ஞானதேவாதி நல்லோர்
நவின்றசாயித்தியம் ராமாயணம் பாரதமென்
றுமதாகிய முத்திக்கடைவான கிரந்த
மனைத்துஞ் சேகரித்துக் கொண்டந்தப் பாண்டார
வாமவரை தனிலேறி யிருந்துகொண்டு நாளு
மனனஞ்செய் துவந்தனர் மற்றவர் மனைவி தினந்தோ
றேமவரைக்கணுகி ரொட்டிசுரைக்குடுவை நீர்தந்
தினிதருத்திப் பின்பகத்துக்கெய்தி யுண்பதியல்லே. (ாகுச)

வேறு

ஆயவர் வருந்தி முன் விசுவம்பரர் கடவுளாகத்
தேய்வறு குலத்தை நாசஞ்செய் கருங்குறளன்றன்னை
எய்வுற விவ்வூர் வைத்தாரி வனிலென் கணவருக்கு
மாய்வறு பித்தங்கொண்டு மயங்குதலாகி நாளும். (ாகுரு)

இடைவிடாத வன்றன்னும மிசைத்தனர் திரிதலாலென்
னுடைமை கண்முழுதுந் தோற்றேனுணவு மிலாமலுறும்
நடையுறு மக்கடாமு நலிவுறும்படி நன்றாக
அடையுமென் குடும்பமெல்லா மயர்வுறலாயிற்றுந்தோ (ாகுரு)

இப்படிக்கியற்றி நின்ற விவனையுந்தெய்வ மென்றியாம்
எப்படிக்கருது கின்ற திளிக்கணுலும் பாபபாகா
தொப்பறப் பகலெல்லாங்காடுலைந்திடை யிரவில்
மைப்படிக் கியல்வோன் கோயில்வந்து வைகறையாமட்டும். (ாகுஎ)

கூத்தியல் கின்ற கொண்கர் குலம்வந்து புகிப்பதின்றி
ஏத்தினர் வரையிலேறி யிருத்தலாற்றினந் தோறேக
வாய்த்தது கால்கணுந்து வருந்தினேனி னியெய்வாறு
மாத்திரள் வரையிலேற மாட்டுவேனென வருந்தி. (ாகுஅ)

அப்பமு நீருங்கொண்டங்கணு குழிவெயிலில் வாடி
வெப்ப முற்றடிகணுந்து விரைவுறச் செல்லும்போதோர்
சர்ப்பவள்ளையிறு போலத்தைக்கவோர் கூர்முட்காலில
வைப்பதில் வருந்தி வீழக்குடுவை நீர் கவிழ்ந்து வாராந. (ாகுகூ)

மயங்கி மெய்மறந்து சற்றுநேரம் வாய்ந்ததன் பின்றேறி
உயங்கி காலை நோக்கவுதிர நீர் பெருகலாகத்
தியங்கியம் முள்ளை யீர்க்கச்செறிந்து வாராமையாலூர்
தயங்கிய கரியகுள்ளன் சுமைத்த தென்றுளத்திலோர்ந்து. (ாஎம)

முன்பந்தக் கரியகுள்ளன்றனக்கியான் முடித்த தென்னோ
வன்பு கொண்டிவ்வாறெல்லாம் வருக்கின்றுனெனக்கென் செய்கேன்
என்பனவுரைத்துச் சாலவினை வுழியிரங்கிக்கண்ணன்
தன்படிவத் தோடங்குச் சார்ந்தனன் சாரக்கண்டு. (ாஎக)

இவனிங்கேன் வருகின்றான் மற்றிவன்முக நோக்கலாகா
தவனியிலென்று வாராவத்திசை முகந்திரும்ப
நவனிதக்கள் வனந்தத்திசை முனு நண்ணக்கண்டு
புவனியில் வேறோர் திக்கை நோக்கவு மங்கும் போந்தான். (ாஎஉ)

எங்கும் வந்துறுகின்றனென்றினை விழியிருக்கூட
அங்குளந்தனிலுந் தோன்ற வறிந்து நான் வேண்டேனுகப்
பொங்குறு வயிரங்கொண்டு போந்தென்னை வருத்துகின்றான்
கங்குலினிறத்தானென்று கருதி நிந்திக்கலாக. (௩௭௯)

அம்மனுயென்று கூயங்கருகில் வந்தருளின்வள்ளல்
செம்மலிவ்வளவில் கோபஞ்செய்வதேனென் மேலென்று
விம்மவட்கினிமை கூறி வெறுத்திடேலென்றுட்காந்து
கம்மலரன்ன வன்னுள் காலைத்தன்றுடை மீதேற்றி. (௩௭௪)

அணுவள வேனுந்துன்ப மின்றியம்முள்ளை வாங்கி
நணுகருட் கண்ணுலேனுக்க நங்கைதன்றுன்ப நீங்கி
எணுளுறை பவனை நன்று யெதிருற நோக்கி நின்னை
நுணுகறி வகத்துக்கொண்ட நோன்பினென் கணவரின்னும். (௩௭௫)

உண்டியில்லாமலுற்று ஊங்கியான் செல்கின்றேனென்
றெண்டி ருமாலுக் கோதியே கப்பினெம்பிரானும்
அண்டினன் செல்ல வோங்கலமர் துகாராமசாமி
கண்டிருவரையு நீருங்கனலுஞ் சேர்ந்துறுதல் போலும் (௩௭௬)

நண்ணருமமுது நஞ்சு நணுகி நண்ணுவதுபோலும்
கண்ணனும் ஜிஜாயிதானுங் கலந்துறுகின்ற தென்றங்
கெண்ணதி சயித்திருக்க விருவரு மருகுசார
வண்ண நன்முகிலின் பாதம் வணங்கினர் நிற்கவள்ளல். (௩௭௭)

தழுவினன் மகிழ்ந்து பேசத்தரு துகாராமசாமி
வழுவலின் மனையை நோக்கி மருவுவிட்டலனுக் கன்னம்
பழுதறப் படைத்தி யென்னப் பரிந்தப்பமொன்றை யெங்ஙன்
குழுவிருவருக்கு முண்ணக் கொடுப்ப தென்றிலச்சை கொண்டு. (௩௭௮)

கணவருண் கின்றதின்மண் கலக்கவிக்கரிய குள்ளன்
அணவினன் வயிறுசால நிரம்பினனுக வந்தோ
இணர்விரி துளவினுனுக் கென்பசி யொருவனேனும்
உணவயிற்றுக்குப் போதாதோரப்ப மெனவுள் ளெண்ணி. (௩௭௯)

அச்சுதன் முன்னர்வைக்கவ மலனுண்டவள் கலத்தில்
மெய்ச்சு நல்லன்னவர்க் கமிக நிறைத்தாடைமூடி
வைச்சனன் துகாராம் சாமிவாய்ந்துணச்சி ஜாயியென்பாள்
இச்சையிற் கலத்தினுடையே தெனத்திறந்து பார்த்தாள். (௩௮௦)

பலவகைச் சுவைசெயன்னம் பாத்திரத்திருத்தல் கண்டென்
குலதெய்வங் கொழுநற்காக வமைத்த தென்றுளத்திற்கொண்டு
நலதிழை கண்டேராவோ பவானியோ நன்மைசெய்ய
வலபயிரவனே வித்தவகை செய்த தெனவணங்க. (௩௮௧)

நீவணங்குகின்ற தெய்வமேதது நானே நின்முன்
ஆவன கலத்திலாக வமைத்தன னென்ன வையன்
மேவல் செய்யாளா யன்னமேவிரு வருக்கு நல்க
ஓவறவுண்டார் நன்னீ ருணச்சுத்தமு ஞற்றவேட்டார். (௩௮௨)

மலையினீ ரெங்குமில்லாவகை தெரிந்து துவும் வள்ளல்
உலைவி லீயிங் கேகையாற் றோண்டி னீரூறு மென்றான்
அலைவி லாதையன் காட்டுமவ்விடத் தகழ்ந்தாள் கையால்
தொலைவி லீரூறக்கண்டு வியந்தன டோகைபோல்வாள். (௩அ௯)

வெறுங் கலத்தன்ன மேவப்புரிந்த வளிவனே மெய்யாம்
உறுங்கருங் குறளன் மாயமந்திரமு ஞற்றவல்லன்
பெறுங் கணவனாயும் பிச்சேற்றி னன்றன் கைவசமும் பெய்தான்
இறுங் கவளவையுங் கொண்டா னென்னிவன் செய்கை யென்று. (௩அ௰)

சுரந்தநீர் கொடுவந்துண்ணக் கால்கைகள்சுத்தி செய்யத்
தரந்தர நல்கிப்பின்பு தானுநல்லன்ன முணடாள்
நிரந்தரந் தனைப்பஜிக்கு நிமலனா நோக்கி நீண்டு
பரந்த வெற்புறிற் சிஜாயி படர்மிகும் வந்துமீள. (௩அ௱)

இன்று தொட்டினி யிவ்வெற் பிலிருந்திடே லெனமால் சொல்லத்
துன்றுபொற்பதம் வணங்குந் துகாராமர் தமைத்தழீஇ மால்
சென்றுறு கோயில்சேர்ந்தான் சிஜாயி யோடினிது தம்மூர்
ஒன்றுறலாகி மால்பே ரொழிகில ருராத்திருந்தார். (௩அ௨)

வேறு.

சாதுக்கள் சேவைசெய்து சகலதீர்த்தங்களுஞ் சாதுக்கள் பாதப்
போதுற்ற தீர்த்தமெனப பூனைந்தாடிச் சாதுக்கள் புகழ்தலாகி
மீதுற்ற தீர்த்தனங்கள் கேட்கவருவோ ரங்குவிடு செருப்பை
மூதுற்றோர் போம்போது முன்னெடுத்து வைத்தடியின் முடிவணங்கி. (௩அ௩)

உத்தம மிக்குறு குணங்களுடையராய்த்தயை சாந்தியுளத்தின் மேவும்
வித்தகராய் வருநாளி லொருநாள் வாழ்மனையின் வெளித்திண்ணை மேவி
நத்தமருஞ் செங்கரத்தா ளமைநவின்றிருக் கமனை நண்ணும்பாரி
சுத்தமுறத்துகி லுரிந்தோர் சுவரில் வைத்து நீராடத் துகாராம் சாமி. (௩அ௪)

பக்கலிலோ ரேழைப்பார்ப் பனிவந்தெற் குடுத்தவொரு படாமு மின்றி
மிக்கது யருறுகின்றேன் மானங் காப்பாற்ற மடிவேண்டுந் தந்தாற்
றக்க பலனுமக் குண்டு தருகென் னச்சுவரில் வைத்ததானை தன்னைக்
கைக்கவர்தி யென்றவட்குக் கண்காட்டப் பார்ப்பனியுங் கைக்கொண்டாளாய்.

உம்புண்ணியத்தினுக் கோரள வில்லையுருக்குமணிவர னுமக்கு
நம்புந் தண்ணளி புரிவானனி யென்னக் கூவாமனங் காய்போதி
வெம்புந் துன்பற வென்று குறிப்பித்து விளாந்தேக விடுத்து வேணி
பம்புந் தண்புனலாடிக் கரையிலிருந்தரி நாமம் பஜித்திருந்தார். (௩கஉ)

ஈங்கவர் தமனைவி யுடனீராடி யுடுத்த மடியிடத்தைப் பார்க்க
ஆங்கவணில்லா ததுகண்டறத் திகைத்தென் கருமத்தை யார்க்குச் சொல்வேன்
தாங்கவறு மோராடை தனையு மெவரோ கொண்டு சார்ந்தார் வீட்டின்
பாங்கர் பணிபுரியும்பு ப்பாயுஞ் சாணங்கொண்டு படர்வான் போனாள் (௩கக)

பெரியமகனான மகாதேவன் பின்னவனான விடோபாவோடு
தெரியாதநீராடச் சென்றான் காசிபாயி பரேதி கங்காமூ
வரியலு கின்றனர் வாசற்புறத்திருக்க வெவர்கொண்டு மறைந்தாரோ வென்
றரியுறுன்பத் துடனிளைச்சலிடும் போதிற்றூது லாவயல் வீடுள்ளான். (௩கஉ)

அவ்விரைச்சல் கேட்டுச் சிஜாயிகேட்கும் படியந்தணி யொருத்தி
செவ்விதிற்றா னுடுத்திட வஸ்திரமில்லை யென்றுரைக்கச் செவியிற்கேட்டேன்
எவ்விதமாய்ப் போயிற்றோ வென்றனன் மற்றதுகேட்டுச் சிஜாயிபித்து
வவ்வியவென் னையகரே யார்க்கேனுங் கொடுத்திருப்பார் மற்றிலென்று. (௧௧௬)

வருந்துறு போதிடைச் சம்பந்தி கடங்கண்மனை நடக்கு மணத்தைச் சொல்லப்
பொருந்தினர் ஜிஜாயி ஜிஜாயீ யெனக் கூய்க்கொண்டு புகுந்தன ரவ்வார்த்தை
திருந்துறக் கேட்டுத் தனது மானரக்ஷணைக் காகச்சிந்தை செய்தாள்
அருந்துயருஞ் சினமுமிகுததுத் தத்தளிக்க வுருக்குமணி யாய்ந்து. (௧௧௪)

தனக்குரிய தானபழந் தானைதனை யெடுத்த வடன்றலை மேலிட்டாள்
மனத்தளுர்கொள் ஜிஜாயிகண்டு வியந்திதுதா மானிடர் வஸ்திர மன்றநந்தக்
கனத்தகரு நிறக்குறும்பன் செய்கையென்று நிச்சயித்துக் காத்தான்மானம்
இனத்தவர்மு னென்று மகிழ்ந்தந்த வஸ்திரத்தை யுடுத்திடையிற் புக்காள்(௧௧௫)

அந்தவஸ்திரத்தி னெளி வீடெல்லாங் காந்திசெய வடைந்தோர்கண்டு
முந்தலியந்தனர் மணத்தை மொழிந்து போயினர்பின்பு துகாராம்சாமி
நந்தமனைக் கேகின்மிகக் கோபிப்பாள் ஜிஜாயியென நண்ணுறுமல்
கந்தமலர்க் கான்புகுந்தார் கண்ணனடி கருதியிராக் கடிகைநான்கும். (௧௧௬)

சென்றபின்பு கோயில்வந்து விடோபாவைச் சேவித்துச் செங்கைகூப்பி
நின்றுவெண் கற்கைக் கொண்டுதாள மெனமானுமை நிகழ்த்தலானுர்
ஒன்றுமவர் குரற்கேட்டு மகள்கயிலபபங் கீரையுதவி யுய்த்தாள்
அன்றவர் துய்த்தரிநாமம் பழம்படியே பஜித்து ருந்தா ரானபோது. (௧௧௭)

துயின் மேவக்கண்க சக்கிக்கொடு பாடப்பின்னு மிக்கனுக்கமேவப்
பயிலிதென்ன சங்கடமென் றுன்னினர்தங் குடுமிதனிற் பாசம்வீக்கி
வெயின்மணித்தூண மிசைப் பிணித்து விடிவளவுந் தூங்காமல் விமலநாமம்
குயிலுதலோ நான்கிர விற் றுயில்சோம்பு கூடாமற்குறைத்து நாளும். (௧௧௮)

யாத்திரைசெல் வோருக்குக் கால்பிடிப்பாரரிநாம மியம்புவோர்க்கு
வோர்த்திடிற்கை விசிறிகொண்டு வீசுவரங் கவாசொல்லும் வேலைசெய்வார்
சீர்த்தவெயிற் காலத்தில் வழிநடப்போர்க்குத் தாகந்தீர்ப்பாரந்த
ஊர்த்திறதுதி லெவரேது சொல்லினுமப்படி மகிழவுளுற்று கிற்பார் (௧௧௯)

இன்னபடி வருநாளி லொருகிழவேதியன் றடியூன்றிக் கொண்டோர்நாள்
மன்னுசிரமத்துடனே வீதிவழிவரக்கண்டு மனம்பொருராய்த்
துன்னுமவனிடைச் சென்று துயவரே நீர்நடக்கத் துயர் கூர்கின்றீர்
என்னதொரு முதுகிலேறிக் கொள்ளுநீர் மேவுமிடங் கொண்டுய்ப்பேன். (௨௦)

என்றலுமவ் வேதியனுன் விளக்கு நெய்வாங்கப் போகின்றே னென்றோத
நன்றுமதிற் கேகுமெனப் பணத்தையும் பாத்திரத்தினையு நல்கக் கொண்டு
துன்றுகடைக்கு வந்ததனைக் கொண்டு மறையோன் வீடுதுன்னித் தந்தார்
சென்றசிலநாட்குப்பினைக் கிழவேதிய னுரார் தெரியச்சொல்வான். (௨௧)

எட்டுநாளைக்கு வருநான்வாங்கும் விளக்கு நெய்யிந்தத் துகாராம்
கிட்டிவாங்கித் தந்தநெய் பலநாட்காய திதுகிளர்வியப்பு
மட்டிலென வதுதெரிவான் மற்றொருவனும் மவரால் வாங்கித் தேர்ந்து
முட்டில் வியப்பினனுக யாருமவரால் வாங்கமுயல் வுதாகி (௨௨

பாத்திரமும் பணமுந்தந்தனராகத் துகாராமர் பரிவிற்கொண்டு
போய்த்தருக வெனவணிகன் முன்பரப்பிப்பாத்திரத்தைப் பொருளுநல்கச்
சீர்த்தவணிகன் றெரிந்தெப்பாத்திரத்தி லெவ்வளவு செறிப்பதென்னத்
தீர்த்தரந்தவகைதெரியாதுனக்குத்தோற்றினபடியேசெறித்தியெனறார். (உ௩௯)

வணிகனகைத்தவர் கொடுத்தபொருளுக்குத் தக்கபடி வழுவுறாமல்
அணியின் வைத்தபாத்திரங்க ளனைத்தினு நெய்தோற்றினவாறுபெய்தான்
மணிநிறத்தான்றாசரந்தப்பாத்திரங் கடமிலுள நெய்வழிவறாமல்
திணிசுருக்கிட்டொருகோலிற்செறித்துத்தோளிடைத்தாங்கிச்செல்லலானார் ( )

அவரவர் தாந்தரு பொருளுக்கமைவாக வவர்பாத்திரத்தி னெய்தான்
கவர்கில னென்றவ ரவரு மொப்பும் வகை கலறுறநெய் கண்ணன் செய்தான்
இவரு மவரிடைச் செல்ல வவரவருந் தங்கலந் தேர்ந்தினிது கொண்டார்
உவர் பரமன் கோயிலுக்கு வந்தரி நாமம் புனைந்து குறைவதானார். (உ௩௫)

இத்திறத்தூரா ரெல்லாந் தன்பதி பாற்றினந் தினமூழியங் கொள்கின்ற
அத்திறம் ஜிஜாயிதெரிந்தென்பயித்தியகாரபதி யாலேவேலை
நித்தலுங் கொள்கின்றதன்றியோ ருத்தின் சுமைதாங்க நிரப்புகின்றார்
தத்தமக்கேற்றபடி யெனவிளாந்து வைதறனைக் கேட்டுத்தையலார்கள். (உ௩௬)

உனதுபதியாரிடத்து மூழியஞ்செய்வதற் கொப்புமுதனுலன்றோ
மனதொரு மித்தவரி டத்தூழியங் கொள்கின்றாரதற்கு வையலாமோ
எனலுமதனைக் கேட்டுச் சிஜாயிநீர் சொல்லுவது மியல்பேயென்று
தனதுமனம் பொறுத்திருந்தாள் பின்பொருநாட்ஜிஜாயி துகாராமசாமி. (உ௩எ)

முகநோக்கி யுமதுபிதாத் தனக்கின்று புண்யதிதி முடிப்பசற்குத்
தகவான தொன்றுமில்லை யென் செய்வதென் றுரைக்குமது தன்னை கேட்டு
மிகயான் போய் வனத்தடகு பறித்து வந்து தருகின்றேன் வேகவைத்துத்
தொகலான பிதுர்க்களுக்குத் திருத்திசெய்கென்றரிநாமந்துதித்துச்சென்றார். ( )

அவ்வயினோர் கொல்லைதனிற் பயிரிட்டு விளைந்த கோதுமை யறுத்துச்
செவ்வை செய்வோன் றுகாராமர் வரக்கண்டு நீயுங்கொய்சேர்ந்தெனமோத
ஒவ்வினராய்க் கூலியாளுடன் சேர்ந்துவிட் டலனையுளங் கொண்டுற்ற
கௌவை மறந்தறத்துக் கொண்டிருக்க வவர்தங்கணவி காலுளாகி. (உ௩௯)

சிறிவைது கொண்டிருக்கப் பாண்டுரங்கன் றுகாராம ராகிச்சென்று
மாறிறிதிக் கானவெல்லா மூட்டைசெய்து தலைமீது வைத்துக்கொண்டு
தேறும்வகை மனைபுகுந்து ஜிஜாயிடைத் தந்துநீ சிக்கிரத்திற்
சோறுகறி சமைத்தியெனச் சொல்லியுடன் கடைநோக்கித் துன்னினானால். ( )

தருமூட்டை தனையவிழ்த்து நோக்கவதில் வேண்டுவன சமைதல்கண்டு
கருதுளத்திற் களிதூங்க நானஞ்செய் துடனடற்குக் கடுகலானாள்
மருவுகடைக்குப்போனேன் பாத்திரமும் வஸ்திரமும் வகைந்துகொண்டு
தெருவுதொறுஞ் சென்றுறவோர்க் கின்றுதிதிவருகவெனச் செப்பக்கேட்டோர்.

யாவருமங் கதிசயித்துத் துகாராம னின்றுதான கக்குடும்பம்
மேவலுற லாயினுனெனக் களித்தாராய் மேவ விரைந்துவந்தோர்க்
காவலுட னுபசரித்தாசனங்கொடுத்துப் பூசித்துங் கமரச்செய்து
தாவறு புரோகிதரும் வரவிருத்திப் பலித்திரமுந் தரித்துக்கொண்டு. (உ௧௨)

வேதவிதி வழுவாமற் றிதிமுடித்தா யினபின்பு மெவமுற்றோர்க்
காதரவோ டிலையிலறு சுவையன்னம் படைத்துச் சங்கற்பதிர்த்தம்
மேதகவிட் டெல்லோருந் திருத்தியுடன் சாப்பிடுமா விரும்பிச்செய்து
பாதமத்தஞ் சுத்திசெய்யப் பாணிதந்தா யினபின்பு பதியிருத்தி. (௨௧௫)

சந்தனம் புஷ்பந் தாம்பூலந்தந்தான் ஜிஜாயிமுகந் தன்னைநோக்கி [டான்
வந்தவர் ளினிக் குடும்பச்சுமையுனக்கென் றெவையுமுன்றன் மனுளன்கொண்
முந்தவெ ா ா ரதுகேட்டுச் ஜிஜாயியுந்தன் மனத்துவகை முதிர்வதாகி
இந்தவை மபிக்கையில்லையெனக் கென்றுசொல்ல வெழிலிவண்ணன் (௨௧௪

மற்றுமவந்த யாசகர்க்குச் சோறிட்டுச் சமையல்செய்ய வாங்கிவந்த
பற்றுளபாத ரிரங்களெல்லாஞ் சுத்திசெய்தங் கவரவர்பாற் படுத்திவந்து
துற்றுவன் போனகமென்று சொன்னபடியேசேர்த்துத் தோன்றுனுனன்
நற்றுறு கோதுமையறுத்தோர்க்குக் கூலிநா ளரிகை நல்லப்பெற்றார். (௨௧௬)

பெற்றதட னுடம்பெல்லாந் தூளிமொய்க்க மனைக்குவந்து பெறுகென்றீந்து
மற்றிதுகொண் டுறுபிதிர்ச்சுத் திருத்திசெய்கென் றிலைலாட்சு வகுக்கக்கேட்டு
முற்றினிருந் தாதை திதியிங் கிருந்தன்னமு மிட்டீர் முந்திஞேர்க்குச்
சொற்றவிது பயித்தியமோ தூளிமொய்க்கச் சுமைசுமந்தீர் சொல்லுமென்றான். (௨௧௭)

வினவுதுகா ராம்சாமி திவைத்துவிழி நீர்பெருக விட்டலாசீர்
அனகபத்த பாலனக ருணகிதேநீ வந்தென் னகத்துண்மேவி
எனதுபிதாத் திதிமுடித் தீடேற்றிட யான்செய்த தவமேதோவென்று
மனதிளகி யுடனிருந்திங் குண்ணுமற் போனதற்கு வருந்தலானார். (௨௧௮)

நீவந்தென்னுட னுண்டாலன்றி யுண்ணேனென் றிருக்கநிமலன் றேர்ந்து
மேவுந்தன்னுருக் கொண்டு கிரிடகுண்டலங்க ளுடன் விளங்கக்கண்டு
கோவிந்தா வெவணங்கிச் சுவாமியுந்தந் நடுவிருக்கக் ஜிஜாயிகூடத்
தேவுந்தம்முட னுண்ணவுண்டு மகிழ்கொண்டு மனந்திருத்தி யானார். (௨௧௯)

திருந்துதன தடியவரைத்தழுவி விடோபாத்தனது கோயில்சேர்ந்தான்
பொருந்து துகாராம் சாமிஹரி நாமமிடைவிடார் புகல்வாராகி
இருந்துவரு நாளொருநா ளிரவில் விடோபா வவர்முன் னெதிர்ந்துநோக்கி
அருந்துதிசெய் நாமதேவாய் நீமுன்னவ தரித்தவக் காலத்தில். (௨௧௧)

சதகோடி கிரந்தஞ் செய்கிறே னென்றென் மேஃி நிச்சயித்துச் செய்போ
துதவியாய் விரைந்தெழுத வொருவருமின்றென்று நான்வரைந் தேனன்றோ
அதனிலஞ்சு கோடியே யைம்பத்தோ ரிலக்கமுள குறையதாக
இதமுடனே யின்றுதொட்டுக் கவிசெய்கென் றருளநன்றென் றிறைஞ்சிநிற்க. (௨௧௨)

கருணையார் கலிகடாக்ஷித் தாலிங்கனஞ் செய்து கரக்கச்சால
அருள்பெறுதுகா ராமசாமி வேதவியாசரந் நாட்சொன்ன
பெருமைபெறு பாகவதத்திற் றசமஸ் கந்தத்திற் பின்னைகேள்வன்
மருவியபா லக்கீடை களைப்பிரா கிருதத்தில் வினவுதாக. (௨௨௩)

கவிகள்செய்து மிடைவிடாதரி நாமம்புகன்று மரிதினங் கலந்தால்
சவியசுடர் மறைந்தவுடன் ஜாம நான்கிலு மரிகீர்த்தனங்கள்செய்தும்
புலியிலவர் புகழ்விளங்கச் சிஞ்சுவடி மம்பாஜி பாவா வென்போன்
குவிவறுசீர் தேகுவுக்குக் கோசாயிப் பிராமணனுய்க் குறுகியாங்கே. (௨௨௨)

மடங்கட்டித் தனது குடும்பத்தொடு மாணுக்கரொடு மன்னுகின்றோன்
